JUDE
www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜூன் 20-26,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 314

# புலிகளின் ஆயுதப் பயிற்சியில் போர் ஆண்டு முதியவர்கள்

## திசை திருப்பும் போராட்டங்கள்!



## கமலின் நாயகி கலக்கல் ராணி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உற்பத்தி செய்தது யார்?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வீரவிதான இயக்கம்,
பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம்
போன்ற பெயர்களில்
பௌத்த பேரினவாதம்
நாடெங்கும் நச்சுத் தீயாக
பரவி வருகிறது!

ஆளும் தரப்பு
எதிர்த் தரப்பு இரண்டும்
இவற்றின் வளர்ச்சியோடு
சம்பந்தப்பட்டுள்ளன!

வீரவிதான இயக்கம்
சக்திமிக்க அமைச்சர் ஒருவரது
பின்பலத்துடனேயே
செயற்பட்டு வருகிறது!
மலையகத்தில்
தன் சக்தியைக் காட்ட
விருப்பார்வம் கொண்டுள்ள
அந்த அமைச்சர்தான்
இ.தொ.காவுக்கு எதிராகவும்
அதனைத் தூண்டிவிட்டிருந்தார்.

அரசுடன் ஒட்டியிருப்பதால்
இ.தொ.காவுக்கு
மெல்லவும் முடியவில்லை,
விழுங்கவும் முடியவில்லை!
அதனால்தான்–
வெளியே உண்மையைச்
சொல்லவும் முடியவில்லை!

அமைச்சர் தொண்டா
ஆட்சியில் பங்காளி!

தமிழ் பேசும் தரப்புக்கு
எதிரான
அவசரகாலச் சட்டம் உட்பட
அரசின் திட்டங்களுக்கும்
ஆதரவளித்தே வருகிறார்!

ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்காத
கொழும்பு தமிழ் வாக்காளர்களை
'சுய நல வாதிகள்' என்று
வார்த்தைகளால் சுட்டவரும்
அமைச்சர் தொண்டாதான்!

அவ்வாறாகப்பட்டவரின்
கட்சி அலுவலகம்தான்
தாக்கப்பட்டுள்ளது!
கட்சிக் கொடி
கிழித்தெறியப்பட்டுள்ளது!

இது மிகப் பாரிய
அத்துமீறல்!

தமது அமைச்சரவை
சகாவின் கட்சிக்கு
விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை
கண்டித்துப் பேச
ஒரு அமைச்சர்கூட
முன் வரவில்லையே!

வெறுமனே
காற்றிலே கத்தி வீசுவது
போன்று
இனவாதத்தை முறியடிப்போம்
என ஜனாதிபதி முதல் அமைச்சர்கள்வரை
பேசி வருகின்றனர்!

நேரடியாக வீரவிதான
இயக்கத்தை கண்டிக்க
யாருமே துணியவில்லையே!

சிங்களக் கமிஷன்,
பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம்,
வீரவிதான போன்றவை
இன்றைய ஆட்சியாளரின்
காலத்தில்தான் உருவானவை!

தீர்வுப் பொதி என்று
காலம் கடத்த
நாடெங்கும் விவாதத்தை
ஆரம்பித்து வைத்தனர்
இன்றைய ஆட்சியாளர்கள்!

பொதி விவாதம்
என்ற பெயரில்,
தமிழர்களுக்கு எதிரான
இனவாதக் கருத்துகள்
சிங்கள வெகுஜன ஊடகங்களில்
வெளியிடப்பட்டு வந்தன!

அவற்றைத் தடுக்குமாறு
நாமெல்லாம் கோரியதை
ஆட்சியாளர் செவிமடுக்கவில்லை!

அந்த விவாதங்களின்
தொடர்ச்சியாகவே
'சிங்களக் கமிஷன்' உருவாகியது!

இப்போது பொதி
செத்துப் போய்விட்டது!
ஆனால் அந்தப் பொதியின்
பெயரால் நடந்த இனவாத
விவாதப் பொறிகள்
காட்டுத் தீயாக மாறி
பரவிக் கொண்டிருக்கின்றன!

யுத்த வெற்றியை
நம்பியுள்ள ஆட்சியாளர்கள்
செய்து வரும் பிரசாரங்களே
பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம்
போன்றவற்றுக்கு உரமிட்டுள்ளன!

வீரவிதான இயக்கமும்
அரசியல் தீர்வு இழுத்தடிப்பு
இராணுவத் தீர்வு முனைப்பு
போன்றவற்றால்
உருவாகியுள்ள சூழலின்
உற்பத்தியேயாகும்!

இவற்றையெல்லாம் நோக்காது
சில தமிழ்க் கட்சிகள்
'வீரவிதான' பற்றி
அரசிடமே முறையிட்டுள்ளன!

பேரினவாத ஊர்வலங்களுக்கு
தடை விதிக்காத அரசு
பேரினவாதத்துக்கு
எதிரான பேரணிக்கு
அவசரகால சட்டத்தின்கீழ்
தடை போட்டிருக்கிறது!

இதன் பின்னரும்
தமிழ்க் கட்சிகள்
திருந்தவில்லையானால்
தமிழ் மக்களும் இவர்களுக்காக
வருந்தப் போவதில்லை!

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## பரமஹம்சரின் போதனை

பிறக்கும்போது யாருமே இந்துவாகவோ, கிறிஸ்தவனாகவோ அல்லது முஸ்லிமாகவோ பிறப்பதில்லை. பிறந்த பின்னரே பெற்றோர்கள் எம்மதமோ பிள்ளைகளும் அம்மதத்தைப் பின்பற்றி வாழுகின்றனர்.

எல்லா மதத் தத்துவமும் ஒன்றுதான். ஆனால் இதை யாரும் அறிவதில்லை. அவரவருக்கு அவரவர் மதம் பெரியது. மதத்தை இழிவுபடுத்தவோ அல்லது அவதூறு கூறுதலோ பாவப்பட்ட செயலாகும்.

கோயில்களில் மணியோசையுடன் பூசை நடக்கும்போதுகூட குழப்படிகள் செய்வதுண்டு. காலந்தோறும் மெய்யடியார்கள் தோன்றி இந்து மதத்தின் உயிராற்றலை உறுதிப்படுத்தி வந்துள்ளனர். அந்த மெய்யடியார் பரம்பரையில் வந்த ஞானியான ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறியது "சமயம் மனிதனில் உள்ள தெய்வத் தன்மையைத் தூண்டிவிட வேண்டும். அவனைச் சன் மார்க்கத்திற்கு செலுத்த வேண்டும். சகோதர தன்மையை வளர்க்க வேண்டும். பிற மதங்களிடம் வெறுப்பு ஏற்படக்கூடாது. அவற்றை மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். உண்மை ஒன்றே! இதை மனதிலிறுத்துவோம்!

தொகுப்பு: செல்வி ஜெயந்தி சிதம்பரம்.

## ஷைத்தானின் மூன்று முடிச்சுக்கள்

மனிதன் இரவில் தூங்கும்போது ஷைத்தான் அவனது மூக்கின் சுவாச வழியில் பொழுதைக் கழிக்கிறான். நீங்கள் தூயில் கொண்டு எழுந்து பிறகு ஒழுச் செய்ய நாடினால், மூக்கில் மூன்று முறை தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்யுங்கள். ஏனெனில் ஷைத்தான் உங்களின் மூக்கின் சுவாச வழியில் இரவுப் பொழுதைக் கழிக்கிறான்.

தூங்கும்போது உங்களில் ஒவ்வொருவரின் தலையின் இறுதிப் பகுதியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போட்டு விடுகிறான். ஒவ்வொரு முடிச்சின் மூலமும் இரவு இன்னும் நீளமாக இருக்கிறது, நன்கு நித்திரை கொள்! என்று போதிக்கிறான். எனவே அவன் கண்விழித்து உடனே அல்லாஹ்வை திக்ரு செய்தால் ஒரு முடிச்சு அவிழ்ந்து விடுகிறது. பிறகு அவன் ஒழுச் செய்தால், அடுத்த முடிச்சும் அவிழ்ந்து விடுகிறது. பிறகு தொழுது விட்டால், மூன்றாம் முடிச்சும் அவிழ்ந்து விடுகிறது. அவன் காலையில் மகிழ்வும், உற்சாகமும் பொங்க எழுந்திருக்கிறான். இல்லையெனில், ஷைத்தானின் துர்க்குணம் அவனுக்கு இருக்க, சோம்பலுடன் காலையில் எழுந்திருக்கிறான்.

(அறிவிப்பவர்: அபூஹுரைரா ரலி), நூல்:- மிஷ்காத்.

தொகுப்பு:வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல. 311

### பரிசுக்குரிய கவிதை

### மது மாதா!

"மது" ஆறுதலும்
மட்டம் தட்டியாச்சு!
இனி எங்கே ஆறுவது..?
"மாதா"வே! சொல்லுமம்மா!

கயல்வண்ணன்–வவுனியா.



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### மிதிப்பதால் உதிக்குமா..?

மிதியடா மகனே மிதி–
நீ–
மிதிப்பதாலாவது உதிக்குமா
நாளை நமக்கோர் சூரியன்(?)
பாப்போம்...

எம்.இஸ்ஸத்-ஏறாவூர்.

### புளுகுப் பொதி

மிதி! மிதி!
பொதி! பொதி!
புதிதாய் தூசுதட்டிய
புளுகுப் பொதி!
மிதி! மிதி!
அழுந்தி மிதி!

த.மணிமேகலை-
ஹட்டன்.

### ஏக்கம்

இந்தப் பொதிகளால்
உங்கள் நிகழ்காலம்!
எங்கள் எதிர்காலம்
எந்தப் பொதியிலோ?

ரவீந்திரநாத் அரவிந்தன்-
அக்கரைப்பற்று-08.

### சதி

இனி ஒரு சதி செய்வோம்!
ஏமாந்த தமிழர் தலையில்
ஏற்றி வைப்போம் இப்பொதியை.

எஸ்.சிவசாமி செல்வராஜ்-
பூண்டுலோயா.

### மன உறுதி

'யானை'யின்
ஆட்சியில்
அகதிகள்!
'அம்மையாரின்'
ஆட்சியில்
அனாதைகள்!
என்றாலும் நாங்கள்
வாழப் பயந்தவர்களல்ல!!

அ.அச்சுதன்-சேனையூர், மூதூர்.

### போதாது...!

சேய் மிதித்து
தாய் தள்ளி
சுமை இறக்கி
பெறும் கூலி
கால் வயிற்றுக்
கஞ்சிக்குப் போதுமோ?

அ.சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

## கவிதைப் போட்டி இல.314



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.06.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.314
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### மாறாத சோகங்கள்!

துயரங்கள் இல்லாமல்
வாழ்கின்ற காலங்கள்
சுரைந்து மாதங்களே!
பார் மீது
நீ வாழும் காலங்கள்
எல்லாமே
மாறாத சோகங்களே!

ந.சிவா-இலண்டன்.

### வாழ்வினில்

சொந்தமில்லா வாழ்க்கையிலே
சுமப்பதற்கு யாருமில்லை
பள்ளி செல்லும் வயதினிலே
பாலன் அவன் சுமக்கின்றான்.

தெ.லோஜனா, கொழும்பு-15.

### முயல்வோம்–முன்னேறுவோம்!

உறவுமில்லை-ஊருமில்லை.
உட்கார - இடமுமில்லை.
உடமையெல்லாம் வண்டியிலே,
மலையளவு சுமையானாலும்
மனத்துணிவு நமக்குண்டு!

ம.ஞானராஜா-"மனோரகம்",
வாழைச்சேனை.

# வாசக(ர்)சாலை





## அரசை எதிர்த்து குரல்கொடுக்கவில்லை

அன்புள்ள ஆசிரியருக்கு;

இன்றைய அரசின்மீது எதிர்ப்புக் காட்ட முடியாத தமிழ்க்கட்சிகள், பாம்புக்கு தலையும், மீனுக்கு வாலும் காட்டுவதற் கொப்பான போராட்டங்களை நடத்துகின்றன. இவைகூட வாக்கு வேட்டைக்காகத் தான். மக்களையும் ஏமாற்றி, அரசையும் திருப்திப்படுத்தி அரசியல் வியாபாரம் செய்கின்றனர். வவுனியாவில் நடந்த ஊர்வலம் ஒன்று தொடர்பாக நக்கீரன் பாராட்டி இருக்கிறார். அது தவறானது. அந்த ஊர்வலத்தில் படைக்கோ, அரசுக்கோ, அம்மையாருக்கோ எதிராகவோ கோஷம் எதுவும் இடம்பெறவில்லை. பொத்தாம் பொதுவாக 'பாஸ் முறை ஒழிக' என்று சுத்துமாறே மக்களுக்கு கோஷம் தயாரித்துக் கொடுத்தனர். இதுவரை காலம் பதவியில் இருந்த அரசுகளை இன்றைய அரசு மிஞ்சிவிட்ட நிலையிலும், அரசை நேரடியாக எதிர்த்து குரல் கொடுக்க திராணியில்லாத கட்சிகள் நடத்தும் போராட்டங்களை தயவு செய்து பாராட்டாதீர்கள். நக்கீரன் என்றாலும் குற்றம் குற்றமே!

அ.குணசலிங்கம் வவுனியா.

## கண்துடைப்பு

செம்மணி புதைகுழி தோண்டுவது கண்துடைப்பே. சர்வதேச நிபுணர்கள் இன்றி சகல வேலைகளையும் முன்னரே முடித்து விட்டனர். இப்போது ஏன் சர்வதேச நிபுணர்கள்? இதில் ஏதோ மர்மம் இருப்பதைக்கூட மக்களுக்கு உணர்த்தாமல், குழி தோண்டப் போவதாக செய்திகள் பெரிதாக வெளியாகியுள்ளன.

என்.திருக்குமரன், யாழ்ப்பாணம்.

## மக்கள் போராடியபோது

முரசுக்கு;

தமிழ் மக்கள் தமக்காக, தமது அன்றாடத் துன்பங்களுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தியுள்ளனர். இங்கு திருகோணமலையில் பட்டதாரி மாணவர்கள் போராடினர். கப்பல் பயண அனுமதிக்காக பயணிகள் போராடியிருந்ததும் தெரிந்ததே. களுத்துறை போன்ற சிறைகளில் தமிழ் கைதிகள் தமது விடுதலைக்காக போராடினார்கள். இவற்றையிட்டு பாராமுகமாய் இருந்த 'டமில்' கட்சிகள் தங்கள் சொந்த நோக்கங்களுக்காக போராட்டம் நடத்த மக்களை அழைப்பது முறையாகுமா? முரசுதான் இதற்கு பதில் கூறவேண்டும்.

இ.வினாசி, திருக்கோணமலை.

## ஏன் மௌனம்?

முரசே!

அரச நிர்வாக சீர்குலைப்பை கண்டிக்கும் தமிழ்க் கட்சிகள், தமிழ் மக்களது வாழ்க்கையை சீரழிக்கும் படை நடவடிக்கைகளைக் கண்டிக்குமா? வன்னியில் குடிமனைகளை விட்டு பல்லாயிரம் மக்கள் இடம் பெயர்ந்தபோது இவை ஏன் மௌனம் சாதித்தன? ஷெல்லடிகளும், குண்டு வீச்சுக்களும் வாழ்வை சீர்குலைப்பதை இவர்கள் அறியார்களா?

இ.ராசதுரை, கிளிநொச்சி.

## போராட்டமல்ல ஈடாட்டம்

முரசு போரா்ட்டம் நடத்துமாறு இடித்துக்கூறியதை தமிழ்க்கட்சிகள் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளன. அதுதான் அரசையும், புலிகளையும் சாடி நடுநிலை போல ஈடாட்டம் காட்டுகின்றன. அரசும், புலிகளும் போரை நிறுத்த வேண்டுமாம். அரசு அதற்கு தயார் இல்லை என்று சந்திரிக்கா அம்மையார் கூறியதை இக் கட்சிகள் எதிர்த்துப் பேசவில்லை. பிரபாகரன் பேச்சுக்குத் தயார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார். அரசுதான் மறுக்கிறது. இவர்கள் அது தெரியாதது போல இருபக்கத்திடமும் கோரிக்கை விடுத்து அரசை மறைமுகமாக நியாயப்படுத்துகிறார்கள்.

வே.கருணாகரன், வவுனியா.

## நியாயம் தானே?

வவுனியாவில் எரிபொருள் விநியோகக் கட்டுப்பாட்டை எதிர்த்து புளொட் அமைப்பினர் ஹர்த்தால் செய்தனர். நகரமே ஸ்தம்பித்தது. யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிராக ஈ.பி.டி.பி. ஹர்த்தால் நடத்தியது.

தமிழ்க் கட்சிகள் தமது எதிர்ப்பைக் காட்ட ஹர்த்தால் செய்வது நியாயமானால், புலிகள் தமது எதிர்ப்பைக் காட்ட சில வாரங்கள் அரச நிர்வாகத்தைத் தடுத்தது நியாயமாகாதா? அவ்வப்போது ஒவ்வொரு விதமாக தமிழ்க் கட்சிகள் ஊசலாடுகின்றன.

க.நிர்மலாதேவி, கைதடி.

## சகோதரப் படுகொலை

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை புலிகள் சுடுவதை தமிழ்க் கட்சிகள் பல சேர்ந்து கண்டித்துள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினரை அவரது அடையாள அட்டையைப் பறித்து தாக்கி படையினர் சுட்டுக் கொன்றனர். புளொட் பிரதேச சபைத் தலைவரை கைது செய்து வைத்திருந்தனர். அதன்போது தமிழ்க் கட்சிகள் எதுவித எதிர்ப்பும் காட்டாதிருந்தன. நக்கீரன் கூறியதுபோல, ஐக்கிய இலங்கைக்கு பாடுபடும் தமிழ்க் கட்சிகளுக்கு படையினரும் சகோதரர்களே. புலிகள்தான் எதிரிகள். எனவே 'சகோதரப் படுகொலை' என்று படையினரால் பாதிக்கப்படும்போது குரல் எழுப்புவதே முறையானது

இ.கனகசபாபதி, யாழ்ப்பாணம்.

## அராஜகம்?

ஜனநாயகம் என்றால் என்னவென்பது தெரியாத கிணற்றுத் தவளைகளாக தமிழ்க் கட்சிகள் இருப்பதுதான் உண்மை. ஆயுதம் ஏந்தாமல் இருப்பதுதான் ஜனநாயகம் என்று நினைக்கிறார்களாக்கும். அப்படிப் பார்த்தால்கூட இவர்களிடம் தற்போதும் உள்ள ஆயுதங்கள் அராஜக வழிக்குரியவையோ?

மா.எட்வேட், பேராதெனிய.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):– 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கை

## சர்வதேச ஆதரவு திரட்ட பாலா திட்டம்!

### மண்டேலாவுக்குப் பிரபாவின் செய்தி

**கொ**சோவோ பிரச்சனையில் அமெரிக்கா தலையிட்டதை அடுத்து, இலங்கைப் பிரச்சனையில் சர்வதேசத் தலையீட்டை கோரும் பிரசாரத்தை புலிகள் முடுக்கி விட்டுள்ளனர்.

இதனையடுத்தே புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அவரது பாரியாரான அடேலும் இலண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பே இவர்கள் இலண்டன் சென்றுவிட்டனர். புலிகளின் அதிவேகப் படகு மூலம் இந்திய கடல் எல்லைக்கு அப்பால் உள்ள பகுதிவரை சென்று, பின்னர் புலிகளது கப்பல் மூலமாக சிங்கப்பூர் சென்றனர். அங்கிருந்து தமது பிரித்தானிய கடவுச் சீட்டு மூலம் இலண்டன் சென்றனர்.

திரு. அன்ரன் பாலசிங்கம் பிரித்தானிய குடியுரிமையும் உள்ளவராவார். திருமதி அடேல் பாலசிங்கம் அவுஸ்திரேலிய பிரஜையாவார். எனவே பிரிட்டனில் அவர்கள் தங்கியிருப்பதை சட்டப்படி தடை செய்ய முடியாது.

விடுதலைப் புலிகளது முன்னாள் சர்வதேச பிரதிநிதி திலகர் தற்போது வன்னியில் தங்கியிருக்கிறார். அவரது நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றே பிரபாகரன் திருப்பி அழைத்திருந்தார்.

தற்போது புலிகளது சர்வதேச கிளைகள் முழு அளவில் பிரசாரங்களை முடுக்கி விட்டிருந்தாலும், அன்ரன் பாலசிங்கம் போன்ற அனுபவம் உள்ள ஒருவர் வெளிநாட்டு பிரசாரங்களை முன்னெடுப்பது கூடுதல் பயனளிக்கும் என்பது பிரபாகரனது முடிவு.

இலங்கை அரசுக்கு சர்வதேச அரங்கில் முன்பிருந்த செல்வாக்கு சரிந்து வரும் நிலையில், தமது பிரசாரத்திற்கு புதிய உத்வேகம் கொடுக்க அன்ரன் பாலசிங்கத்தை சர்வதேச அரங்கில் இறக்கியுள்ளார் பிரபாகரன்.

#### மூன்று நிலைப்பாடு

விடுதலைப் புலிகளே இலங்கைத் தமிழர்களது அரசியல் இராணுவ தலைமைச் சக்தியாகும். இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தமே தேவையாகும். சர்வதேச மத்தியஸ்தத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் தயாராக உள்ளனர். மேற்கண்ட மூன்று நிலைப்பாடுகளையும் வெளியுலக இராஜதந்திரிகள் முன்பாக அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கும் பொறுப்பு பாலசிங்கம் தம்பதியினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருமதி அடேல் பாலசிங்கம் புலிகள் இயக்கத்தில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு யுத்தத்தையே நம்பியிருக்கிறது. அடுத்த பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றுக்கும் யுத்த வெற்றிப் பிரசாரங்களையே அரசு நம்பியிருக்கிறது.

எனவே, புலிகளுடன் பேசத்தயார் என்று உதட்டளவில் கூறினாலும் அரசு பேச்சு நடத்த முன்வரப்போவதில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையையும் ஏற்க மாட்டாது.

இவ்வாறான நிலையில் புலிகளது சர்வதேச பிரசாரமும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையும் அரசுக்கு பெரும் நெருக்கடியாக அமையப் போகிறது.

தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவையும் அன்டன் பாலசிங்கம் தம்பதி சந்தித்து உரையாட உள்ளதாகவும், அப்போது வேலுப்பிள்ளை பிரபாகரனின் விசேஷ செய்தி ஒன்றையும் கையளிக்க உள்ளதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது. இச் சந்திப்பு பெரும்பாலும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். ■

## போராண்டு பிரகடனம் – போர் பயிற்சிகள்

### 70 வயது முதியவரும் பயிற்சி பெறுகிறார்!

**வ**ன்னியில் இந்த ஆண்டு போராண்டாக புலிகளால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டே போர் எழுச்சி நிகழ்வுகளும், பயிற்சி பெற விரும்புவோருக்கு பாசறைகளில் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

வயோதிபர்களும் தாம் விரும்பினால் பயிற்சி பெறலாம் என்று புலிகள் கூறியுள்ளனர். இதனையடுத்து வயோதிபர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக புலிகளது ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை எழுதியுள்ள கவிதை ஒன்றில், "எழுபது வயதிலும் பிடரி மயிர் சிலிர்த்து பயிற்சி எடுக்கும் பாதங்களே வணக்கம். உம் பாதம் தொழுதோம். முழுப் பலத்துடன் படைகளை எம் முற்றத்தில் சந்திப்போம்." என்று எழுதியுள்ளார்.

புலிகள் தமது ஆதரவாளர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தை 1992-93ம் ஆண்டுகளிலேயே ஆரம்பித்தனர்.

வன்னிப் பகுதிகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அப்போதும் முதியவர்களும் பயிற்சி பெற்றனர். பின்னர் அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது மறுபடி பரவலாக பயிற்சி பெற விரும்பும் அனைவருக்கும் பயிற்சி கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆயுதப் பயிற்சி எடுக்க முடியாதவர்களுக்கு உடற்பயிற்சிகள் செய்வதற்கும் கற்றுத் தரப்படுகிறதாம்.

போர் எழுச்சி ஊர்வலங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எழுச்சிக் கூட்டங்களும் நடந்த வண்ணமுள்ளன.

14.06.99 அன்று அக்கராயன் 8ம் கட்டை மக்கள் கிளிநொச்சி முன்னரங்குக்கு சென்று புலிகளுக்கு உலர் உணவு வகைகளை வழங்கினார்கள்.

இவ்வாறு தொடர்ந்தும் வன்னியின் பல பகுதிகளில் உள்ள மக்களும் களமுனைகளுக்குச் சென்று புலிகளுக்கு உற்சாகமளிக்கும் ஏற்பாடுகள் நடந்துள்ளன. ●

## தமிழ்க் கட்சிகளின் நழுவல் கருத்துக்கள்

### வரலாற்றை மூடி மறைக்க முயற்சி

(நமது நிருபர்)

சிங்கள வீரவிதான இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் போன்றவை பற்றி தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பலத்த அதிருப்திகளை தோற்று வித்துள்ளன.

'வீரவிதான' போன்ற அமைப்புக்கள் சிங்கள மக்களிடம் செல்வாக்கு அற்றவை என்றும், அவற்றை பெரிதுபடுத்த தேவையில்லை என்றும் தமிழ்க்கட்சி தலைவர்கள் சிலர் கூறியுள்ளனர். தம்மால் எதிர்த்து போராட முடியாத இயலாமை காரணமாகவே இக் கட்சிகள் அவ்வாறு கூறியுள்ளன என்று அரசியல் நோக்கர்கள் கண்டித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை நடந்த இனக் கலவரங்களுக்கு தூண்டுகோலாக சிறு சிங்கள அமைப்புக்களே இருந்து வந்துள்ளன.

1958ம் ஆண்டு இனக்கலவரத்திற்கு தூபமிட்டதில் 'திரி சிங்களப் பெரமுன' என்ற அமைப்பே முக்கிய பங்கு வகித்தது. அந்த அமைப்பில் நூறுபேர்கூட இருந்திருக்க மாட்டார்கள்.

அதற்கு முன்பு 1956 இல் கலவரங்களை தூண்டுவதில் துட்டுகெமுனு இயக்கம் ஈடுபட்டிருந்தது. இதுவும் சிறு அமைப்பே.

1977 மற்றும் 1983 கலவரங்களில் சிறில் மத்தியூ போன்றோரின் 'சிங்கக் குருளைகள்' போன்ற சிறு அமைப்புக்களே முன்னின்று தூபமிட்டன. அந்த அமைப்புக்களைவிட தற்போதைய வீரவிதான பெரியதாகவே உள்ளது.

இந்த அமைப்பு கொழும்பில் நடத்திய ஊர்வலத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த அமைப்பின் பின்னணியில் ஓர் அமைச்சர் உள்ளார் என்பதும், வீரவிதானவின் முன்னணியில் உள்ள பௌத்த மதகுரு அந்த அமைச்சருக்கு வேண்டப்பட்டவர் என்றும் சிங்களப் பத்திரிகைகளே செய்தி வெளியிட்டன.

நாமும் பதிலுக்கு எதிர்ப்பு தெரிவித்தால் பதற்றம் ஏற்படும் என்று கூறுவோர், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பேரினவாதத்துக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து நின்று எதிர்ப்பைக் காட்ட முயற்சித்திருக்கலாம். அதனையும் செய்யாது, பேரினவாதத்தை எதிர்ப்போருக்கு மட்டும் புத்தி சொல்ல முனைவது சரியாகாது.

வீரவிதான போன்ற அமைப்புக்களை மிட்டு விழிப்பை ஏற்படுத்துவதற்கு பதிலாக, தம் இயலாமைகளில் இருந்து கருத்துக் கூறுவது தமிழ் மக்களை அப்பட்டமாக ஏமாற்றும் செயலே என்றும் அரசியல் நோக்கர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். ●

## புலிகள் விடுத்த அறிவிப்புக்கு செவிசாய்ப்பு

### பத்துக்கு மேற்பட்டோர் புலிகளுடன் இணைவு

**த**மிழ்க் குழுக்களில் இருந்து விலகி தனிப்பட்ட வாழ்க்கைக்கு திரும்புமாறு புலிகள் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இந்த அறிவித்தலின் பின்னர் கிழக்கில் இருந்தும், வவுனியாவில் இருந்தும் பத்துக்கு மேற்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர்கள் புலிகளிடம் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பில் புளொட் உறுப்பினர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடனும் ஆயுதத்தோடும் சென்றுள்ளார். தான் புளொட்டில் இருந்தபோது புலிகள் பற்றிய தகவல்களை கூறியவர்கள் பற்றியும் இவர் விளக்கமாக தெரிவித்துவிட்டாராம். இதனால் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த சிலர் புலிகளால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். வேறுசிலர் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ராசிக்குடன் இருந்து புலிகளிடம் சென்றவர்கள் ஊடாகவே அவரது நடமாட்டம் பற்றிய தகவல்கள் கிடைத்ததாக நம்பப்படுகிறது. இதனால் ராசிக்குழு உறுப்பினர்கள் சிலர் விசாரிக்கப்பட்டனர். இதனையடுத்து மேலும் ஒரு ராசிக் குழு உறுப்பினர் புலிகளிடம் சென்றுவிட்டதாக தெரிகிறது.

புலிகளின் அழைப்புத் தொடர்பாக அக்கறைப்படாதது போல தமிழ்க் கட்சித் தலைமைகள் காட்டிக்கொண்டாலும், கீழ்மட்ட உறுப்பினர்கள் மத்தியில் ஊசலாட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

## "மக்களின் விருப்பத்தை புறக்கணியாதீர்!"

### அவசரகாலச் சட்டத்தை ஆதரியாதீர்!

### தொண்டாவுக்கு உருக்கமான வேண்டுகோள்!

**அ**வசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் முடிவை மேற்கொள்ளுமாறு இ.தொ.கா. தலைவர் தொண்டமானுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணசபை உறுப்பினரும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான மனோ கணேசன் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார். அதன் விபரம் வருமாறு:

"இம்மாத ஆரம்பத்தில் இ.தொ.கா. அலுவலக வளாகத்தினுள் உங்கள் கட்சிக் கொடி எரிக்கப்பட்ட சம்பவமானது, உங்கள் கட்சியின் தனிப்பட்ட விவகாரமல்ல. இது தமிழர்களின் தன்மானத்திற்கு விடப்பட்ட சவாலாகவே நான் கருதுகிறேன்.

இச்சம்பவத்தின் தொடர்ச்சியாக பேரினவாதத்திற்கு எதிரான எமது சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளை தடை செய்திருப்பதன் மூலம் அரசாங்கம் இரட்டை அளவு கோல்களை வைத்திருக்கின்றதா? கொழும்பு நகரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளே ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தவும், சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும் சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புகளுக்கு எவ்விதம் அனுமதி அளிக்கப்பட்டது என்ற கேள்விகள் இன்று தமிழ் பேசும் மக்கள் மனங்களில் எழுந்துள்ளன.

இந்தப் பேரினவாத அமைப்புகளின் சட்ட விரோத நடவடிக்கைளை தடுக்கவும், எமது சத்வீக எதிர்ப்பு இயக்கத்திற்கு அனுமதியளிக்கவும் முடியாத அவசரகாலச் சட்ட விதிகளுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்க முடியாத இந்த அவசரகாலச்சட்டம் எமக்கு தேவையில்லை என்ற தமிழ் பேசும் மக்களின் கருத்தையே நான் எதிரொலிக்கின்றேன்.

அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பது மூலம் நாம் எமது தார்மீக கோபத்தையும், அடையாள எதிர்ப்பையும் காட்ட முடியும். என்ன செய்தாலும் தமிழர்கள் வாய்மூடி மௌனிகளாக காலடியில் கிடப்பார்கள் என்று உருவாகியுள்ள பொதுக்கருத்தை மாற்ற முடியும்.

எனவே பாராளுமன்றத்திலே அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவளிப்பதை தவிர்த்துக்கொள்ளும்படி இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தும்படி உங்களை தமிழ் பேசும் மக்களின் சார்பாக கேட்டுகொள்கின்றேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ●

## அமைச்சரை எதிர்த்து கறுப்புக்கொடி

### பொலிசார் கண்ணீர்ப் புகை

**ஸ்ரீ**லங்கா முஸ்லிம் காங்கிரசின் தென்கிழக்கு மாகாணசபை கோரிக்கைக்கு காத்தான்குடியில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12.06.99 அன்று அமைச்சர் அஷ்ரப் காத்தான்குடிக்கு விஜயம் செய்தபோது கறுப்புக் கொடிகள் காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன், சத்தியாக்கிரகமும் நடைபெற்றது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேச அமைப்பாளர் ஏ.எல். மார்சூக் முன்னின்று ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஐ.தே.கட்சியினரும் முழு ஆதரவு வழங்கியிருந்தனர்.

காத்தான்குடி பிரதேச சபை நகரசபையாகத் தரமுயர்த்தப்படும் விழாவுக்கு அமைச்சர் சென்றபோதே சலசலப்புக்கள் ஏற்பட்டன.

அமைச்சர் அஷ்ரப் கலந்து கொண்ட வைபவத்திற்காக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் சொந்த ஊரான காத்தான்குடியில் கட்-அவுட்டுகளும், அலங்கார தோரணங்களும், மின்விளக்கு அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

மறுபுறத்தில் காத்தான் குடியில் எதிர்ப்பாளர்கள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திலும் கொடும்பாவி எரிப்பிலும் ஈடுபட்டனர். இதனால் பதற்றம் ஏற்பட்டது.

எதிர்ப்பாளர்கள் சிலர் மறுதரப்பினரால் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டனர். இதனையடுத்து பொலிசார் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். சத்தியாக்கிரகிகள் அமர்ந்திருந்த பள்ளிவாசலை நோக்கி கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன. கல்லெறிகளும் நடைபெற்றன.

இத்தனைக்கும் பின்னர் திட்டமிட்டபடி அமைச்சர் அஷ்ரப் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். தென்கிழக்கு மாகாண சபையை தாம் கோரவில்லை என்றும், ஜனாதிபதி சந்திரிக்காவே அது பற்றி பிரஸ்தாபித்தார் என்றும் அமைச்சர் அங்கு கூறினார்.

தென்கிழக்கு மாகாண சபையை எதிர்ப்பவர்கள் ஜனாதிபதி குடியிருக்கும் அலரி மாளிகைக்கு முன்சென்று சத்தியாக்கிரகம் இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## மடுவில் தாக்குதலை ஆயர் தடுத்தார்

### விலகியது குறித்து புலிகள் தெரிவிப்பு

**ம**டுப் பகுதியில் புகோள சூழல் படையினருடன் சமரிட்டு வழியானது. அவ்வாறு இருந்தும் பேராயரின் வேண்டுகோளின் படியே தாம் அங்கு தாக்குதல் நடத்தவில்லை என்று புலிகள் கூறியுள்ளனர்.

இதுதொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இராணுவத் தரப்பு பூவரசங்குளத்தில் இருந்து மடுவீதியூடாக மடுவுக்கு முன்னேறும் முடிவை எடுத்தது. முன்னேறும் இராணுவத்தை ஆள் இழப் பற்ற வகையில் தடுத்து நிறுத்தி தாக்கியழிக்கும் திட்டத்தோடு எமது அணிகள் ஏற்பாட்டு வேலைகளில் இறங்கின.

மடுத்தளத்தின் பேராயர் வணபிதா இராயப்பு யோசப் அடிகளார் களமுனைத் தள பதியிடம், "மடு ஒரு புனித தலம். இந்த மடுப்பிரதேச சுற்றுச் சூழலில் ஒரு தாக்குதல் நடவடிக்கையால் இரத்தக் களரி ஏற்படுவது நல்லதல்ல. இதைத் தவிர்க்கவும்!" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு இணக்கம் தெரிவித்து எமது தலைவரின் பணிப்பின் பேரில் எமது அணிகள் தாக்குதல் திட்டத்தை கைவிட்டு அகன்றன.

இப்போது படையினர் மடுப் பிரதேசத்தை ஆக்கிரமித்து, மடுப் புனித தலத்துக்கு பங்கம் விளைவிப்பதாக பேராயர் குரல் கொடுக்கிறார். ஆனால் அரசோ புலிகள் மீதான மாபெரும் வெற்றியாக இதைக் கூறிக்கொண்டது. கிறிஸ்தவர்களது மதவழிபாட்டு உரிமையை பெற்றுக் கொடுத்ததாக பீற்றிக் கொண்டது.

ஆனால் ஆக்கிரமிப்பின் முன்பு இத் தேவாலயத்திற்கு எவரும் வந்து போகவோ மத நடவடிக்கையில் ஈடுபடவோ புலிகள் என்றுமே தடை விதித்ததில்லை!" இவ்வாறு புலிகள் தமது செய்தியில் கூறியுள்ளனர். ●

## புலிகளின் பிஸ்டல் குழு தீவிரம்!

### சீருடையினர் ஊர்காவலருக்குச் சூடு!

**ம**ட்டக்களப்பிலும், மருதமுனையிலும் இருவரைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு-பாலமீன்மடு டச் பார் வீதியில் வி.பத்மசிறி (23) எனும் பொலிஸாரைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் கடந்த 13.06.99 அன்று காலை ஏழு மணியளவில் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இச்சம்பவம் நடந்த போது அச்சமயத்தில் அகப்பட்டுக் கொண்ட கே.ஞானேஸ்வரன் எனும் பொது மகனும் காயமடைந்தார்.

அதே தினத்தன்று மாலை 4.30 அளவில் கல்முனை-மருதமுனையில் எம்.எல்.நைறாஸ் கான் (23) எனும் நபர் சுடப்பட்டார். இவர் முன்னர் அரசாங்கப் படையில் இருந்து தப்பித் தலைமறைவாகியிருந்தவர் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

சைக்கிளில் வந்த மூவரில் ஒருவர் காலஞ்சென்றவர் மீது சுட்டுவிட்டுத் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிவிலுடையில் ஆயுதங்களுடன் நடமாடியவரைக்கண்டு சந்தேகம் கொண்டு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சுட்டதில் அவர் பலியானார். கொல்லப்பட்டவர் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஊர்காவல் படையைச் சேர்ந்த எம்.ரி.ஜெயதிலக என்று பின்னர் தெரியவந்தது.

இதேவேளை 15.06.99 அன்று புலிகளின் பிஸ்டல் குழுவினரால் பூ.இன்பராஜா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் முன்பு புளொட், ரெலோ அமைப்புக்களில் உறுப்பினராக இருந்துவிட்டு வெளிநாடு சென்றிருந்தார். இரண்டு மாதத்தின் முன்பு நாடு திரும்பினார். படையினருக்கு ஒத்துழைத்து வந்தார்.

இவரது சடலம் கல்லடி விடுதியருகே கிடந்தது. இவர் மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்தவர். ■

## நேரம் தவறி வெடித்த குண்டு!

**ம**ட்டக்களப்பு-வாழைச்சேனையில் படையினரைக் குறிவைத்துப் புலிகளால் வைக்கப்பட்ட குண்டொன்று நேரம் பிசகி வெடித்ததால் எதிர்பார்த்த இலக்கு எட்டவில்லை.

ஏற்கெனவே கூரைகள் கழற்றப்பட்டுத் தூர்ந்து போயுள்ள இவ்வீட்டில், பகல் வேளையில் பாதுகாப்பு வழங்கிவரும் படையினர் சிலர் கூடி நிற்பது வழக்கமாகும்.

இவர்களைக் குறிவைத்தே பகல் வேளையில் வெடிக்கக் கூடியதாக குறித்த வீட்டின் அத்திவாரத்தின் கீழ் புலிகள் சக்தி வாய்ந்த குண்டைப் பொருத்தியிருந்தனர். எனினும் பகலில் நேரம் கணித்து வைக்கப்பட்ட குண்டு தவறுதலாக நள்ளிரவில் வெடித்ததால் படையினருக்கு ஏற்படவிருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

நள்ளிரவில் பாரிய சத்தம் கேட்டதால் ஷெல் விழுவதாக மக்கள் அஞ்சினர். பொழுது புலர்ந்த போதுதான் நடந்த சங்கதி தெரிய வந்தது. குண்டு பொருத்தப்பட்டிருந்த வீடு இடிந்து சேதமடைந்திருந்தது. இச்சம்பவம் 13.06.1999 அன்று இடம் பெற்றது. ■

## நள்ளிரவில் துப்பாக்கிச் சூடு!

### முகாம் பொறுப்பதிகாரி சீற்றம்!

**ந**ள்ளிரவு 12.15 க்கு சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து படை வீரர்களையும், முகாமைச் சூழவிருந்த குடி மக்களையும் கலக்கமடையச் செய்த இராணுவ சிப்பாய்கள் முகாம் பொறுப்பதிகாரியால் தண்டிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு-கொம்மாதுறைப் படை முகாம் காப்பரண் ஒன்றிலிருந்த படையினரே இவ்வாறு காரணமின்றிச் சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்திப் பொது மக்களையும் இராணுவத்தினரையும் கலக்கமடையச் செய்தனர்.

சம்பவம் நடந்த நள்ளிரவு வேளையில் உடனடியாக அந்தக் காப்பரணுக்கு விரைந்த பொறுப்பதிகாரி அங்கிருந்த படைவீரர்கள் ஆறு பேரையும் கடுமையாகத் தண்டித்ததுடன் மறுநாள் வெய்யிலில் நிற்க வைத்ததையும் காண முடிந்தது.

இவரது பொறுப்புள்ள நடவடிக்கையைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்றனர். ●



படிப்பகம்

www.padippakam.com

# மறுபடி திரும்பலாம்
## சுற்றறிக்கை கூறுகிறது

(திருமலை நிருபர்)

மத்திய அரசு சேவையிலிருந்து மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விரும்பினால் மீளவும் மத்திய அரச சேவைக்குத் திரும்பலாம். இதற்கான அனுமதியை ஏப்ரல் 5ந் திகதி வெளியான அரசாங்க நிர்வாகச் சுற்ற றிக்கை 09/99 வழங்குகின்றது.

எனினும் இவ்வாறு வருபவர்கள் மத்திய அரச சேவையில் தொடர்ந்தும் இருக்குமிடத்தில் பெறக்கூடிய உத்தியோக உயர்வு, சம்பள ஏற்றம் ஆகிய அடிப்படையிலேயே மீளவும் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள். மாகாண அரச சேவையின் போது பெறப்பட்ட பதவி உயர்வுகள், படியேற்றங்கள் என்பவை மத்திய அரச சேவையாற் பெறக்கூடியதிலும் பார்க்க அதிகமாக இருப்பின் சம்பந்தப்பட்ட, உத்தியோகத்தர் அவற்றை இழக்கச் சித்தமாக இருக்க வேண்டும், எனவும் சுற்று நிருபம் வலியுறுத்துகிறது.

சம்பந்தப்பட்ட நியமன அதிகாரியின் உடன்பாட்டுடனும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடனும் செய்யப்படும் இச் சேவை மாற்றத்துக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர் சத்தியக் கடதாசி ஒன்றையும் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறார்.

## கப்பல் சேவை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஜூன் மாதத்துக்கான காங்கேசன் துறைக்கும் திருக்கோணமலைக்குமிடையிலான கப்பற் போக்குவரத்துச் சேவை பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளது.

திருக்கோணமலையிலிருந்து ஜூன் 1,8,15,22,29 ஆகிய தினங்களில் புறப்படும் கப்பல், ஜூன் 03,10,17,24, ஜூலை 1 ஆகிய தினங்களில் காங்கேசன் துறையிலிருந்து திரும்பவிருக்கிறது.

இக் கப்பற் சேவை மூலமே நோயாளர்கள் எடுத்துச் செல்லப்படுவதுடன் தபாற் பைகளும் கொண்டு செல்லப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை வரை அனுமதி!

கொழும்பிலிருந்து புறப்படும் அம்பாறை, கல்முனைப் பிரதேச பஸ்வண்டிகளும் மற்றும் பிறவாகனங்களும் இதுவரை இரவில் பயணத்தைத் தொடர முடியாதவாறு, வரும் வழியில் சியம்பலாண்டுவ சோதனைச் சாவடியில் இடை மறித்து நிறுத்தப்பட்டன.

அங்கு நடு நிசியில் தடைப்படுத்தப்படும் வாகனங்கள் பொழுது புலர்ந்த பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன. இதனால் காலையில் நேரம் பிந்தியே பயணிகள் தமது ஊர்களுக்குச் செல்லக்கூடிய கஷ்ட நிலை இதுவரை இருந்து வந்தது.

ஆனால் இதுவரை காலமும் சியம்பலாண்டுவ சோதனைச் சாவடியில் தடைப் படுத்தப்பட்ட வாகனங்கள் அம்பாறை-மல்வத்தை வரை பயணம் செய்ய அனுமதிக்கப் படுகின்றன.

இதனால் அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச் சேனை போன்ற பகுதிகளிலுள்ள பயணிகள் நேர காலத்துடன் காலை வேளையில் வீடு சேரக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் அம்பாறை-மல்வத்தையுடன் தற்சமயம் தடைப்படுத்தப்படும் வாகனங்களைத் தடையை நீக்கி கல்முனை வரை செல்ல பாதுகாப்புத் தரப்பினர் அனுமதித்தால் பொது மக்களின் சிரமங்கள் மேலும் குறையும்.

## அதிகாரிக்கு நடந்த கதி!

தற்போதைய யுத்த சூழ்நிலையில் ஒட்டு மொத்தமாக மனித உரிமைகள் எல்லாம் எங்கே ஓடி ஒளிந்து கொண்டன.

பாமரர் தொடக்கம் படித்தவர் வரை மனிதாபிமானமற்ற ஆயுதக் கலாசாரத்தின் கொடுங்கரத்தின் அக்கிரமத்திற்கு உட்படுகிறார்கள். இது நாளுக்கு நாள் நடக்கும் சங்கதி.

கல்முனைக்குப் பயணம் செய்த அரசின் மனித உரிமைகள் பணியகத்தின் அதிகாரி பாண்டிருப்பு சோதனைச். சாவடியில் பெருத்த கெடுபிடிகளுக்குள்ளாகி ஒருவாறு தப்பிக் கொண்டார்.

கண்ணியம் தெரியாத அங்கு நின்ற சீருடைக்காரர் ஒருவர் அடையாள அட்டையைக் கேட்டு அதைக் காண்பித்தும் அவர் செய்யும் பணி என்ன என்பது அவருக்குப் புரியவில்லை.

அரை மணித்தியால மிரட்டல் உருட்டலின் பின்னர் அதே பஸ்ஸில் பிரயாணம் செய்த புதிய கிழக்கு பஸ் நிறுவனத்தின் அதிகாரி திரு சந்திரசேகரம் அவர்கள் நிலைமையில் தலையிட்டு ஒருவாறு சுமுகமாகத் தீர்த்தார்.

## எங்கும் வள்ளுவர் சிலைகள்
### கண்ணதாசன் மன்றம் ஏற்பாடு

திருக்குறளை தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் பரப்பும் நோக்குடன் தமிழ் மன்றங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் பொது இடங்களிலெல்லாம் திருவள்ளுவர் சிலைகளை நிறுவுவதற்கான ஓர் இயக்கத்தை அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் ஆரம்பித்துள்ளது. இதற்கான வள்ளுவர் சிலைகளை பிரபல சிற்பக்கலைஞரான புல்லுமலை நல்லரத்தினம் உருவாக்கியுள்ளார்.

வள்ளுவர் சிலைகளின் முதல் தொகுதியினை சில பள்ளிக்கூடங்களுக்கும் மன்றங்களுக்கும் வழங்கும் நிகழ்ச்சி 24ம் திகதி வியாழக்கிழமை மாலை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அண்மையில் தமிழ்நாடு சென்று திரும்பிய சிற்பி புல்லுமலை நல்லரத்தினம் அவர்கள் அங்கு வள்ளுவர் கோட்டம், மைலாப்பூர், குறளகம், மரீனா கடற்கரை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள வள்ளுவர் சிலைகளையும் கன்னியாகுமரியில் நிறுவப் படுவதற்காக அமைக்கப்பட்டு வரும் 133 அடி உயரச்சிலைகளையும் அடியொற்றி ஆறு வகையான வள்ளுவர் சிலைகளை வடித்துள்ளார். இந்தச் சிலைகளின் திறப்பு, அறிமுக விழா கடந்தமாதம் நடைபெற்றது.

ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ஒரு திருக்குறளையாவது படித்துப்பயன்பெற வேண்டும் என்பதற்காகவே திருவள்ளுவர் சிலைகளை நாடெங்கும் நிறுவுவதற்குதான் எண்ணங்கொண்டதாக திரு. நல்லரத்தினம் கூறுகிறார்.


**சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை**

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

**தினமுரசு பத்திரிகையின்**
அனுசரணையுடன்
**மாபெரும் இசை நிகழ்ச்சி**
அறிவிப்பாளர் சீதாராமன்–
இக்பால், ஜெகனுடன் வழங்கும்
**நட்சத்திரங்களின் இசைமழை**
திரையிசை நிகழ்ச்சி
நிகழ்ச்சி அமைப்பு: V.M. சந்திரசேகர்
பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்
நிகழ்ச்சி முடிவில் அபிமான அறிவிப்பாளர்களுடன் புகைப்படம் பிடிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
காலம்: 27.06.1999–
இரண்டுகாட்சிகள் நேரம்: 3.30 p.m / 6.30 p.m.
இடம்: பண்டாரவளை நகர மண்டபம்
டிக்கட் : 100/- 150/- 200/-

**அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்**

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைகளில் அதிஷ்டத்தை அள்ளித் தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். ரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஷ்டசாலியாக மாறலாம்

Accrediated by National Gem & Jewellery Authority
**ARUL JEWELLERS**
3, Sea Street, colombo-11.
Sri Lanka. T.P.436331
Branch :105, Galle road, wellawatte, Colombo.06.

**இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி**

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சியை அளிக்கும் 90 நாட்கள் ஆங்கில பாடநெறி

**500 SCHOLARSHIP PROGRAMME**

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.07.1999

இப்பாடநெறிக்காக பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும். பாடநெறிக் கட்டணம் முற்றிலும் இலவசம்!!!

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசம் எழுதப்பட்ட 3.50 முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். அல்லது 077-802849 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**I.L.C. International**
P.O.Boxa-119,
Kandy.
Tel. : 08-222664, 077-801245

The Student ஆங்கில கல்வி இதழ் 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.கந்தையா இராஜகோபால்
(கற்கண்டு)

✣ ✣ ✣
மலர்வு 1947.10.16
உதிர்வு 1998.06.17
✣ ✣ ✣

அன்பும், பண்பும்
நிறைந்தவரே!
ஆறாத்துயரில் எம்மை
ஆழ்த்திவிட்டு
இறைவன் பாதம்
சென்றுவிட்டீர்கள்.
ஓராண்டு என்ன
நூறாண்டு போனாலும்
எங்கள் நினைவில்
என்றும் இருப்பீர்கள்.

உங்கள் பிரிவால்
துயருறும், அன்பு
மனைவி, பிள்ளைகள்,
மாமி, மச்சான் குடும்பம்.
தகவல்: மச்சான்
(ராஜா கனடா)

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் ஜெ.ராகவன் 01.06.1999**

ஜெகதீசன்- மேகலா தம்பதியரின் அருந்தவப் புதல்வன் ராகவன் தனது முதலாவது பிறந்த தினத்தை 01.06.1999 அன்று இத்தாலி பலெர்மோவில் உள்ள தனது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா வவுனியாவில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பாபு மாமா மதிமாமி, தங்கா அத்தை, சுமதி அத்தை பலெர்மோவில் இருக்கும் அம்மம்மா, யசி சித்தி, கோபி மாமா கொழும்பில் இருக்கும் பாட்டி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் டில்சன் 18.06.99**

சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும் ஜேர்மன் டோட் மூண்ட் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா- இந்துமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் டில்சன் தனது பிறந்தநாளை 18.06.99 அன்று டோட் மூண்ட் நகரில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா மதுஜன் அண்ணா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், பிறேமா சித்தி, அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், (இலங்கை, நோர்வே, கனடா, சுவிஸ்) அனைவரும் டில்சன் குட்டியை வீரபத்திரர் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: T. MAHADEVA,
HAYDN STR-12, 44147 DORTMUND, GERMANY, T.P.0231-832387


**மனோதத்துவ வைத்தியம்**
**வவுனியாவிலும் (வன்னி இன்னில்) சந்திக்கலாம்**

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்பனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன்; இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கல்முனையில் ஜூலை 3,4ம் திகதிகளில்**
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஜூலை 10,11 திகதிகளில்**
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

**கொழும்பில் ஜூன் 21 முதல் 28 வரை**
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.

காலம் : 23.06.99 முதல்
25.06.99வரை
(புதன் முதல் வெள்ளி வரை)
இடம் : Volkshaus மண்டபம்
நேரம் : 10 மணி முதல்
18 மணிவரை

**Bern மாநகரில் பாசல் எஸ்.பி.ரி.யின்**
**மாபெரும் கோடைகால மலிவு விற்பனை**

கோலம் சாறி 165 Chf இல் இருந்து....
பஞ்சாபி வகைகள் 10 Chf இல் இருந்து....
பலதரப்பட்ட சாறி வகைகள் 9 Chf இல் இருந்து....
சிறுவர்களின் சூட் வகைகள் 10 Chf இல் இருந்து....
சிறுமிகளின் பஞ்சாபிகள் 5 Chf இல் இருந்து....
ஆண்களின் ரவுசர் சேட் வகைகள் 10 Chf இல் இருந்து....
ரீ சேட் வகைகள் 8.50 Chf இல் இருந்து....
Ramiy யின் CD 5 Chf இல் இருந்து....

22 கரட் தங்க நகைகள் மிக மிக மலிவு விலையில்
பட்டு புடவைகளும் தங்க நகைகளும் அணியும் நாளெல்லாம் ஆனந்த திருநாளே

BASEL ரவி கடை

Mai, Juni, Juli ஆகிய மூன்று மாதங்களில் வெளிவந்த படையப்பா, மோனிசா என் மோனோலிசா, துள்ளாத மனமும் துள்ளும், மனம் விரும்புதே உன்னை போன்ற சாறி வகைகளும், தரமான கோலம், றங்கோலி, பனாறஸ் சாறிகளும் மற்றும் மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுவேட்டி, கூறை வகைகளும் ஹாவ்சாறி வகைகளும் மற்றும் குசிறாத்தி, ரேகிசி, வைக்ஸ்சிலி, காலமெல்லாம் காதல் வாழ்க போன்ற பஞ்சாபி வகைகளும் மிக குறைந்த விலையில் வாங்கிட விரைந்து வருவீர்!

விபரங்களிற்கு S.P.Textiles & Jewellery
Elisabethenanlage-9, 4051 Basel.
Tel & Fax:- 061/272 09 90 Mobile:- 079/356.22 76




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தரையிறக்கத் தாக்குதலும் தரை தொடுப்பு நகர்வும்



ரணகோஷ இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதே, மன்னார்?பூநகரி சாலையை கைப்பற்றுவதே திட்டம் என்று கூறியிருந்தோம்.

கடந்த 10.06.1999 அன்று பூநகரியை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட படை நகர்வு முற்றுமுழுதாக தரையிறக்க தாக்குதல் படையினரின் திட்டத்தை பறைசாற்றிவிட்டது.

வவுனியா-யாழ் சாலையை கைப்பற்றும் நகர்வுகளை மாங்குளத்துக்கு அப்பால் நகர்த்திச்செல்ல முடியாதளவுக்கு புலிகளின் மறிப்புச் சமர் அரண்கள் பலமாக உள்ளன.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான 75 கிலோமீட்டர் தூரத்தை கடக்க ஆரம்பமான படை நகர்வு 40 கிலோமீட்டர் தூரத்தை கடந்த நிலையில் பாதியில் நிற்கிறது.

தற்போது கிளிநொச்சி புலிகளின் கையில் இருப்பதால் மேலும் 40 கிலோமீட்டர் தூரம் பரந்தன் வரை படை நகர்ந்தால்தான் வவுனியா-யாழ் சாலை திறக்கப்பட முடியும்.

எனவே, வவுனியா-யாழ் சாலையில் படையினர் பாதித்தூரத்தைத்தான் கடந்துள்ளனர். இதற்கே இரண்டு வருடங்கள் கரைந்து போய்விட்டன.

வவுனியா-யாழ் சாலையைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வி கண்டதின் வெளிப்பாடு தான், அச்சாலைக்கு மேற்காக ஆரம்பிக்கப் பட்ட படை நகர்வுகளாகும். அவற்றுக்கே 'ரண கோஷ' என்று பெயரிடப்பட்டது.

மன்னார்-பூநகரி சாலையை கைப்பற்றும் நகர்வுக்கு முன்பாக, வவுனியா-யாழ் சாலையில் உள்ள படையினரின் பின்தளத்தின் தற்பாதுகாப்பு எல்லையை விரிவாக்கவும், மன்னார்-பூநகரி சாலைக்குள் புலிகள் ஊடுருவல் செய்யாது தடுப்பதற்குமான முன்னேற்பாட்டான நகர்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

தள்ளாடி முகாமை தளமாகக் கொண்டு ரணகோஷ 02ற்கான திட்டத்தை படைத்தரப்பு தீட்டியிருந்தது. அந்த திட்டத்தை முறியடிக்க, 'ஏற்பாட்டுக் குலைப்பு' தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தினர். தள்ளாடி முகாம்மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. புலிகளின் பீரங்கிப்படையணி மட்டுமே அத் தாக்குதலை நடத்தியது.

இதனை 'சிக்கனத் தாக்குதல்' என்று புலிகள் அழைத்தனர். தமக்கு எவ்வித இழப்புமின்றி எதிரிக்கு பாரிய இழப்பை உருவாக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் என்று அர்த்தம்.

இத்தாக்குதலால் தள்ளாடி முகாமில் பாரிய சேதங்கள் ஏற்பட்டதுடன், தீட்டியிருந்த படை நகர்வு திட்டமும் பின் போடப்பட்டது.

இத்தாக்குதலின் பின்னர் தள்ளாடியிலிருந்த 21-2 பிரிகேட் தலைமையகம் வங்காலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றும் நகர்வுக்கு தள்ளாடி முகாமே பிரதான ஏற்பாட்டுத் தளமாக இருக்கப்போகிறது. அங்குதான் ஆயுதங்களும், விநியோக மையங்கள் என்பனவும் இருந்தாக வேண்டும்.

எனவே ரணகோஷ 02, 03 நடவடிக்கைகள் மூலமாக புலிகள் மன்னார் சாலையை நெருங்க முடியாது தடுப்பதற்கான தற்காப்பு வேலிகளை அமைக்கும் நகர்வுகளை படைத்தரப்பு மேற்கொண்டது.

ரணகோஷ 3 நடவடிக்கையின்போது பெரியமடுவையும் பாலமடுவையும் இணைக்கும் நடவடிக்கை கைகூடவில்லை.

இதன்பின்னர் தென் மாகாணசபைத் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பாக பல முனை நகர்வொன்றை மேற்கொண்டு பூநகரியைக் கைப்பற்ற படையினர் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் பெரும் எடுப்புக்கான ஆயத்தங்கள், ஹெலிகளை தயார்ப்படுத்துதல், துருப்புக்களை இறக்குவதற்கான ஏற்பாடுகளை இறுதியாக சரிபார்த்தல் போன்றவற்றை குறித்த நாளுக்குள் பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டதாக தெரிகிறது.

அதற்குள் தேர்தல் நாள் வந்துவிட்டது.

எனினும் வகுத்த திட்டத்தை கைவிடாமல் பரிசீலித்துப் பார்க்க முடிவு செய்தனர்.

படை நடவடிக்கைகளை தொடர ஆட்பலம் ஒரு பிரச்சனையாக இருப்பதாக சென்றவாரம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனினும் புலிகளின் பலத்தை குறைத்து மதிப்பிட்டதால், பூநகரியை கைப்பற்ற அதிரடித் திட்டம் ஒன்றை அவசரமாக நிறைவேற்ற முற்பட்டனர்.

10.06.99 அதிகாலை 5.30 மணியளவில் பொழுது புலரும் முன்பே பூநகரிப் பகுதிக்கு மேலாக விமானங்கள் பறக்கத் தொடங்கிவிட்டன.

ஹெலிகள் மூலம் படையினரை தரையிறக்க வசதியாக, தரையிறங்கும் பகுதிகள் எனக் குறிக்கப்பட்ட பிரதேசங்களை சுத்தப்படுத்திக் கொடுப்பது குண்டு வீச்சு விமானங்களின் வேலை.

அதனையடுத்து இரு முனைகளில் பூநகரியை நோக்கி செல்வதற்கான தரையிறக்கம் ஆரம்பமானது.

மண்டைதீவில் இருந்து ஹெலிமூலமும் கடற்படை உதவியுடனும் கல்முனையில் ஒரு தொகுதி படையினர் இறக்கப்பட்டனர். கல்முனை பூநகரிக்கு வடமேற்காக 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

இன்னொரு தொகுதி படையினர் பூநகரிக்கு தென்கிழக்காக ஏழரைகிலோ மீட்டர் தூரத்திலுள்ள நல்லூரில் தரையிறக்கப் பட்டனர். இவர்களுக்கு உதவியாக யாழ் குடா ஏரியில் தரித்து நின்ற கடற்படை போர்படகுகள் பீரங்கித் தாக்குதல் தொடுத்த வண்ணமிருந்தன.

மேலே விமானப் படை விமானங்கள் பாதுகாப்பளித்தபடி பறந்துதிரிந்தன. ஹெலிகளும் நகரும் படையினருக்கு உதவியாக பறந்து திரிந்தன.

இதேவேளை நல்லூரில் இறங்கிய படையினருடன் இணைவதற்காக பரந்தனில் இருந்தும் படையினர் நகரத் தொடங்கினர்.

பரந்தன் படையினர் நல்லூரை அடைய வேண்டுமானால் 17 கிலோமீட்டர் தூரம் முன் செல்ல வேண்டும்.

விமானங்கள், ஹெலிகள் பறந்து திரிவதைக் கண்டதுமே புலிகளது படையணிகள் உஷாராகி விட்டன.

மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றும் திட்டம் படையினருக்கு இருக்கிறது என்பது தெரிந்துவிட்டதால், பூநகரியை கைப்பற்றும் முயற்சி நடக்கக்கூடும் என்பது புலிகள் எதிர் பார்த்ததே.

பரந்தனில் இருந்து நகர்ந்த படைகளை புலிகளது பெண்கள் படையணி எதிர்கொண்டு தாக்கியது. கடும் மோதல் மூண்டது.

கல்முனையில் இருந்தும், நல்லூரில் இருந்தும் நகர்ந்த படையணிகளை எதிர்கொள்ள எறிகணைத் தாக்குதல்களை புலிகள் தொடுத்தனர்.

கல்முனை ஒடுக்கமான நிலப்பரப்பு. அதனூடாக பெரும் எடுப்பிலான நகர்வை மேற்கொள்வது கடினம். எனவே அப்பாதையூடாக நகர முற்பட்ட படையணிகளை துல்லியமான எறிகணை தாக்குதல்கள் தடுத்து நிறுத்தின.

கடற்படை பீரங்கிப்படகுகள் மூலம் கடல் வழியாக படையினரை தரையிறக்கவும் முயற்சி நடந்தது.

அவ்வாறு தரையிறக்கப்பட்டிருந்தால் பெரும் எடுப்பிலான நகர்வாக இருந்திருக்கும். ஆனால் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி புலிகளது மோட்டார்கள் எறிகணைகளை ஏவிக் கொண்டிருந்தன. அதனால் கடல் பகுதி ஊடான தரையிறக்கம் தடுக்கப்பட்டது.

புலிகளது எறிகணைகள் எங்கிருந்து ஏவப்படுகின்றன என்று கண்டறிந்து, ஏவுதளங்களை நிர்மூலமாக்கும் முயற்சிகளும் கைகூடவில்லை.

இதற்கிடையே புலிகளது விசேஷ படையணிகளும் களத்துக்கு விரைந்தன. தரையிறக்கப்பட்ட படைகளை முற்றுகையிட்டு அழிப்பதற்காக சிறுத்தைப் படையணியும் அனுப்பப்பட்டது. கடற்புலிப் படகுகளும் கடற் சண்டை ஒன்றுக்கு தயாராகின.

கடலில் இருந்தும், வான் மூலமும் தரையிறக்க திட்டமிடப்பட்ட துருப்புக்களில் ஒரு பகுதியினரையே தரையிறக்க முடிந்தது.

மேலும் தரையிறங்க முற்பட்ட ஹெலிகளை நோக்கி எறிகணைகள் பறந்து வந்தன. இதனால் எம்.ஐ.24 ரக ஹெலி ஒன்றும், எம்.ஐ.16 ரக ஹெலி ஒன்றும் பலத்த சேதமடைந்தன. விமானிகளது சாதுரியத்தால் காயம்பட்ட ஹெலிகள் விழுந்து நொறுங்காது மண்டைத்தீவில் தரையிறக்கப்பட்டன.

கல்முனையில் இருந்து கடல்வழியாக மண்டைதீவு ஏழரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தமையால் ஹெலிகள் உடனடியாக தரையிறங்கி, உள்ளிருந்தோர் உயிர் தப்ப முடிந்தது.

இதேவேளை நல்லூரிலும் கல்முனையிலும் ஹெலிமூலம் தரையிறங்கிய படையினரில் ஒரு பகுதியினர்கூட கடற்பக்கமாக நகர்ந்து கடற்படை படகுகளில் ஏறியே தளம் திரும்பியதாக கூறப்படுகிறது. தரையிறங்கிய ஹெலிகளால் மறுபடி தரையிறங்கி படையினரை ஏற்றிச்செல்ல முடியாதளவுக்கு எறிகணைகள் எங்கும் விழுந்து வெடித்தன.

கடற்படை உதவி இல்லையானால் தரையிறங்கிய படைகள் புலிகளது பாரிய முற்றுகைக்குள் சிக்கியிருக்கக்கூடும்.

நண்பகலுக்குப் பின்னர் படைத்தரப்பு களத்தைவிட்டு கடல் வழியால் அகன்று சென்றது. வான்மூலம் தரையிறங்கி கடல் மூலம் வெளியேறினர்.

பூநகரியை கைப்பற்றும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

பூநகரியை நோக்கி முன்னேற இரு முனைகள்தான் உள்ளன. இருமுனைகளிலும் கடற்பரப்பு இருப்பது படையினருக்கு சாதகம். இப்பகுதிகள் வெளியாக இருப்பதால் புலியணிகள் ஒன்று திரளவிடாது குறிவைத்து தாக்குதல் நடத்த விமானப் படையினருக்கும் சாதகம்.

ஆனால் புலிகளுக்கு இதைவிட மேலதிகமான சாதகம் இருக்கிறது. கரையோரங்கள், வெளிப்பகுதிகள் ஊடாக நகரும் படையினரை நோக்கி எறிகணை வீச்சு நடத்துவது இலகு. துல்லியமாக தாக்க முடியும். எனவே பூநகரியை கைப்பற்ற வேண்டுமானால் புலிகளது பீரங்கிப் படையணியிடம் பாரிய இழப்பை படைத்தரப்பு சந்தித்தாக வேண்டியிருக்கும்.

பூகரியை கைப்பற்ற படைபலம் தேவையாக இருக்கும். அப்படைபலத்தை நகர்த்திச் செல்வதும் கடினமாக இருக்கும்.

பூநகரியை கைப்பற்றும் 'தரையிறக்க தாக்குதல்' உத்தி அமெரிக்க பச்சைக் கமாண்டோக்களிடம் கற்ற உத்தியாக இருக்கலாம்.

அமெரிக்க-வியட்நாம் போரில் வியட்நாம் காடுகளுக்குள் ஹெலிமூலமே அமெரிக்க துருப்புக்கள் தரையிறக்கப்பட்டன. எனினும் அந்த உத்திகளை வியட்நாம் கெரில்லாக்கள் முறியடித்திருந்தனர்.

வடக்கு-கிழக்கு போர் அரங்கில் ஹெலி மூலமான தரையிறக்கம் 1985இல் முதன் முதலில் பரிசீலிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சுதுமலையில் புலிகளது முகாம் ஒன்றை தாக்குவதற்கு படையினர் தரையிறக்கப்பட்டனர். அம் முயற்சியும் அப்போது கைகூடவில்லை.

எனினும் 1991இல் கடற்படையினர் உதவியுடன் நடைபெற்ற கடல்மார்க்க தரையிறக்கம் மூலமே ஆனையிறவு முகாம் முற்றுகையை படையினர் முறியடித்தனர்.

ஆனால் அச்சமயத்தில் புலிகளிடம் போதிய எறிகணை வளமுள்ள பீரங்கிப் படையணியோ, கடற்படைப் பலமோ இருக்கவில்லை.

மன்னார் பூநகரிப் பாதையை கைப்பற்றாது முதலில் பூநகரித் தளத்தை கைப்பற்ற படைத்தரப்பு முயன்றது ஏன்? ஏன்று பார்க்க வேண்டும்.

மன்னார் பூநகரி சாலையின் மொத்த நீளம் 75 கிலோமீட்டர். அதாவது கிட்டத்தட்ட வவுனியா-கிளிநொச்சி வரையான தூரம்.

இந்த 75 கிலோமீட்டர் தூர நிலப்பரப்பில் பூநகரிதான் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

மன்னார் பூநகரிப் பாதையில் பெருமளவு தூரம் முன்னேற அனுமதித்துவிட்டு, பூநகரியை நெருங்கும்போது புலிகள் மறிப்புச் சமரை உக்கிரமாக்கலாம். அப்படி உக்கிரமாக்கினால் என்னாகும்? கிட்டத்தட்ட 60 கிலோமீட்டர் நிலப்பரப்பில் மற்றொரு படை முடக்கம் ஏற்படும்.

ஏற்கனவே வவுனியா யாழ் சாலையில் 40 கிலோமீட்டர் தூரத்தை மட்டும் கடந்தநிலையில் பல்லாயிரம் படைகள் முடங்கியுள்ளன.

மேலும் ஒரு பெரும் படைமுடக்கத்துக்கு ஆட்பலம் போதாது. ஆனால் புலிகள் படைமுடக்கத்தை ஏற்படுத்தும் உத்தியோடு மன்னார் பூநகரி சாலையில் படை நீண்டு நிலைகொள்ள அனுமதித்து விட்டு, பூநகரியை மட்டும் நெருங்கவிடாது தடுத்தால், மன்னார் பூநகரி பாதைத் திறப்பும் பாதியில் நிற்க வேண்டியதாகிவிடும்.

அதனால் மன்னார்-பூநகரி பாதைத் திறப்புக்கு கேந்திர தளமான பூநகரியை முதலில் கைப்பற்ற படையினர் திட்டமிட்டனர்.

ஏற்கனவே, வவுனியா- யாழ் சாலையை கைப்பற்ற முன்னரும் கிளி நொச்சியைத்தான் படையினர் கைப்பற்றியிருந் தனர். யாழ் சாலைத் திறப்புக்கு கிளிநொச்சியே கேந்திரமான பகுதியாக இருந்தது. கிளி நொச்சியை மறுபடி புலிகளிடம் இழந்தபின்னரே வவுனியா-யாழ் சாலை நகர்வு பாதியில் நிற்கிறது.

கிளிநொச்சியை கைப்பற்றும் நகர்வுக்காகவே பூநகரியை படையினர் கைவிட்டனர். தவளைப் பாய்ச்சலின் பின்னரும் பூநகரியில் படைத் தளம் இருந்தது.

1995இல் சத்ஜய நடவடிக்கையில் ஈடுபட வசதியாக பூநகரியில் உள்ள படையினர் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டனர்.

தற்போது கிளிநொச்சி புலிகள் வசம் உள்ளதால், மறுபடி பூநகரியை பிடிக்க படையினர் திட்டமிடுகின்றனர். மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றும் திட்டத்தை முன்னரே தீட்டியிருந்தால் பூநகரியை கைவிட்டிருக்க தேவையில்லை. யாழ் வவுனியா சாலையில் படைகளை முடக்கி வைக்க வேண்டியும் நேர்ந்திருக்காது.

அப்போது புலிகளது பலத்தை குறைத்து மதிப்பிட்டனர். புலிகளை வலிய சண்டைக்கிழுத்து அழித்துவிடலாம் என்ற தவறான கணிப்பில் 'ஜயசிக்குறுய்' தொடங்கப்பட்டது.

பூநகரியை கைப்பற்றும் தரையிறக்க நடவடிக்கையில் தமது தரப்பில் பதினாறு படையினர் பலியானதாக படைத்தரப்பு கூறுகிறது. புலிகள் தரப்பில் 45 பேர் பலியானதாகவும் படைத்தரப்பு கணக்கு கூறியுள்ளது.

புலிகள் தரப்பில் பெண்புலிகள் நான்குபேரும் மூன்று ஆண்புலிகளும் 10.06.99 தரையிறக்க முறியடிப்பு சமரில் பலியானதாக அறிவிக்கப்படுகிறது. இதில் காயமடைந்த இன்னொரு பெண்புலியும் பின்னர் பலியானார். மூவாயிரம் ரவைகள், ஆர்.பி.ஜி. போன்ற ஆயுதங்கள் உட்பட பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

தரையிறக்கத் தாக்குதல் கைகூடாததை அடுத்தே 11.06.99 அன்று மன்னாரில் இருந்து விடத்தல்தீவு நோக்கி படை நகர்வு ஒன்று ஆரம்பமானது.

மன்னாரில் இருந்து வடகிழக்கே 17.05 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது விடத்தல் தீவு.

இங்கிருந்து பூநகரி 57.05 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

மன்னாரில் இருந்து விடத்தல் தீவை கைப்பற்றினால், பெரிய மடுவில் நிலைகொண்டுள்ள படையினருடன் தொடுப்பை ஏற்படுத்தலாம்.

இவற்றை இணைத்த இயற்கை அரணாக நாயாறு ஓடுகிறது. எனவே ஆற்றை ஒட்டியதாக இராணுவ வேலி அமைப்பது பாதுகாப்பானது. தரை நகர்வு மூலம் இந்த முன்னரங்க வேலிகளை புலிகள் நெருங்குவது கடினம்.

இந்த தொடுப்பு மூலம் படையினருக்கு பின்வரும் சாதகங்கள் உள்ளன.

தள்ளாடி முகாமை புலிகளது எறிகணை வீச்சிலிருந்து காப்பாற்றலாம்.

மன்னார் பூநகரி சாலையில் படை நகர்வுக்கான பின்தளத்தை புலிகளின் ஊடறுப்பு தாக்குதலில் இருந்து காப்பாற்றலாம்.

ரணகோஷ 04 நடவடிக்கையின் திட்டம் அதுதான்.

புலிகள் விடத்தல் தீவை நோக்கிய படை நகர்வுக்கு எதிர்ப்பைக் காட்டவில்லை. ஆனால் பெரியமடு விடத்தல் தீவு தொடுப்பு நகர்வுக்கு எதிர்ப்புக் காட்டியுள்ளனர். பெரிய மடுவில் இருந்து நகர்ந்த படை புலிகளது எதிர்ப்பை சந்தித்துள்ளது.

திராட்சிக் குளத்தில் புலிகளது அணிகள் படைகளை எதிர்கொண்டு தாக்குதல் நடந்தன.

12.06.99 அன்று திராட்சிக்குளப் பகுதியில் நடந்த கடும் சமரில் புலிகளது விசேட தாக்குதல் அணி தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் பட்டேல் (திருமலை) உட்பட மூன்று புலிகள் பலியாகினர்.

இதே பகுதியில் 13.06.99 அன்றும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் நடந்தது. அம்மோதலில் மூன்று புலிகள் பலியாகினர்.

பெரியமடு-விடத்தல்தீவு தொடுப்பை தடுப்பதில் புலியணிகள் முனைப்புக் காட்டியுள்ளன.

மன்னாரிலிருந்து முன்னேறிய படை பாலமோட்டையூடாக விடத்தல் தீவை நெருங்கியபோதும், பெரிய மடுவில் உள்ள படையினர் விடத்தல் தீவை நெருங்க முடியவில்லை. அவர்கள் பாலமடு சென்றுதான் விடத்தல் தீவை அடையமுடியும். புலிகளின் எதிர்ப்பு பலமாக இருக்கிறது.

மடுவில் நிலைகொண்டிருந்த படையினர் 11.06.99 இரவோடு இரவாக ஆண்டான்குளம் பகுதிக்கு சென்றுவிட்டனர். இதனால் வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வவுனியா செல்லவந்த மக்கள் பலர் படையினரிடம் சிக்கிக்கொண்டனர்.


மக்களை வாடகைக்கு ஏற்றி இறக்கும் மோட்டார் சைக்கிள்காரர்களும் மாட்டிக் கொண்டு முழித்தனர்.

எப்படியோ ரணகோஷ 04 இன் இலக்கும் இன்னமும் எட்டப்படவில்லை. பெருந்தொகையான மக்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதாக மன்னார் அரச அதிபர் கூறியதாக அரச வானொலி 12.06.99 அன்று அறிவித்தது.

ஆனால் மன்னார் அரச அதிபர் 14.06.99 தான் பாப்பாமோட்டை வரை செல்ல அனுமதிக்கப்பட்டார். அங்கு 20-22 குடும்பங்களையே அவர் கண்டுள்ளார்.

அரச அதிபரின் பெயரிலும் தாம் விரும்பிய செய்திகளை பிரசார நோக்கத்திற்காக அரச வானொலி ஒலிபரப்புகிறது. அதனால்தான் நேர்மாறான தகவல்களாக கூறப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாரதர்







## அதிரடி அய்யாத்துரை



**புதைகுழி தோண்டப்போன** முன்னைய் நீதியாளர் தலைமறைவு. ஏன் அவர் தலைமறைவாக வேண்டும்? அங்குதான் இருக்கிறது விஷயம். சரியான நீதியை வழங்க முடியாது என்று தெரிந்துதானே, ஆளைவிட்டால் போதும் என்று மாறியிருக்கிறார். அப்படியானால் சங்கதிகள் நிறைய இருக்குது. என்றுதானே அர்த்தம்!

**சமீபத்திய தேர்தலுக்கு** கவரொட்டி தயாரிக்க அரச பத்திரிகை நிறுவனத்தில் இருந்து காகிதம் போனதாம். அதனைக் கண்டு வயிறு எரிந்த தொழிற்சங்கத்தினர் போராட்டம் நடத்தியிருக்கினம். 'அநியாயமாக போகும் செலவை கட்டுப்படுத்தி எங்களுக்கு தாருங்கோ!' என்று கேட்டவையாம். நியாயம்தான்.

**அரச பத்திரிகை** நிறுவனத்தில் பதவி உயர்வு பெறவேண்டுமானால், அதிகாரத்தரப்புக்கு கொடி பிடிக்க வேண்டும். இது தொன்றுதொட்டு நிலவிவரும் நடைமுறை. கம்பியூட்டர் இயக்குநராக இருந்த ஒருவர் வடமேல் மாகாண தேர்தலில் கொடி பிடித்தாராம். இந்தா பிடி என்று கண்காணிப்பாளர் பதவியை தூக்கிக்கொடுத்தாச்சதாம். பதவிச்சுமை தாங்காமல் அவர் திருதிருவென்று முழித்துக் கொண்டிருக்கிறாராம்.

**தமிழ்க் கட்சியான** கழகத்தின் உள்ளூராட்சித் தலைவர் ஒருவர் கழக மாணிக்கத்தை கண்டித்து காட்டமாக கதைத்தாராம். அதுதான் பிடிக்கப் போய், தடுத்துவைத்து, இராஜினாமா பண்ண வைத்தவையாம். விஷயம் அறிந்து கழக சித்தர் சீருடைத்தரப்போடு தொடர்பு கொண்டாராம். அதன் பின்பே கழக முகாம்கள் சில சுற்றிவளைக்கப்பட்டதாம்.

ஆனாலும் வளைக்க முன்னரே தகவல் கூறப்பட்டுவிட்டதாம். அதனால்தான் பிடித்து வைத்த 'கிளி'யை முன்கூட்டியே பறக்கவிட்டனராம். சிறகு முளைத்த 'கிளி' இராஜினாமாவை திரும்ப வாங்கிக்கொண்டு சிறகடிக்கிறதாம்.

**தொல்லை தவிர்ப்புக்** குழுவினருக்கு கலக்கம் பிடித்திருக்கிறதாம். அடிக்கடி இடம் மாறி மாறிக் கூடுகினமாம். மடியில் கனம் இல்லாமல் மனதில் பயம் வருமோ? எத்தனையோ குழுக்கள் கூடுகின்றன. இந்தக் குழு மட்டும் ஏன் பாதுகாப்புத் தேடுகிறது?

**தென் மாகாண** சபைத் தேர்தலில் அட்டகாசமான இனவாதி ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். அவரது பெயர் ஆரியபொலகொட. ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி என்று இருந்தவர் பொ.ஐ.முன்னணியோடு சங்கமமாகிவிட்டார். தேர்தலில் நிறுத்தி வெற்றியும் பெற்றுக் கொடுத்தாச்சு! முன்னணியின் முகமே மாறிக்கொண்டிருக்குது; 'டமில்' கட்சிகள் இன்னமும் பின்னணியில் நின்று தாளம் போட்டுக் கொண்டிருக்கினம்.

**ஆட்சேபணையைத்** தெரிவிப்போம். ஆனால் எதிர்த்து வாக்களிக்க மாட்டோம்' என்று கூறுகிறார் மலையக தனித்துவத் தலைவர். அதாகப்பட்டது; பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடுவோம் என்கிறார். ஆட்டிவிடவே தேவையில்லை. இவை கிள்ளி யாருக்கு வலிக்கப்போகுது!

**நாங்கள் எதிர்த்தால்** மட்டும் போதுமோ? அவசரகாலச் சட்டத்தை ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஆதரிக்குதல்லோ? நாம் எதிர்த்து பயன் என்ன? என்று மலையக தனித்துவத் தலைவர் விளக்கம் கூறுகிறாராம். தாயைக் குதிரையுவனை தடுக்கவும் கேட்க மாட்டான், அடிக்கவும் சரிய மாட்டான் என்பதற்காக வேடிக்கை பார்க்கலாமோ ஐயா? எதிர்ப்பைக் காட்டுவது தார்மீகக் கடமையல்லவோ? ஆட்சியைக் கவிழ்க்கச் சொல்லியோ கேட்கினம்? பாதகமான சட்டத்திற்கு எதிர்ப்பு. சாதகமான விஷயங்களுக்கு ஆதரவு என்று நிலையெடுக்கக் கூட தயக்கம் ஏன்? என்று ஒரு மூத்த பா.உ. தனக்கு வேண்டியவரிடம் முணுமுணுத்தாராம். யோகமான ராஜனும் எதிர்ப்புக் காட்ட விருப்பப்பட்டவராம். தலைவர் சம்மதிக்கவில்லையாம்.

**வவுனியாவில் இருந்து** கொழும்பு வர பாஸ். வெளிநாடு செல்வது என்றால் அதுக்கு அனுமதி பெற அலைச்சல். ஏஜென்சிக்காரர்களுடன் சென்று மாட்டுப்பட்டால் ரெண்டு எழுத்தார் என்று முத்திரை. குடா நாட்டிலிருந்து புகைப்படச் சுருள் வெளியே கொண்டுபோகக்கூடத் தடை. வன்னிக்கு திடீர் திடீர் என்று போக்குவரத்து தடை. எல்லாம் சரிதான்; ரெண்டு எழுத்து ஆலோசகர் துணைவியாருடன் இலண்டனில் நிற்கிறார். யார் பாஸ் கொடுத்தது? தடை எல்லாம் சாதாரண சனத்துக்குத்தான் என்பது இப்போதாவது விளங்குதோ? அவை உலக அளவில் போக்குவரத்து நடத்துகினம். இங்கு உள்நாட்டில் தடுத்து என்ன புண்ணியம்?

**இவ்வாரப் பொன்மொழி: வைரமுத்து**

“சில நேரங்களில்
மௌனம் என்பது
மன்னிப்பு!
சில நேரங்களில்
மௌனம் என்பது
தண்டனை!”



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

228

# முந்திக்கொள்ள திட்டம் வகுத்த பிரபா

**1991** ஜூலை மாதத்தில யாழ்ப்பாணத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் முக்கிய தளபதிகள் கூடினார்கள்.

ஜூலை மாத நடுப்பகுதியில் யாழ் குடாநாட்டின்மீது பாரிய தாக்குதல் ஒன்றை படையினர் தொடுக்கப்போவதாக புலிகளுக்கு தகவல் கிடைத்திருந்தது.

கொழும்பில் படையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மூலம் புலிகளின் உளவுப்பிரிவு அத்தகவலை திரட்டி இருந்தது.



இதனை அறிந்ததும் பிரபாகரன் மனதில் வேறோர் திட்டம் விரிந்தது. படைகள் நம்மைத் தேடி வருவதற்கு முன்னர், நாம் படையினரைத் தேடி அவர்களது வாசலுக்கே செல்லுவது என்பதுதான் பிரபாகரனின் திட்டம்.

குடாநாட்டை சுருக்குப்போட்டு முற்றுகையிடுவது போன்ற திட்டத்தின் பிரதான தளமாக இருப்பது ஆனையிறவு படைத்தளம்.

அதனைத் தகர்த்துவிட்டால் குடாநாட்டை முற்றுகையிடும் திட்டம் நிறைவேறாது. அந்த ஆனையிறவுப் படைத்தளத்தை தாக்கி கைப்பற்ற முடிவு செய்தார் பிரபாகரன்.

அதற்கு முன்னரே ஆனையிறவு படைத்தளம் பற்றிய தகவல்களை திரட்டுவதில் பொட்டம்மானின் தலைமையிலான உளவுப் பிரிவினர் ஈடுபட்டிருந்தனர்.

ஆனையிறவு தளத்தை தாக்குவதற்கு முன்னர் படைத் தலைமைக்கு அதிர்ச்சியைக் கொடுக்கவே கூட்டுப் படை தலைமையகம் மீதும் கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

கூட்டுப்படை தலைமையக தாக்குதலால் படைத்தலைமை கதிகலங்கி நிற்கும் போது, யாழ் குடாநாட்டில் முக்கிய படைத் தளம்மீது பாய்ச்சலை நடத்துவதே பிரபாவின் திட்டம்.

ஜூலை மாதத்தில் பெரும் தாக்குதலை நடத்த பிரபாகரன் திட்டமிட்டதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

1983 ஜூலையில்தான் கொழும்பில் பெரும் இனக்கலவரம் வெடித்தது. ஜூலை மாதம் என்பது தமிழ் மக்களுக்கு துன்பங்கள் நிறைந்த மாதம் என்றே கருதப்பட்டு வருகிறது.

அதனால் அதே ஜூலை மாதத்திலேயே அரச படைகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்த பிரபாகரன் விரும்பினார்.

'எமக்கு துன்பத்தை தந்தவர்களுக்கே அதனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்' என்பது பிரபாகரன் அடிக்கடி கூறுகிற கருத்து.

ஜூலையில் ஆனையிறவுப் படைத்தளத்தை தாக்குவது என்று முடிவு செய்ததும் அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.

ஆனையிறவில் தாக்குதலைத் தொடுக்கும்போது, குடாநாட்டின் ஏனைய முனைகளில் இருந்து படையினர் முன்னேறினால் எதிர்கொள்வது எப்படி என்பது பற்றியும் தளபதிகளுடன் பிரபாகரன் ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் பிரபா தனது தளபதிகளுடன் ஆலோசனை நடத்திய செய்தி பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

அரச படைகள் நடத்தப்போகும் தாக்குதலைப் பற்றி ஆராயவே மாநாடு நடத்தப்பட்டதாக செய்திகள் வந்தன.

இச் செய்திகளைப் பார்த்த படைத்தரப்பு புலிகள் படையினரது தாக்குதல் தொடர்பாகத்தான் கடுமையாக யோசிக்கத் தொடங்கியுள்ளனர் என்று நினைத்துவிட்டது.

அதனால் படைத் தளங்களின் பாதுகாப்பை கெட்டிப்படுத்தும் யோசனை எழவில்லை.

## நிரந்தரப்படை

ஆனையிறவு படைத்தளத் தாக்குதலுக்கு முன்பாகவே புதிய படைப்பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுவிட்டது.

'சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு' என்பது அதன் பெயர். முதன் முதலாக புலிகள் அமைப்பில் உருவாக்கப்பட்ட நிரந்தர படைப்பிரிவு அதுதான்.

அதுவரை புலிகள் அமைப்பில் பிராந்திய ரீதியான படையணிகளும், கெரில்லா குழுக்களுமே இருந்தன.

நிரந்தரப் படைப்பிரிவு என்பது ஒரு பிராந்தியத்துக்குட்பட்டதல்ல. அரசிடம் உள்ள இராணுவம் போல, இதுவும் எங்கு வேண்டுமானாலும் சென்று போரிடக்கூடியது.

கெரில்லா போர் முறையில் இருந்து மரபுப் போர் முறைக்கு மாறும் கட்டத்திலேயே நிரந்தரப் படைப்பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

போர் அனுபவம். ஆட்பலம். ஆயுத பலம், குறிப்பிட்ட தளப்பிரதேசம் ஆகியவை உள்ள சூழலில்தான் நிரந்தரப் படைப்பிரிவுகளை உருவாக்க இயலும்.

புலிகள் அத்தகைய வளர்ச்சியை எட்டியிருந்தமையால் நிரந்தரப் படைப்பிரிவை உருவாக்கினார்கள்.

சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவுக்கு தளபதியாக அப்போது நியமிக்கப்பட்டவர் பால்ராஜ்.

சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவை ஆனையிறவுத் தாம்மீதான தாக்குதலுக்கு பிரதான படையணியாக இறக்கத் திட்டமிடப்பட்டது.

## கண்டனம்

இதற்கிடையே கொழும்பில் கூட்டுப்படை தலைமையக தாக்குதலை அடுத்து எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ கடும் கண்டனம் தொடுத்திருந்தார்.

'குண்டு வெடிப்பை தடுத்து நிறுத்த முடியாமைக்கு பாதுகாப்பு அமைச்சும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும் பொறுப்பேற்க வேண்டும்' என்று ஸ்ரீமாவோ சாடியிருந்தார்.

'தற்கொலைத் தாக்குதலை எப்படி தடுக்க முடியும்?' என்று ஜனாதிபதி பிரேமதாசா கேள்வி எழுப்பியிருந்தார்.

கொழும்பில் புலிகளது நடவடிக்கைகளை தடுக்க விசேஷ உளவுப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது.

அதன் தலைவராக லக்கி அல்கம நியமிக்கப்பட்டார். இவர் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றவர். உளவுத்துறை சம்பந்தமான தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் அங்கு பயிற்சி பெற்றவர்.

அப்போதுதான் நாடு திரும்பியிருந்தார் அவரையே புலிகளை தலைநகரில் முறியடிக்கும் உளவு வேலைக்கு பொறுப்பாக நியமித்தார் பிரேமதாசா.

(தற்போது ஐ.தே.கட்சியின் இராணுவ ஆலோசகராக லக்கி அல்கம நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் பாதுகாப்பு செயலாளராகவோ அல்லது பாதுகாப்பு அமைச்சராகவோகூட இவர் நியமிக்கப்படலாம் என்று தகவல்)

## மாநாடுகள்

கொழும்பில் கைதுகள் பரவலாக இடம் பெறுவதை தமிழ்க் கட்சிகள் கண்டித்தன.

அதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் மாநாடுகள் நடத்தப்பட்டன.

இம் மாநாடுகளில் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ ஆகிய கட்சிகளது பிரதிநிதிகள் பங்கு கொண்டனர்.

கொழும்பில் படையினராலோ பொலிசாரினாலோ கைது செய்யப்படுவோர் புலிகள் அல்ல என்பதை தமிழ்க் கட்சிகள் உத்தரவாதப்படுத்தினால் விடுதலை செய்யப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.

அக் கட்டத்தில் அவசரகால சட்டத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். எதிராக வாக்களித்து வந்தது. ரெலோ முதலில் ஆதரவாகவே வாக்களித்தது. பிரேமதாசா மறைவின்பின்னரே ரெலோ எதிர்த்து வாக்களிக்க தொடங்கியது.

அந்த மாநாட்டின் பின்னர் தமிழ்க் கட்சிகளால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பலர் விடுதலையாகினர்.

தற்போது அவ்வாறான நிலை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரெலோ தலைவர்களில் ஒருவரான வினோதலிங்கம், மற்றும் ஈ.பி.டி.பி. எம்.பி ஒருவரது மெய்க்காவலர் ஆகியோரும் அவசரகால சட்டத்தின் கீழ் ஆதாரமில்லாத புகாரில் பல வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

## தெரிவுக்குழு

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் என்று பிரேமதாசா அழைப்பு விடுத்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்கா பிரேமதாசாவுக்கும் நல்ல நண்பர்.

எதிரியின் கோட்டைக்குள் ஆள் பிடிப்பதில் பிரேமதாசா சமர்த்தர்.

இனப்பிரச்சனை தொடர்பான தெரிவுக் குழுவுக்கு மங்கள முனசிங்காவை தலைவராக நியமித்தார் பிரேமதாசா.

'எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரையே தலைவராக நியமித்துவிட்டார். இனப்பிரச்சனைத் தீர்வில் இரு பெரும் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செயற்பட முன்வந்துள்ளமை நல்ல சகுனம்' என்று பத்திரிகைகள் பலவும் பாராட்டியிருந்தன.

ஆனால் பிரேமதாசாவின் திட்டமே வேறு. எதிர்க்கட்சி எப்போதுமே தனக்கு ஒத்துழைப்பு வழங்காது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

தீர்க்கப்பட முடியாத பிரச்சனையை இழுத்தடிப்பதில் எதிர்க்கட்சியையும் பங்காளியாக்கிக் கொண்டால் அரசு மீது மட்டும் பழி வராதல்லவா.

(அன்று பிரேமா காட்டிய வழியில்தான் இன்றைய ஆட்சியினரும் செல்வதை நன்கு காணலாம்)

இந்த தெரிவுக்குழுவை தமிழ்க் கட்சிகள் வரவேற்றிருந்தன. அதே சமயம் புலிகள் பின்வருமாறு கூறியிருந்தனர்:

"ஸ்ரீ லங்கா பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவால் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று நினைப்பது தவறு.

இம்முயற்சியும் காலத்தைக் கடத்தும் ஒரு நடவடிக்கையே.

ஏனெனில் ஐ.தே.கட்சி அரசால் இதுவரை நடாத்தப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் உருப்படியாக எதனையும் சாதிக்கவில்லை. இவற்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

முக்கிய சிங்களக் கட்சிகளான ஐ.தே. கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (அப்போது ஜே.வி.பி வீழ்ச்சியடைந்திருந்தது) இரண்டும் இணைந்து தமிழ் மக்களது பிரச்சனையைத் தீர்க்க முன்வருவது இதுவே முதற்தடவையாக இருந்தாலும், இவர்களால் உருவாக்கக்கூடிய தீர்வுகள் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இருக்கமுடியாது.

ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு எந்தக்கட்சி அதிகளவு உரிமைகளை வழங்க முற்படுகிறதோ, அக் கட்சி சிங்கள மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்கும் என்பது வரலாறு.

வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைந்திருப்பதை விரும்பாத முக்கிய சிங்களக் கட்சிகளும், சோரம் போகும் தமிழ்க் கட்சிகளும் இத் தெரிவுக்குழுவில் இணைந்து தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வினை உருவாக்க முடியுமா?

விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் இன்றி எந்தவொரு தீர்வையும் அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ நடைமுறைப்படுத்த முடியாது.

உண்மையில் பிரேமதாசா சமாதானம் விரும்பினால் நிபந்தனைகளை கைவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கு முன் வரட்டும்." என்று புலிகள் கூறியிருந்தனர்.



புலிகளது கூற்று இறுதியில் உறுதியானது. தெரிவுக்குழு பல்லாண்டுகள் கூடி ஆராய்ந்து வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு யோசனை கூறியது.

இறுதியில் ஆட்சிமாற்றத்துடன் அத் தெரிவுக்குழுவும் காணாமல் போனது.

தெரிவுக்குழு உருவான தருணம்தான் யாழ் குடாநாட்டில் ஆனையிறவில் சமர் முழக்கம் கேட்டது.

படைத்தளம் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. அந்த பாரிய ஆகாய, கடல், வெளிச் சமர் அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)

---

# சிவராசனுடன் சில நாட்கள்

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி தூக்குத் தண்டனையின் விளிம்பில் இருந்து தப்பி வந்தவர் ரங்கநாத். கன்னடக்காரரான இவர் தனது அனுபவங்களை விகடனில் எழுதியுள்ளார். அதில் இருந்து முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

ஒரு பக்கம் என்னுடைய கட்சியின் தலைவரையே கொன்றவர்கள் என் நிழலில் இருப்பது வேதனையாக இருக்க, மற்றொரு பக்கம் அவர்கள் இந்திய அமைதிப்படை இலங்கையில் செய்த அட்டூழியங்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லும்போது அதுவும் என் வேதனையைக் கிளறியது.

கொஞ்ச கொஞ்சமாக சிவராசனும் அவருடன் வந்தவர்களும் என்னிடம் சகஜமாகப் பேசத் துவங்கினார்கள்.

ஆரம்பத்தில் ஈழப் போராட்டத்துக்கு ஆதரவாக போஸ்டர் ஒட்டியபோது சிங்கள இராணுவத்தின் கையில் அகப்பட்டு சித்திரவதை அனுபவித்திருக்கிறார் சிவராசன். அதன்பிறகுதான் சிறீ சபாரத்தினத்தின் டெலோ இயக்கத்தில் சேர்ந்தாராம். ஒரு போராளியாக இராணுவத்தின் கையில் சிக்கியபோது சிவராசனைப் பிடித்து அவரது பிறப்புறுப்பில் மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை நடந்திருக்கிறது. அதன்பிறகு, போராளி இயக்கத்தை மாற்றிக்கொண்டு முழுமூச்சாக ஆயுதம் எடுத்திருக்கிறார்.

திடீர் திடீர் என்று உணர்ச்சிவசப்பட்டு புரட்சி தெறிக்கும் வார்த்தைகள் கொண்ட பாட்டுக்களை ராகம் போட்டுப் பாடுவார். வீட்டிலிருந்து வெகுதூரத்தில் ஒரு டிரக் வண்டி வந்தால்கூட அவரது காது மடல்கள் விறைத்துக் கொள்ளும். டிரக் வண்டி எங்கள் வீட்டைத் தாண்டிப் போகிறவரை உன்னிப்பாகக் கவனித்து, அது பொலிஸ் வண்டி இல்லை என்று உறுதியான பிறகே ரிலாக்ஸ் ஆவார்.

இந்திய அமைதிப்படை பற்றிய பேச்செடுத்தாலே சுபாவின் நரம்புகள் முறுக்கேறிக்கொள்ளும்.

தன்னுடைய தோழிகளுடன் பத்துப் பன்னிரண்டு பேராகப் போய்க்கொண்டிருந்தபோது, இந்திய அமைதிப்படையின் சீக்கிய ரெஜிமெண்டைச் சேர்ந்த வீரர்கள் சுற்றி வளைத்த



தாகவும், அவர்களிடமிருந்து தான் உள்பட மூன்று பேர் மட்டும் தப்பி வந்துவிட்டதாகவும் மற்றவர்களையெல்லாம் பாலியல் வல்லுறவு புரிந்து வெறும் சடலமாக அவர்கள் வீடுகளில் கொண்டு வந்து இந்திய அமைதிப்படை போட்டதாகவும் என்னிடம் சொன்னார் சுபா.

அதேமாதிரி நாச்சிமார் கோவில் பகுதியில் அகதிகளாகத் தங்கியிருந்தபோது ஐ.பி.கே.எஃப். வீரர்கள் ஒரு பெண்ணைத் தன்னெதிரிலேயே இழுத்துச்சென்று வல்லுறவு கொண்ட சம்பவமும்தான் தீவிரவாத இயக்கத்தில் சேரத் தூண்டுதலாக இருந்தது என்று சொன்னார் சுபா.

ஒருநாள் சர்வ ஜாக்கிரதையாக அவர்கள் ஒரு பெல்ட் வெடிகுண்டை வெளியே எடுத்தனர். ராஜீவைக் கொலை செய்ய தணு இடுப்பில் கட்டியிருந்த அதே வகையான பெல்ட் என்பது அவர்கள் பேச்சில் புரிந்தது.

அதை வெடிக்க வைக்கும் நுணுக்கங்களை சிவராசன் மற்றவர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தார்.

ராஜீவ் ஸ்ரீபெரும்புதூரில் கொல்லப்படவில்லையென்றால் அடுத்ததாக அவர்கள் கலந்துகொள்ள இருந்த கிருஷ்ணகிரி பொதுக் கூட்டத்தில் இன்னொரு மனித வெடிகுண்டை நெருங்க வைத்துக் கொல்லத் திட்டமிட்டிருந்தனராம்.

கிருஷ்ணகிரி திட்டத்தை நிறைவேற்ற காந்தன் என்பவர் தலைமையில் மற்றொரு டீம் தயாராக இருந்ததாம்.

ஸ்ரீ பெரும்புதூரிலேயே ராஜீவ் கொல்லப்படவே, காந்தன் டீமுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அந்த பெல்ட் வெடிகுண்டைத்தான் சிவராசனிடம் கொடுத்து விட்டுப் போயுள்ளனர். காந்தன் டீம் உடனே இலங்கைக்குத் திரும்பிப்போய்விட்டது. அவர்களின் கிருஷ்ணகிரி செயல்திட்டம்பற்றி கடைசி வரை பத்திரிகைகளில் செய்தி வரவில்லை!

சிவராசனும் நானும் எப்படி பொலிஸில் மாட்டிக்கொண்டோம் என்பதைச் சொல்லி விடுகிறேன்...

எங்கள் வீடு இருந்த ஏரியாவுக்குப் பக்கத்திலேயே கோனனகுண்டாவில் புரோக்கர் மூலம் ஒரு வீடு பார்த்தோம். அவர்களே இந்த வீட்டுக்கும் அட்வான்ஸ் கொடுத்தனர்.

ஆகஸ்ட் 15ம் தேதி வீட்டுக்கு மாற இருந்தனர். ஆனால், அன்றைய தினம் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தவர்களுக்கு ஆபரேஷன் இருந்ததால் நானும் அவர்களோடு ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேண்டியதாயிற்று. இவர்களுக்கு கன்னடம் தெரியாது என்பதால் நான்தான் ஆஸ்பத்திரி ஊழியர்கள், டாக்டர்களிடம் பேசி கேட்டு மொழிபெயர்ப்புச் சேவை செய்து கொண்டிருந்தேன். இதனால் ஆஸ்பத்திரியிலேயே இருந்து விட்டேன். மறுநாள்தான் வீட்டுக்கு வந்தேன்.

சிவராசனும் அவரது குழுவினரும் அன்ட்பார்ட்டி கோனன குண்டா வீட்டுக்குப் போனார்கள். எங்களுடைய காஸ் சிலிண்டரையும் கூடவே கொண்டு போனார்கள்.

ஒரு வழியாக இவர்களிடம் இருந்து தப்பினோம் என்று நிம்மதியாக மூச்சுவிட்டேன்.

அதே சமயம், அவர்கள் போட்ட கட்டளைப்படி, ஏற்கனவே காயம்பட்ட சிலர் முத்தத்தியிலும் பிருட்டாவிலும் தங்க வைத்திருந்ததால், அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க என்னுடைய நண்பர்களை அதே ஆகஸ்ட்-16ம் திகதி அங்கு அனுப்பியிருந்தேன். அவர்கள் அந்த ஊர்களுக்குப் போய்விட்டு மறுநாள் 17ம் தேதி காலையில் பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தனர். முத்தத்தி பகுதியில் பொலிஸ் ஜீப்புக்களும் வேன்களும் ஏராளமாகக் குழுமிக் கொண்டிருக்கிறது என்று வந்து சொன்னார்கள்.

நான்கூட முதலில் வீரப்பனைப் பிடிப்பது சம்பந்தமாகத்தான் பொலிஸ் போய் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் பத்திரிகைகளில் அங்கு இருபது விடுதலைப் புலிகள் கண்டுபிடிக்கப்பட்டதும், பலர் சயனைடு குப்பியைச் சாப்பிட்டு இறந்தது பற்றியும் செய்தி வர.... எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

காயம்பட்ட அந்தப் புலி கள் தங்கியிருந்த வீட்டை நான்தான் தங்க ஏற்பாடு செய்திருந்தேன். அந்த வீட்டு உரிமையாளர் நிச்சயம் என்னைக் காட்டிக் கொடுத்திருப்பார் என்று புரிந்துவிட்டது. நானே பொலிஸாரிடம் முந்திக்கொண்டு உண்மையைச் சொல்ல முடிவெடுத்தேன். அதன் பலன் தான் நானே ஒரு குற்றவாளியாகச் சித்தரிக்கப்பட்ட கொடுமை!

(இன்னும் கூறுவார்)



படிப்பகம்

www.padippakam.com

# நடுநிலை நாடகங்கள் நழுவல் கோஷங்கள்

அலசுவது - இராஜதந்திரி

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்பினரால் சமாதானப் பேரணி ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

'யுத்தம் வேண்டாம். சமாதானமே வேண்டும்'. 'அரசும், புலிகளும் யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்த வேண்டும்' என்பனவே முக்கிய கோஷங்களாக இடம்பெற்றிருந்தன.

இவ்வாறான கோஷங்கள் இடம்பெறுவது இது முதற்தடவையல்ல. பல்வேறு அமைப்புக்கள் இவ்வாறான கோஷங்களை முன்வைத்து வருகின்றன.

இக் கோஷங்களை மேலோட்டமாக நோக்கும்போது முற்போக்கானவையாகவும், இன்றைய தேவையாகவும் தோன்றுகின்றன. ஆழமாக உற்று நோக்கினால் இக் கோஷங்கள் போலித்தனமானவை என்பது நன்கு புலனாகும்.

இன்றைய யுத்தம் எதற்காக, எவரால் நடத்தப்படுகிறது. இதன் பின்னணி என்ன போன்றவற்றை நோக்காது, இக் கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

யுத்தம் கொடியது என்பதால், அதற்கு எதிரான கோஷங்கள் மக்களால் ஏற்கப்படும், மக்களிடம் விலைபோகும் என்ற அடிப்படையிலேயே இக் கோஷங்களை தமிழ்க் கட்சிகளும் தம் கையில் எடுத்துள்ளன.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே யுத்தம் நடக்கிறது. தாம் இவற்றுக்கு அப்பாற்பட்ட நடுநிலையாளர்கள் என்பதுபோல இக் கோஷங்களை எழுப்புவோர் நாடகமாடுகின்றனர்.

நடு நிலை என்பது அப்பட்டமான ஏமாற்றேயாகும். முதுகெலும்பில்லாத நழுவல் போக்காளர்கள் பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுவதையே 'நடுநிலை' என்று கூறமுற்படுகின்றனர்.

அடக்கும் அரசும், அடக்கப்படும் மக்களும் எதிரும் புதிருமாக நின்று போராடும்போது இதில் நடுநிலை என்ற பேச்சுக்கே இடமிருப்பதில்லை. இரண்டில் எந்தப் பக்கம் நிற்பது என்பதையே முடிவு செய்தாக வேண்டியிருக்கும்.

சோவியத் யூனியனில் மாபெரும் புரட்சியை நடத்தியவர் மாமேதை லெனின். அந்தப் புரட்சிக் காலகட்டத்திலும் தம்மை நடுநிலையாளர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் இருந்துள்ளனர்.

அவர்களை கடுமையாகச் சாடிய லெனின், 'நடுநிலை என்பது கடைசியில் தவறான பக்கம் சாய்வதில்தான் கொண்டு போய்விடும்' என்று கூறியிருந்தார்.

நம்நாட்டில் இன்று நடைபெறும் யுத்தம் என்பது, வெறுமனே யுத்தம் செய்யும் ஆசையால் உந்தப்பட்டு நடைபெறும் யுத்தமல்ல. யுத்தத்துக்கும், அதில் ஈடுபடும் தரப்புகளுக்கும் திட்டவட்டமான நோக்கங்கள், இலக்குகள் இருக்கின்றன.

அமைதிவழியிலான போராட்டங்கள் அரச ஆயுதப்படைகள் மூலம் ஒடுக்கப்பட்டதின் பிரதிபலிப்பாகவே ஆயுதப்போராட்டம் வடக்கு-கிழக்கில் வெடித்தெழுந்தது.

தமிழ் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமை என்பது ஜனநாயக உரிமைகளில் ஒன்றாகும். சுயநிர்ணய உரிமை என்றால் ஒரு தேசிய இனம் தனது தலைவிதியை தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையாகும்.

எனவே சுயநிர்ணய உரிமைக்காக அமைதி வழியில் போராடினாலும், ஆயுதம் ஏந்திப் போராடினாலும், அதாவது போராட்ட வடிவம் எதுவாக இருந்தாலும், அவை ஜனநாயகப் போராட்டங்களேயாகும்.

சீனாவில் மா ஓ சேதுங் மாபெரும் மக்கள் விடுதலைப் படையை (செஞ்சேனை) கட்டியமைத்து மக்கள் யுத்தத்தை முன்னெடுத்தார். புதிய ஜனநாயகப் புரட்சி என்றே அது அழைக்கப்பட்டது.

ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டங்கள் தேசிய ஜனநாயகப் புரட்சிகள் என்றே அழைக்கப்பட்டுள்ளன.

இங்கும் ஈ.பி.ஆர்.எ.ஃப். அமைப்பினர் 1981இல் நடத்திய முதலாவது மாநாட்டில் 'விடுதலைக்கான தேசிய ஜனநாயகப் புரட்சியை நடத்துவது' என்றே தமது வேலைத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

தற்போது ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். மற்றும் அதனில் இருந்து உருவான ஈ.பி.டி.பி போன்றவை தேர்தலில் குதிப்பதையே ஜனநாயகம் என்றும், அரசு அனுமதித்துள்ள சட்ட வரையறைகளுக்கு உட்பட்ட சிலபோராட்டங்களையே ஜனநாயகப் போராட்டங்கள் என்றும் கூறத்தலைப்பட்டுள்ளன.



ஏனைய தமிழ்க் கட்சிகளும் தமது தற்போதைய அரசியலையே ஜனநாயக வழி என்று கூறிவருகின்றன.

இவ்வாறு தமது தற்போதைய சரணடைவு நிலைப்பாடுகளுக்கு ஜனநாயகப் போர்வை போர்த்துவதில் இக் கட்சிகள் ஆர்வமாக உள்ளதால், ஆயுதப்போராட்டத்தை ஜனநாயக விரோதப் போராட்டமாக சித்தரிக்க தலைப்பட்டுள்ளன.

இத்தகைய அடிப்படையில் நின்று நோக்குவதால்தான் அரசின் இராணுவ நடவடிக்கைகளையும், புலிகளது ஆயுதப் போராட்டத்தையும் ஒரே தராசில் வைத்து எடை போடுகின்றன.

இரண்டு தரப்பும் ஒரே குணாம்சம் கொண்டவை, அவை நடத்தும் யுத்தமும் ஒரே விதமானவை என்பதுபோலவே இக் கட்சிகள் வெளியிடும் கருத்துக்களும் அமைந்துள்ளன.

இன்றைய யுத்தமானது அரை குறையான தீர்வொன்றை தமிழ் பேசும் தரப்பின் தலையில் திணிக்கும் இறுதி இலக்கோடு நடத்தப்பட்டுவருகிறது.

அரைகுறைப் பொதியை தமிழ் பேசும் தரப்பு மறுதலிக்க முடியாதளவுக்கு அதன் பேரம் பேசும் பலத்தை தகர்த்தெறிவதே பிரதான நோக்கமாக அமைந்திருக்கிறது.

இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் பொறுப்பை தம் ஆயுதப்படைகளிடம் அரசு ஒப்படைத்துள்ளது.

அரசியல் தீர்வு குறித்து ஏனைய தமிழ்க் கட்சிகள் முன்வைத்த சகல யோசனைகளும் குப்பைக் கூடையில் போடப்பட்டது மூலம், குறைந்த பட்ச அபிலாசைகளைக்கூட நிறைவு செய்ய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

எனவே, தாம் கொடுப்பதை வாங்கி தலை குனிந்து நிற்கும் நிலைக்கு தமிழ் பேசும் தரப்பை இட்டுச் செல்வதே இன்றைய யுத்தத்தின் இலக்காக இருக்கிறது.

ஆட்சியாளர் நினைத்தாலும் கைவிட முடியாதளவுக்கு, யுத்தம் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. பௌத்த பேரினவாதம் யுத்த பிரசாரத்தால் உசுப்பப்பட்டு எழுந்து நிற்கிறது.

இனிமேல் பாதி வழியில் யுத்தத்தை நிறுத்திவிட்டு புலிகளோடு பேச்சு நடத்த சந்திரிக்கா அம்மையார் செல்வாரேயானால், பேரினவாதம் அவரைப் பிடித்து உண்ணும் நிலை உருவாகியுள்ளது.

சமீபத்திய தென் மாகாண சபைத் தேர்தலிலும் பொ.ஜ.முன்னணியின் வாக்கு வங்கி பெரும் சரிவை எதிர்நோக்கியுள்ளது. இம் மாகாணத்தில 1994இல் 56.94 வீதமாக இருந்த வாக்கு வீதம், இம்முறை 44.90 வீதமாக சரிவடைந்துள்ளது.

எனவே, யுத்தத்தை நிறுத்தவோ, பேரினவாத பெருமிதங்களை தூண்டிவிடும் முழக்கங்களை முட்டை கட்டிப் போடுவதற்கோ ஆட்சியாளர்கள் முன்வரப் போவதில்லை. அடுத்த தேர்தல்கள் பற்றிய பயத்தில்தான் மீதிக் காலத்தை கடந்தாக வேண்டியிருக்கும்.

பேரினவாத நலன், ஆட்சியாளரின் அரசியல் நலன் ஆகிய இரண்டும் ஒன்று கலந்த நிலையில்தான் இன்றைய யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவும் இனப்பிரச்சனையை தீர்க்கப்போவதில்லை, பேச்சு என்று காலத்தை இழுத்தடிப்பதே நோக்கம் எனக் கூறியே புலிகள் பேச்சை முறித்தனர்.

புலிகளின் கணிப்பு சரியானது என்பதையே ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் அழுத்தம் திருத்தமாக நிரூபித்துள்ளன.

புலிகள் தவிர்ந்த ஏனைய சமரசவாத தமிழ்க் கட்சிகளுடன்கூட அரசியல் தீர்வொன்றுக்கான உடன்பாட்டை எட்டுவதற்கு ஆட்சியாளர்கள் அக்கறை காட்டியிருக்கவில்லை.

இவற்றுக்கெல்லாம் மேலாக சமீபத்தில் சர்வமத தூதுக்குழுவிடம் 'யுத்தத்தை தொடர்வது தவிர வேறு வழியில்லை' என்று அம்மையார் கூறியிருக்கிறார்.

அதேசமயம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வெளியிட்ட கருத்துக்களையும் ஆட்சியாளர்கள் செவிமடுக்கவில்லை.

திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் பேச்சு நடத்த தயார் என்றே அவர் கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக பேச்சு நடத்தலாம் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

எங்கிருந்து பேச்சை ஆரம்பிப்பது? எப்படி ஆரம்பிப்பது? என்பதை புலிகள் திட்டவட்டமாக கோடிட்டுக் காட்டியுள்ளனர். எனவே தீர்வு குறித்தோ, பேச்சுத் தொடர்பாகவோ புலிகளிடம் எவ்வித திட்டமும் கிடையாது என்று கூறுவதற்கு இடமில்லை.

எனவே, இன்று யுத்தத்தை நிறுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் ஆட்சியாளரைச் சேர்ந்ததேயாகும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு ஆட்சியாளர்கள் இணங்குவார்களேயானால் யுத்தம் நிறுத்தப்பட்டுவிடும்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் அதனை விரும்பவில்லை. தமிழ் பேசும் தரப்பின் பக்கம் நியாயம் இருப்பதால் துணிந்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கோர முடிகிறது. ஆட்சியாளர்களிடமோ அரை குறையான தற்போதைய பொதியைவிட வேறெதுவும் கொடுப்பதற்கு இல்லையென்பதால் மத்தியஸ்தத்துக்கு தயாராக இல்லை.

எனவே, ஆட்சியாளர்கள் யுத்தத்தை கைவிடமுடியாத நிலையில் உள்ளனர். புலிகளோ யுத்தத்தை நிறுத்தும் மார்க்கத்தை கூறியுள்ளனர்.

இந்நிலையில் அரசையும் புலிகளையும் ஒரேவிதமாக கருதி, இரு தரப்புமே யுத்தம் தொடர்வதற்கு காரணம் என்று கூறுவது நழுவல் போக்கேயாகும்.

## யார் பொறுப்பு யுத்தத்துக்கு?

ஆட்சியாளர்கள்தான் யுத்தத்தை நிறுத்த வேண்டியவர்களாவர். பந்து அவர்களது எல்லைக் கோட்டுக்குள்தான் இருக்கிறது.

உண்மையாகவே சமாதானத்தையும், அரசியல் தீர்வையும் விரும்பும் சக்திகள் சமாதானத்துக்கு பிரதான தடைக்கல் எதுவென்று பார்த்து அதனை அகற்றவே போராட வேண்டும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு அரசு மறுப்பதே இன்று தொடரும் யுத்தத்துக்கு முக்கி காரணமாகும். எனவே இதனை அரசு மறுப்பதை எதிர்த்து குரல் கொடுப்பதும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு உள்நாட்டிலும், வெளியுலகிலும் போாதரவை திரட்டுவதற்குமே பாடுபட்டாக வேண்டும்.

தாமாக வலிய முன்வந்து தகுந்த தீர்வை வழங்க ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வாறான சூழலில் அரசும், புலிகளும் பேச்சு நடத்த வேண்டும் என்று கோருவது அர்த்தமற்றதாகும்.

அவ்வாறு பேச்சு நடந்தால்கூட அடுத்த யுத்தத்துக்கு தயாராகும் கால அவகாசமாகவே அது கொள்ளப்படும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மட்டுமே இதுவரை கால பேச்சுக்களிலிருந்து மாறுபட்ட பேச்சு நடப்பதற்கான சூழலை ஏற்படுத்தித்தரக் கூடியதாகும்.

எனவே, யுத்தத்தை நிறுத்துவதற்கான கோஷங்களும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையும் ஆட்சியாளரை நோக்கியே முன்வைக்கப்பட வேண்டியதாகும்.

யுத்தத்தை தொடர்வதற்கான ஆட்சியாளரின் நோக்கங்களை அம்பலப்படுத்த வேண்டியதே தமிழ் பேசும் தரப்பின் கடமையாகும்.

இதற்கு மாறாக அரசையும், புலிகளையும் நோக்கி கோரிக்கை விடுப்பது, யுத்தப் பொறுப்பாளிகளான ஆட்சியாளர்கள் மீது உலகக் கண்டனம் ஒன்று குவியாது பரவலாக்கி, அதனை புலிகள்மீதும் சுமத்தவே வழி வகுக்கும். அதனால் ஆட்சியாளருக்கே அதிக இலாபம் கிட்டும்.

ஆனால் இதுவெல்லாம் தமிழ்க் கடசிகளுக்கு தெரியாது என்று கருத இடமில்லை. அக் கட்சிகள் போராட்டம் நடத்துவதே இறுதியில் ஆட்சியாளருடன் சமரசம் செய்து கொள்வதற்காகத்தான்.

'நாம் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினோம், எமக்கும் செல்வாக்கு இருக்கிறது? எம்மையும் கொஞ்சம் கவனியுங்கள்!' என்று ஆட்சியாளருடன் பேரம் பேசி சில சலுகைகளையும் பெற்றுக் கொள்வதே இக் கட்சித் தலைமைகளது உண்மையான நோக்கமாகும்.

இதற்கு தோதாகவே 'நாம் உங்களை மட்டுமல்ல புலிகளையும் கண்டித்தோம்' என்று கூறத்தக்கதாக புலிகளை சாடியும் பேசிவருகின்றனர்.

புலிகளையும் பிரபாகரனையும் நேரடியாக கண்டிக்கும் இவர்கள், இன்றுவரை சந்திரிக்கா அம்மையாரை நேரடியாக விமாசிக்கவில்லை என்பதையும் கூர்ந்து கவனித்தாக வேண்டும். பொதுவாக அரசு என்றோ, படைகள் என்றோதான் கண்டித்து வருகின்றனர்.

அம்மையாரை பெயர்கூறி கண்டித்தால் எந்த முகத்தோடு சென்று சலுகைகள் கேட்டு நிற்பது என்ற தயக்கமே அதற்கு காரணமாகும்.

வவுனியாவில் நடந்த பேரணியில்கூட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று வற்புறுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தனியார் வானொலியான 'சக்தி'யிலும் அது கூறப்பட்டிருந்தது. ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். வெளியிட்ட பிரசுரத்திலும், பேரணியிலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற விடயமே காணப்படவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். மட்டுமன்றி சகல தமிழ்க் கட்சிகளுமே ஆட்சியாளர்கள் முகம் சுளிப்பார்கள் என்பதால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையைப் பற்றி தவிர்க்க முடியாமல் எப்போதாவது முணுமுணுக்கிறார்களே தவிர உரத்து முன்வைக்க துணியவில்லை.

எனவே, யுத்தத்தை நிறுத்தக்கூடிய முக்கியமான கோரிக்கையையே கையில் எடுக்கத் துணியாத இக் கட்சிகள் யுத்த நிறுத்தம் பற்றி கூப்பாடு போடுவது அர்த்தமற்றதாகும்.

அரசை எதிர்க்கவும் துணிச்சலற்று, புலிகளையும் எதிர்க்கவும் திராணியில்லாமல் அரசையும் புலிகளையும் கண்டித்து நடுநிலை நாடகமாடுகின்றனர். இத்தகையோரின் சமாதான முழக்கங்களால் யாதொரு பலனும் ஏற்படப்போவதில்லை.

அதுமட்டுமன்றி இத்தகைய நழுவல் போராட்டங்களை ஜனநாயகப் போராட்டங்களாக சித்தரிப்பது மூலம் ஆயுதப் போராட்டத்தையும் தமிழ்க் கட்சிகள் கொச்சைப்படுத்துகின்றன.

தற்போதைய காலகட்டத்தில் புலிகளே பிரதான அரசியல் இராணுவ சக்தியாக உள்ளன. அவர்களது ஆயுதப் போராட்டமே பிரதான போராட்ட வடிவமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் ஆயுதம் ஏந்தாத மக்கள் போராட்டங்கள் ஆயுதப் போராட்டத்துக்கு அனுசரணையானவையாக, துணை செய்பவையாக அமையுமே தவிர, ஆயுதப் போராட்டத்துக்கு மாற்றானதாக சித்தரிக்கப்படலாகாது.

ஆனால், தமிழ்க் கட்சிகள் அவ்வாறு சித்தரித்தாலும்கூட, அக் கட்சிகள் நடத்தும் போராட்டங்கள்கூட புலிகளது ஆயுதப் போராட்டத்திற்கு அனுசரணையானவையாக, நியாயப்படுத்துவதாகவே அமையும். இது தவிர்க்க முடியாதது.

இக் கட்சிகளது சாத்வீகப் போராட்டங்களுக்கு ஆட்சியாளர் செவிசாய்க்க மறுப்பதும், ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்த உதவக்கூடியதே.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

வீர விதானவுக்கு எதிரான பேரணி நடத்த கொழும்பில் உள்ள தமிழ் பேசும் முக்கியஸ்தர்கள் பலர் துடியாய்த் துடித்தனர். தடை கண்டு கொதித்தனர்.

ஆனால் அமைச்சர் தொண்டா மட்டும் வாயே திறக்கவில்லை. பொ.ஜ.மு. பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

"தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பெற பொ.ஜ.முன்னணியை ஆதரிக்க வேண்டும்!" என்று கூறியிருந்தார்.

தொண்டமானுக்கு தனக்குள்ள உரிமைகளையே பெற முடியவில்லை. அவரது கட்சி அலுவலகத்திற்குள் புகுந்தவர்களை கைது செய்விக்க முடியவில்லை.

கொடி இறக்கி நாசமாக்கப்படும்வரை பார்த்துக் கொண்டிருந்த பொலிசார்மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

அவர் ஆதரித்து வரும் அவசரகால சட்டமும் அவருக்கு பாதுகாப்பளிக்க முடியவில்லை.

புலி ஒருவர் தங்கியிருந்தார் என்பதற்காக, அந்த வீட்டையே தகர்க்க அவசரகால சட்டத்தின்கீழ் அதிகாரத்தை கையில் எடுக்கின்றனர்.

கட்சி அலுவலகத்திற்குள் புகுந்தவர்களை, கொடி கிழித்தவர்களை கைது செய்ய அந்த அதிகாரத்தை தொடவில்லை.

வீரவிதான ஊர்வலத்துக்கு தாம் அனுமதி கொடுக்கவில்லை என்று பொலிஸ் தரப்பு கூறியதாம்.

அப்படியானால் அந்த ஊர்வலத்தில் டி.ஐ.ஜி. உட்பட பொலிசார் காணப்பட்டது எப்படி? என்று எதிர்ப்பு பேரணி நடத்த முற்பட்டோர் கேட்டனராம். பதில் இல்லையாம்.

***

பேரணி ஏற்பாடுகள் பற்றி ஆராய சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் கலந்துரையாடல் ஒன்று நடந்தது. அங்கு இ.தொ.காமீது பலத்த சாடல்கள்.

தொண்டா வாய்திறவாது மௌனம் காப்பது தொடர்பாகவும் மலையக தமிழ் பிரமுகர்கள் பலர் காட்டமாக கருத்துக் கூறினார்கள்.

-★-

ஜனாதிபதியை சந்திக்க வரதருடன் ராசிக்கும் போனதாக ஒரு பொய்யான செய்தியை மெல்ல உருட்டிவிட்டது அக் கட்சியின் முக்கியஸ்தர்தானாம்.

ஜனாதிபதியை வரதர் தனியாகத்தான் சந்தித்தார். எவருமே கூடச் செல்லவில்லை.

மட்டக்களப்பு சென்றபோதுதான் ராசிக்கின் முகாமில் வரதர் தங்கியிருந்தார். வரதருக்கு அரச பாதுகாப்பு இருந்தாலும், மட்டக்களப்பில் அவர் நின்றபோது வெளிப்பாதுகாப்புகளை ராசிக்தான் கவனித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இயக்கத்திற்கு என்று ஏனைய இயக்கங்கள்போல ஆயுத அமைப்பு ஒன்றை உருவாக்குவதே வரதரின் திட்டமாம்.

ராசிக் போன்றோரை நம்பியே அந்த திட்டம் வகுக்கப்பட்டது.

புலிகளுக்கு எதிராக செயற்படுவதே முக்கிய எண்ணம். இதனைத்தான் வரதர் தனியாக தமிழ் இராணுவம் அமைக்க யோசனை கூறியதாக அவரது கட்சிக்குள் இருந்தே கதை அவிழ்த்து விட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு இறுதியில் ராசிக்குக்கு துணைப்படையில் லெப்டினன்ட் பதவி வழங்கப்பட்டது. அதனை ஏற்க ராசிக் மறுத்திருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்பில் தீவிரமாக செயற்பட எண்ணியதே ஏற்க மறுத்ததுக்கு காரணம்.

ராசிக்கின் மரணத்தால் ஈ.பி.ஆர்.எல். எ.ஃப்புக்குள் சிலருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சியாம். வரதரின் கையொன்று ஒடிந்தது என்றுதான் மகிழ்ச்சி. ராசிக் மரணத்தால் வரதரும் ஆடிப் போனார்தான்.

***

## ஜே.வி.பி. ஏறுமுகம்

தென் மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பிக்கு பெரு வெற்றி கிடைத்துள்ளது. 1994இல் தென் மாகாணசபைத் தேர்தலில் 2.79 வீதமான வாக்குகளும், 1994 ஜனாதிபதித் தேர்தலில் 0.44 வீதமும் 1997 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 6.25 வீதமும் வாக்குகள் கிடைத்தன. தற்போது நடந்த மாகாணசபைத் தேர்தலில் 12.28 வீதமான வாக்குகள் கிடைத்துள்ளன.

1994 தென் மாகாணசபைத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட கைப்பற்ற முடியாத ஜே.வி.பி., இம்முறை 7 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

ஜே.வி.பியின் வாக்கு வங்கி இப்படி ஏறுமுகத்தில் இருக்கையில், பொ.ஜ.மு, ஐ.தே.க. இரண்டும் வாக்கு வங்கிகளில் சரிவைக் கண்டுள்ளன.

1994 தெ.மாகணசபையில் 56.94 வீதவாக்குகளைப் பெற்ற பொ.ஜ.மு. இம்முறை 44.90 வீத வாக்குகளையே பெற்றுள்ளது.

ஐ.தே.கட்சி 1994இல் 39.37 வீதம். இம்முறை 39.12 வீதம்.

சிங்கள மக்களது அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்க முடியாமையே பொ.ஜ.முன்னணியின் வாக்கு சரிவுக்கு காரணம்.

ஆனால் நம் தமிழ்க் கட்சிகள், அரசோடு சேர்ந்து நின்றால் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம், வேலை வாய்ப்புக்கள் பெறலாம் என்று கூறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 66

**கடந்தவாரம்**

**அமீன் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றி அரபு நாடுகளின் உதவி பெறுவதற்கு திட்டமிட, உகண்டாவில் எதிர்ப்புக் கிளம்புகிறது. உள்ளூர் பிரமுகர்கள் சிலரை கைக்குள் போட்டுக்கொண்டு அவர்கள் மூலம் அறிக்கைவிடவைத்து சமாளிக்கிறான் அமீன்.**

இனி...

# இடி அமீன்

உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதற்கு அமீன் திட்டமிடுவதை மூடிமறைக்க, அவனால் விலைக்கு வாங்கப்பட்ட உள்ளூர் பிரமுகர்கள் ஒற்றைக் காலில் நின்றனர்.

ஆரம்பத்தில் அதனை ஓரளவு நம்பியவர்கள்கூட படிப்படியாக அமீனை நியாயப்படுத்தியவர்கள்மீதே சந்தேகம் கொள்ளத் தொடங்கினர்.

மக்களைத் திசை திருப்ப தன் விசுவாசிகளில் ஒருவரான உள்ளூர் பிரமுகரை அமீன் தீர்த்துக்கட்டியதும் போதிய பயனளிக்கவில்லை.

இக் கட்டத்தில் உகண்டா வானொலி அறிவித்த செய்தியைக் கேட்டு நாடே நகைப்பில் ஆழ்ந்தது.

"அதிபர் இடி அமீன் தனது மனைவியர் மூன்று பேரை விவாகரத்து செய்துவிட்டார்!" என்று அறிவித்தது வானொலி.

விவாகரத்து செய்யப்பட்டவர்கள் மூன்று மனைவியர் என்றால், இன்னும் எத்தனை மனைவிகள் இருக்கிறார்களோ? என்றுதான் பலரும் தமக்குள் பேசிக் கொண்டனர்.

அமீனின் பெண் சபலம் கட்டுமீறிப் போய்க்கொண்டிருந்தது. மூன்று மனைவியரை விவாகரத்து செய்த அன்று மாலையே இரகசியமாக இன்னொரு திருமணம் செய்து கொண்டான்.

அமீன் விமானப் பயணம் செய்யும்போது அந்த விமானத்தில் பணிப்பெண்ணாக இருந்த அழகி அவன் கண்ணில் பட்டுவிட்டாள்.

நாடு திரும்பியதும் அவளை தன் மாளிகைக்கு அழைத்தான். சுற்றி வளைக்காது நேரடியாகவே கேட்டுவிட்டான்:

**"உன் பணிவிடைகள் எனக்குப் பிடித்திருந்தன. உன்னையும் பிடித்திருக்கிறது. என்னையும் உனக்கு பிடிக்காமல் போகாது. இந்த அமீனை பிடிக்கவில்லை என்று சொல்லக்கூடிய எவரும் உலகில் இருக்கமுடியாது. உன்னைத் திருமணம் செய்யப் போகிறேன். என்ன சொல்கிறாய்? சம்மதம்தானே?"** என்று கேட்டான்.

அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மறுத்தாலும் அமீன் தன் முடிவில் இருந்து மாறப்போவதில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

பலாத்காரமாக அடையப்படுவதைவிட தானாக உடன்பட்டால் பலன் அதிகம் என்று சடுதியாக முடிவு செய்தாள்.

பணிப்பெண்ணாக வேலை பெறுவதற்காக விமான நிறுவன உயரதிகாரிகள் சிலரை உடலால் திருப்திப்படுத்த வேண்டியிருந்தது.

"அழகான பெண்களுக்குத்தான் பணிப்பெண் வேலை. உன் அழகை நான் முழுதாகப் பார்த்தால்தான் வேலை தர முடியும்!" என்று உயர் அதிகாரி பச்சையாகவே பேசினான்.

அவள் சம்மதிக்க முன்னரே, உடை களையப்பட்டு, அணுஅணுவாக ரசிக்கப்பட்டு படுக்கையில் தள்ளப்பட்டாள்.

அவள்மீது தன்பாரத்தைத் திணித்தபடி, அவள் முகமருகே குனிந்த அந்த உயரதிகாரி சொன்னது இன்னமும் ஞாபகத்தில் இருந்தது;

"ஒன்றைப் பெறவேண்டும் என்றால், இன்னொன்றை இழந்தாக வேண்டும். இப்போது நீ உன்னை தருகிறாய். உன்னைப் பெற நான் என்னைத் தருகிறேன். உயர்ந்த வேலையும் தருகிறேன்!" கண்ணடித்தான். அசிங்கமாக இருந்தது அவன் செய்தது எல்லாமே.

அவனையே சகித்துக்கொண்டவள் இடி அமீனை பகைக்க விரும்பவில்லை. தவிர அவளுக்கு கணக்கொன்றும் தீர்க்க வேண்டியிருந்தது.

இடி அமீனை வைத்தே அந்த உயரதிகாரிக்குப் பாடம் புகட்ட நினைத்தாள்.

அவன் தனக்குச் செய்த வக்கிரங்களுக்கு பதிலடி கொடுக்க சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த தீர்மானித்தாள்.

அவளது நீண்ட யோசனையின்போது அமீன் அவள் அருகே வந்திருந்தான். தன் விரலை நீட்டி அவளது உதடுகளை உரசிப் பார்த்தபோதுதான், அவள் யோசனையில் இருந்து மீண்டாள்.

**"என்ன யோசனை? இன்ப அதிர்ச்சியா?"** என்றான்.

அவள் துணிந்து பொய்கூறினாள்; "ஆம், இருக்காதா? நான் எங்கே? தாங்கள் எங்கே?"

அவள் பேசும்போதும் விரல்களை அவளின் உதடுகளில் இருந்து அமீன் விலக்கவில்லை. அதனால் அவன் விரல்களில் உதடுகள் அதிகம் உரசின. மென்மையான அந்த ஸ்பரிசம் அமீனை மேலும் கிளர்ச்சி கொள்ளச் செய்தது.

"நீயும் இங்கேதான், நானும் இங்கேதான். எங்கும் போகவில்லை. இனித்தான் போக வேண்டும். எங்கெங்கோ, மேலே மேலே போகவேண்டும்." என்றவன் சட்டென்று அவள் முன்பாக முழங்காலிட்டு அமர்ந்தான்.

அமர்ந்தவன் அவள் வயிற்றில் முத்தமிட்டான். அவன் கைகள் நீண்டு அவளது பின்னழகுகளில் தங்கி நின்றன.

தன் வயிற்றில் முகம் புதைத்து அவன் செய்த விஷமத்தால் அவள் சிலிர்த்துப் போனாள்.

அமீனின் தலை அவளது வயிற்றுக்கு கீழேயும் நழுவிக் கொண்டிருக்க, அமீன் காதல் லீலைகளில் ஒரு பயங்கரவாதி என்பது புரிந்தது. அவளும் அவனது செய்கைகளை ரசிக்கவும், விரும்பவும் ஆரம்பித்து, தலையை தன் கைகளால் வருடியும், கோதியும் விட்டபடி முனகினாள். முணுமுணுத்தாள்.

அவளது முணுமுணுப்பே அவனுக்கு மேலும் கிளர்ச்சியாக இருந்தது. தன் வித்தைகள் அனைத்தையும் காண்பித்தான்.

அன்று கட்டிலில் அவளை முழுமையாக அடைந்த பின்னரே, அன்றிரவு அவளை திருமணம் செய்து கொண்டான்.

திருமணத்திற்கு சியம்பா உட்பட முக்கியமான இராணுவ அதிகாரிகள் சிலர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

அமீனின் மனைவியரில் ஒருத்தியும் திருமணத்திற்கு வந்திருந்ததுதான் சியம்பா உட்பட ஏனையோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

**"என் புது மனைவி, அதுதான் உன் சகோதரி எப்படி இருக்கிறாள்?"** என்று அனைவர் முன்பாகவும் தன் மனைவியிடம் கேட்டான் அமீன்.



அவளும், "நன்றாகத்தான் இருக்கிறாள். உங்கள் தேர்வு பிழைக்குமா என்ன?" என்று கேட்டாள்.

என்ன குடும்பமடா இது? என்று சியம்பா தனக்குள் எரிந்து கொண்டாலும், வெளிக்கு ஒரு புன்னகையைக் கட்டாயமாக உதிர்த்தார்.

### தருவது ரசிகன்

அந்தத் திருமணம் நடந்து சரியாக பன்னிரண்டாவது நாள் விமான நிறுவன உயரதிகாரியை மரணம் தேடிவந்தது.

அமீனிடம் அந்த அதிகாரி தன்னை அடைய ஆசைப்பட்டதாகவும், அது முடியாததால் இப்போதும் நாக்கை தொங்கப்போட்டுக் கொண்டு அலைவதாகவும் அவள் கூறினாள்.

தன்னுடன் அவன் உறவு கொண்டதை மறைத்துவிட்டாள். ஏனோ அதனை அமீனிடம் கூற அவளுக்குத் தோன்றவில்லை.

புது மனைவி. இளம் மனைவி. அவள் ஆசையை நிறைவேற்றாமல் இருப்பானா அமீன்?

தன் ஆட்களை அனுப்பி உயரதிகாரியை தீர்த்துக்கட்டினான். நிறுவனத்தில் இருந்த பணமும் கொள்ளையிடப்பட்டது.

'கொள்ளையர்கள் கைவரிசை. எதிர்க்க முற்பட்ட அதிகாரியை சுட்டுக் கொன்றனர்!' என்றுதான் செய்திகள் வெளியாகின.

"முஸ்லிம் தீவிர வாத சக்திகள் அரசை ஆட்டிப்படைக்க நினைக்கின்றன. அவர்கள் தலையெடுப்பதை அதிபர் அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று கிறிஸ்தவ பிரமுகர்கள் இருவர் காட்டமாக அறிக்கை கொடுத்திருந்தனர்.

அறிக்கை கொடுத்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் அனுப்பி வைத்தான் அமீன்.

முஸ்லிம் தீவிரவாதிகள்தான் அமீனை நிர்ப்பந்திக்கிறார்கள். அமீன் நல்லவன்தான். இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவன்தான் என்று மக்களை நம்பவைக்கத்தான் அந்த அறிக்கைகள்.

முஸ்லிம் தீவிரவாதிகள் என்று யாருமே கிடையாது. அமீன்தான் முஸ்லிம் பிரமுகர்கள் சிலரை அழைத்து விஷ யோசனைகளைத் தூவிவிட்டான்.

**"உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்ற வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு கடிதம் எழுதுங்கள். கட்டுரைகள் எழுதுங்கள். முடிந்தால் சுவரொட்டிகளும் ஒட்டுங்கள்"** என்று பணம் கொடுத்து அனுப்பினான்.

அவ்வாறே செய்யப்பட்டதால் முஸ்லிம் தீவிரவாதிகள் உருவாகிவிட்டதாக ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது.

**"எத்தகைய மத தீவிரவாதங்களுக்கும் உகண்டா அரசு இடமளிக்காது! எந்த மதத்தினருக்கும் தீங்கு இழைக்க நான் அனுமதிக்க மாட்டேன்!"** என்று இடி அமீன் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்திருந்தான்.

"முஸ்லிம் தீவிரவாதிகள் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர். மத மோதலை தூண்டும்விதமாக வாசகங்கள் காணப்படுகின்றனவே?" என்று நிருபர் கேட்டபோது:

**"சுவரொட்டிகள் ஒட்டுவது அனுமதிக்கப்பட்ட உரிமை. அதில் அரசு தலையிடாது! அதே சமயம் அடுத்தவர் முதுகில் சுவரொட்டிகளை ஒட்டினால் பார்த்துக்கொண்டும் இருக்காது!"** என்று கிண்டலாகப் பதில் கொடுத்திருந்தான் அமீன்.

தனது பதவியைத் தக்க வைக்க இராணுவ பலத்தையே ஆரம்பத்தில் நம்பியிருந்த அமீன், பின்னர் பிரித்தாளும் தந்திரங்களையும், ஏமாற்று வித்தைகளையும் தாராளமாக கட்டவிழ்த்துவிட்டான். இராணுவத்திற்குள் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கினான். 13 பட்டாலியன்களாக இராணுவப் பொலிஸ் பிரிவு இருந்தது. அவற்றின் பொறுப்பதிகாரிகள் முஸ்லிம்கள்.

பொலிஸ் உயரதிகாரியாகவும் முஸ்லிம் ஒருவரே நியமிக்கப்பட்டார். தேசிய ஆய்வுப் பிரிவின் தலைவர் முஸ்லிம் உகண்டா அல்ல. அந்தப் பிரிவை கண்காணிக்கும் பொறுப்பில் இருந்த மேஜர் ஃபாரூக் மினவா ஒரு நுபிய முஸ்லிம்.

அமீன் இவ்வாறு துரிதகதியில் மாற்றங்களைச் செய்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

முஸ்லிம் நாடுகளது தலைவர்களது மாநாடு 1975 இல் பாகிஸ்தானில் லாகூரில் நடைபெற இருந்தது.

அந்த மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிகிடைத்தால் முஸ்லிம் நாடுகளிடம் பெரும் உதவிகளைக் கோரலாம் என்று திட்டமிட்டான்.

வெள்ளிக்கிழமை தொழுகைக்கு செல்ல வேண்டும் என்பதால், அந்த நாளை விடுமுறை நாளாக பிரகடனம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையை விடுக்குமாறு தூண்டிவிட்டதே அமீன்தான்.

அக் கோரிக்கையை கண்டு கிறிஸ்தவ மதத்தினர் கொதித்தெழுந்தனர். அதனை எதிர்பார்த்த அமீன் தனது கையாட்களான உள்ளூர் கிறிஸ்தவ பிரமுகர்களை உசுப்பிவிட்டான்.

"கிறிஸ்தவ மதம் அமைதிக்கு பெயர் போன மதம். முஸ்லிம் தீவிரவாதிகள் அதிபர் இடி அமீனை நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகிறார்கள். இந்நேரத்தில் நாமும் பொறுமை இழந்தால் நாடு தாங்காது. அன்பே நமது வழி. அதனால் பொறுப்போடு செயற்படுமாறும், அமைதி காக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்" என்று அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

இதனால் உகண்டாவின் பெரும்பான்மையினரான கிறிஸ்தவ மக்களிடையே பிளவுகள் ஏற்பட்டன.

இந்த அமளிக்கிடையே அமீனின் சுயரூபம் அம்பலமாகக் காரணமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

(இடி தொடரும்)

## வளர்ந்து வரும் வாஜ்பேய் செல்வாக்கு



இந்திய-பாகிஸ்தான் முறுகல் நிலை பாரதிய ஜனதாவுக்கு செல்வாக்கை உயர்த்தியுள்ளது.

சோனியா காந்தியும் பழவகைகளை வாங்கிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றுள்ளார் அங்கு சிப்பாய்களுக்கு ஆறுதல் கூறியிருக்கிறார்.

தனது நாட்டுப்பற்றை நிரூபிக்க சோனியாவுக்கு கிடைத்த வாய்ப்பு என்று காங்கிரஸ்காரர்கள் குதூகலிக்கின்றனர்.

ஆனாலும் வாஜ்பேய் இரும்பு மனிதர், உறுதியான பிரதமர் என்ற பெயரை பெற்றுவிட்டார்.

பாகிஸ்தான் வெளி நாட்டமைச்சரை புது டில்லிக்கே அழைத்து, முகத்தில் அறைந்தது போன்று, 'இராணுவத்தை முதலில் வாபஸ் வாங்கு!' என்று பாரதிய ஜனதா அரசு கூறியனுப்பியது.

இதனை இந்தியப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டியுள்ளன. இந்திய எல்லைக்குள் ஊடுருவியவர்கள் திரும்பும் வரை பேச்சுக் கிடையாது என்று வீச்சாக பேசி வரவேற்பு பெற்று வருகிறார் வாஜ்பேய்.

அந்நியரை எதிர்த்து யுத்தம் என்று இந்தியா முழுவதையும் உணர்ச்சி பூர்வமாக தட்டி எழுப்பும்போது அது இன்னொரு அந்நியரான சோனியாவுக்கும் தர்ம சங்கடம் தான்.

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியை தோற்கடித்ததை பாகிஸ்தான் எல்லையில் உள்ள இந்தியப் படையினர் வேட்டுக்கள் தீர்த்து கொண்டாடினார்கள்.

இந்திய-பாகிஸ்தான் முறுகல் நிலையில் இந்திய அணி தோற்றிருந்தால் அதன் வீரர்கள் நாடு திரும்பும் போது கல்லெறி கிடைக்க வாய்ப்பிருந்தது.

ஆனால் இந்தியாவுடனான தோல்வியை பாகிஸ்தான் அணி கப்டன் வாசிம் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டு, இந்திய அணியையும் அசாரையும் பாராட்டியது பெரிய விஷயம். வாசிம் அக்ரம் அங்கு உயர்ந்து நின்றார்.

பாகிஸ்தானில் இருந்துதான் இந்திய எல்லைக்குள் கெரில்லாக்கள் புகுந்தனர் என்பது இரகசியமல்ல.

இந்திய உளவுத் துறையோ, எல்லைப் படைகளோ இதனை ஏன் முன்கூட்டியே அறியவில்லை? என்று கேள்வி எழுந்துள்ளது.

அடர் பனிசூழ்ந்த மலைப்பகுதிகளில் எத்தனையோ பாதைகளால் ஊடுருவ முடியும். பாகிஸ்தான் எல்லைப் படைகளின் உதவி இருந்தால் இந்தியப் பகுதிகளுக்குள் புக முடியும்.

எனவே, பாகிஸ்தான் இராணுவம் கெரில்லாக்களுக்கு உதவியளிக்கிறது. பக்கபலமாக இருக்கிறது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.

இந்தியாவும் தனது தரப்பு இழப்புக்களை குறைத்துக் காட்டுகிறது. தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புதிதாக சில பகுதிகளை கைப்பற்றவும் இந்தியப் படை திட்டமிடக்கூடும்.

எது எப்படியிருந்தாலும் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா-பாக்கிஸ்தான் உறவு சுமுகமாக தற்போதைக்கு வாய்ப்பில்லை. மோதல்கள் ஓய்ந்தால்கூட சந்தேக மேகங்கள் மறையாது.

## காதலனுக்காக



தென்னாபிரிக்காவில் உள்ள கேப்டவுனில் பயங்கரமான கைதிகள் சிலரை தடுத்து வைத்திருந்தனர். அந்தக் கூட்டத்தின் தலைவனும், அவனது காதலியும் அங்கேயே சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

தலைவன், அவனது காதலி உட்பட ஒன்பதுபேர் தப்பிச் செல்லத் திட்டமிட்டனர். குறிப்பிட்ட நாளும் வந்தது. தப்பிச் செல்ல வேண்டிய கதவுகளின் கம்பிகளை துண்டித்து வைத்திருந்தனர்.

அதன்வழியாக ஏழுபேரும் ஒருவர் பின் ஒருவராக தப்பிச் சென்றனர். தலைவனும் காதலியும் தப்பிச் செல்வதே பாக்கியிருந்தது. காதலியும் தப்பிச் சென்று வெளியே காத்திருந்தாள்.

ஆனால் தலைவனால் வெளியேற முடியவில்லை. கம்பிகள் துண்டிக்கப்பட்ட சிறு வழி அவனது பருத்த உடலை அனுமதிக்கவில்லை.

அதற்கிடையே சிறைக் காவலர்கள் ஓடிவந்து அவனைப் பிடித்துக் கொண்டனர்.

காதலனை காணாத காதலி வெளியே காத்திருந்து பார்த்தாள். தலைவன் மாட்டுப்பட்டு விட்டான் என்று தெரிந்ததும், மறுபடி அவளும் உள்ளே சென்று சரணடைந்தாள். மீதி ஏழுபேரும் தப்பிச் சென்று விட்டனர்.

## திடீர் போராட்டம்



அவுஸ்திரேலியாவில் ஆடை ஏற்றுமதி நிலையம் ஒன்றைச் சேர்ந்த பெண்கள் வித்தியாசமான போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

இவர்கள் சம்பள உயர்வும், விடுமுறையும் கேட்டதற்கு நிர்வாகம் மறுப்புத் தெரிவித்து விட்டது.

அதனால்தான் வித்தியாசமான போராட்டத்தில் குதித்தனர். உள்ளாடைகள் மட்டும் அணிந்து கொண்டு தெருவில் அமர்ந்து போராட்டம் நடத்தினார்கள்.

இதனைப் பார்க்க கூட்டம் திரண்டு விட்டது. வேறு வழியின்றி அவர்களது கோரிக்கைக்கு நிர்வாகம் பணிந்தது.

நிர்வாகம் அத்தனை விரைவாகப் பணிந்ததால் பார்வையாளர்களுக்கு சற்று அதிருப்திதான்.

## மீண்டஜோடி



மரணத்திலிருந்து மீண்ட ஜோடியின் கதை இது.

அவுஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள தீவு ஒன்றுக்கு குட்டி விமானத்தில் தேன்நிலவுக்கு சென்றது ஒரு இளம் ஜோடி.

திரும்பிவரும்போது விமானத்தில் திடீர் கோளாறு. அப்படியே தடுமாறி கடலில் விழுந்தது. மனைவியும், கணவனும் நம்பிக்கை இழக்காது கரை நோக்கி நீந்தினார்கள். ஒருவிதமாக கரையேறினர். உயிர்தப்பினர்.

மொத்தம் ஆறுமணிநேரம் எதிர் நீச்சல் போட்டு கரையை முத்தமிட்டனர்.

சாவில் இருந்து மீண்ட இந்த ஜோடியை கரையில் மீனவர்கள் உபசரித்து அனுப்பி வைத்தனர்.

## நறுக் சமாச்சாரம்



மலேசியாவின் கெட்டா நகரில் தனியாக இருக்கும் பெண்களிடம் காமத் தொல்லை கொடுக்கும் ஆசாமிகள் அதிகம்.

அன்றும் அப்படித்தான் ஒரு ஆசாமி தனியாகத் தூங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணுடன் சில்மிஷம் செய்தான்.

தூங்கிக் கொண்டிருந்த பெண்ணுக்கு தன்மீது ஏதோ கவிந்திருப்பது போன்றும், தன் வாய்க்குள் எதுவோ துழாவுவது போலவும் உணர்ந்தாள். சட்டென்று கடித்து விட்டாள்.

அந்த ஆசாமியின் நாக்கு துண்டானது. அவன் வலியில் அலறினான். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் கூடினார்கள். பொலிசாரிடம் அவனை ஒப்படைத்தனர். பொலிசார் அவனை முதலில் மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.




படிப்பகம்

www.padippakam.com

# வான் பிரசாரம்

➡ இங்கிலாந்தில் தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி நடந்தது. அப்போது சிறிய விமானம் ஒன்று வானில் முளைத்தது. அந்த விமானத்தைவிட அது இழுத்துவந்த பதாகையே அனைவரதும் கவனத்தைக் கவர்ந்தது.

'தமிழர்களை கொல்வது கிரிக்கெட் அல்ல' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்த விமானத்தையும், அது இழுத்துச் செல்லும் பதாகை காற்றில் நீண்ட தூரம் பறப்பதையுமே இங்கு காண்கிறீர்கள். இந்த விமானம் இலங்கைத் தமிழர் சிலரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டது.




# உள்ளே-வெளியே




⬆ பெண் ஒய்யாரமாக படுத்திருப்பது போன்ற இந்த பிரமாண்டமான சிலை பெருநாட்டின் தலைநகரான லிமாவில் அமைக்கப்பட்டுள்ளது.

இது வெறும் சிலையல்ல. உள்ளே ஒரு பெரிய அரங்கமே இருக்கிறது. அதற்குள் குழந்தைகள் பற்றியும், உடல் உறுப்புக்கள் தொடர்பாகவும் கண்காட்சி நடத்தப்பட்டது.

இதன் நீளம்: 229 அடி. அகலம்: 52 அடி. உயரம்: 52 அடி. கண்ணைக் கவரும் சிலைக்குள் கருத்தைக் கவரும் கண்காட்சி.

இக் கண்காட்சியைக் காண பெரும் தொகையான மாணவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

# தடைகள் இடையே

⬇ 'போராடுவது வாழ்வதற்காக, வாழ்வது போராடுவதற்காக' என்பது வன்னி மக்களுக்கும் பொருந்தும். தடைகளையே படிக்கற்களாக மாற்றப் பழகிக்கொண்டுள்ளனர்.

கிணறு கட்ட சீமெந்து கிடையாது. அதற்கும் தடை! அதனால் கூரைத் தகடுகளை பயன்படுத்தி கிணற்றை நிர்மாணித்துள்ளார் இவர். விமானத்தாக்குதலில் உடைந்துபோன கூரைத் தகடுகளையே இவ்வாறு பன்படுத்தியுள்ளார். மல்லாவி யோகபுரம் பகுதியில் எடுக்கப்பட்ட படம் இது.



## தகவல் பெட்டி

# உடையாத தலை



⬆ கராட்டி கற்பிக்கும் குரு தனது பலத்தையும், ஆற்றலையும் சீடர்களுக்கு காண்பிக்க விரும்பினார். அவரது தலையை செங்கற்கள் இடையே வைத்துக் கொள்ள அவற்றை ஓங்கி உடைக்கிறார்கள் சீடர்கள். சீனாவில் ஹாங்ஸீவா நகரில் இந்த சாகசம் செய்து காட்டப்பட்டது.

நமக்கு ஒரு கல்லு தலையில் விழுந்தாலே மயக்கம் வந்துவிடும். அண்ணாச்சி கில்லாடி ஆசாமிதான்.

# மூன்று



⬆ மட்டக்களப்பில் கும்புறுமூலையில் வசிப்பவர் ஆனந்தன் ஜெயநாதன். இவருக்கு தொண்டையில் மேலதிகமாக இரண்டு குட்டி நாக்குகள் உள்ளன. இவ்வாறு இருப்பது அபூர்வமான விஷயம்.

இந்த குட்டி நாக்குகளால் ஜெகநாதனுக்கு பாதிப்பு எதுவும் இல்லை. பழகிப்போய்விட்டது. இவரை 'நாபலர்' என்று அழைக்கலாமோ!

# நீ....ளளம்!



⬅ உலகிலேயே மிக நீளமான கழுத்தில் அணியும் 'ரை' இதுதான். இதன் நீளம்: 55 மீட்டர். அகலம்: 4.34 மீட்டர். இதன் எடை 180 கிலோ. இதனை கையால் தூக்க முடியாது என்பதால் பளு தூக்கி மின் மூலம் தூக்கி காட்சிக்கு வைத்துள்ளனர். சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த அன்னா என்பவர் இதனை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

இதனை கழுத்தில் கட்டினால் கழுத்தே உடைந்துபோகும்.



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் (107)

# மம்தா கூறிய அதிரடி தகவல் நான்கெழுத்து நடிகையின் குமுறல்

தமிழ்நாட்டிலிருந்த மயன்

தமிழில் நடிகர் விஜய்யின் அம்மா மூலம் அறிமுகமானவர் மம்தா குல்கா்னி. நண்பர்கள் பட நாயகி இவர்தான். விமானப் பயணம் ஒன்றில் விஜய்யின் அம்மா ஷோபாவுக்கு அறிமுகமானார். அவரை நடிகையாக்க விரும்பினார் ஷோபா. மம்தாவும் சம்மதித்தார்.

'நண்பர்கள்' படம் சரியாகப் போகவில்லை. அதனால் மம்தாவுக்கு தமிழில் வாய்ப்புக்கள் இல்லை. இந்திக்குப்போனார்.

மம்தாவின் துணிச்சலான அணுகுமுறைகளும், செக்ஸ் பற்றிய சுதந்திரமான போக்கும் கதாநாயகர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் போன்றோருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.

பட வாய்ப்புக்கள் அவருக்கு கிடைக்க ஆரம்பித்தன. கூடவே அவரது லீலைகள் பற்றியும் மும்பை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. 'செக்ஸ் பாம்' என்ற பட்டமும் கொடுத்தன.

மம்தா ஒளிவு மறைவை விரும்புவதில்லை. ஆடை விஷயமானால் என்ன, ஆடவருடன் உள்ள உறவு விஷயமானால் என்ன மறைவு பிடிக்காது.

தற்போதைய நடிகைகளுக்கு மரியாதை இல்லையே ஏன்? என்று கேட்டதற்கு மம்தா படார் படார் என்று கூறிய அதிரடியான சமாச்சாரங்கள் இதோ:

"என்ன பெரிய மதிப்பு. அந்தக்கால வைஜெயந்தி மாலா, ஹேமமாலினி போன்றோர் படப்பிடிப்பு தளத்துக்குள் வந்தால் அத்தனைபேரும் எழுந்து மரியாதை செய்வார்கள். இப்போது எந்த நடிகைக்கு அந்தளவு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது?

இப்போது இருக்கிற நடிகைகள் முக்கால்வாசிப்பேர், முதல்தர நடிகைகள் சிலர் உட்பட 'அந்த மாதிரியான தொழிலில்' ஈடுபடுகிறவர்கள்தான்.

ஒரு விசேஷ ஆல்பம் இருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் அதைப் பார்க்கலாம். அதில் இந்த மாதிரியான தொழிலில் ஈடுபட்டுள்ள அத்தனை நடிகைகள் படமும், ரேட்டும் இருக்கிறது.

முக்கால்வாசி நடிகைகளது காரியதரிசிகள் இந்த 'புண்ணியமான' வேலைக்கு உதவுகிறார்கள். அவர்களில் சரியான ஆசாமியைப் பிடித்தால் இந்த ஆல்பத்தைப் பார்க்கலாம்.

இவர்கள் இப்படி 'உபதொழிலில்' ஈடுபட்டால் எவன் இவர்களை மதிப்பான்?" என்று கேள்விகளை அடுக்கியுள்ளார் மம்தா.

மம்தாவைப் பொறுத்தவரை நண்பர்களோடு மட்டும் எப்படி வேண்டுமானாலும் இருப்பாராம்.

முகத்தைப் பார்த்தே அந்த ஆண் கட்டிலில் எப்படி நடந்து கொள்வான்? சாதாரண ஆசாமியா? அசாதாரண ஆசாமியா? என்பதை தன்னால் கண்டுபிடிக்க முடியும் என்று இன்னொரு மும்பாய் சஞ்சிகைக்கு பேட்டி கொடுத்து கலங்கடித்திருக்கிறார்.

## வித்தியாசமான தயாரிப்பாளர்

தற்போது பிரபலமான நான்கு எழுத்து நடிகை அவர் நடிக்க வருவதற்கு முன்பு மும்பாயில் வறுமையில் வாடினார். பின்னர் பல கசப்பான, வக்கிரமான அனுபவங்களை சந்தித்து நடிகையானார்.

பெயரும், புகழும் கிடைக்கும்வரை அவரை பாடாய்ப்படுத்தி வார்கள். முன்னேற வேண்டும் என்ற வெறியில், வேட்டையாட விரும்பியவர்களுக்கு விருந்தானார்.

தற்போது வெற்றிக்கொடி நாட்டி விட்டாலும்கூட, பெரிய தயாரிப்பாளர்கள், பெரிய கதாநாயகர்கள், அரசியல் புள்ளிகள் என்பவர்கள் அழைத்தால் மறுக்க முடியாத சூழ்நிலை.

பிரபல படத் தயாரிப்பாளர் ஒருவர் அவரை அழைத்தாராம். வெளியே பண்புள்ள மனிதராக கருதப்படும் கோவையைச் சேர்ந்த தயாரிப்பாளர்.

தன்னோடு நடிகையையும் கட்டாயப்படுத்தி குடிக்க வைத்திருக்கிறார்.

பின்னர் நான்கெழுத்து நடிகையின் உடைகளை களையச்சொல்லி மன்றாடினாராம். முழுக்க நனைந்த பின்னர் முக்காடு எதற்கு? நடிகையும் அவர் ஆசையை நிறைவேற்றினார்.

நடிகையின் அங்கங்களை தொட்டு பார்த்ததோடு நிறுத்திக்கொண்டாராம். அதுதான் அவரது ரசனை. தேவை.

இந்த மாதிரியாக பல ரகமான ஆட்களை சந்தித்து வெறுப்பாகிப்போனபோது அந்த இளம் நடன இயக்குநரது நட்பு கிடைத்தது. தனக்கும் ஒரு பாதுகாப்பு தேவை என்பதால் அவரை காதலராக வரித்துக் கொண்டிருக்கிறார் நடிகை.

பிரபலமான நடிகர் ஒருவர் தனது படத்தில் நடிக்க அழைத்தாராம். அப்படி அழைக்கும் போதே "இன்றிரவு டிஸ்கஷன் இருக்கிறது வருகிறாயா?" என்று கேட்டாராம்.

அந்த நேரத்தில் நான்கெழுத்து நடிகை ஏதோ வெறுப்பில் இருந்திருக்கிறார். அதனால் ஏதேதோ காரணம் கூறி அழைப்பை நிராகரித்தார். எனவே அந்த நடிகருடன் நடிக்கும் வாய்ப்பு பறிபோனது.

வெளியே பெரிதாக பேசப்படும் நடிகர்களும் நடிகைகள் விடயத்தில் சபலமுள்ளவர்களே. பிரபலமாகும் நடிகைகளை தாமும் ஒருமுறை தொட்டுப் பார்க்க விரும்பாத நடிகர்கள் மிக அபூர்வம் என்று நான்கெழுத்து நடிகை தன் நெருக்கமான வட்டாரத்தில் கூறி வருத்தப் பட்டாராம்.

## ஆனந்தம் ஆனந்தம்

பி... விலிதா. இந்தியில் மிதுன் சக்கரவர்... பாத்திரமாக இருந்துவிட்டு, மறுபடி த... திரும்பியிருக்கிறார்.

'ஆனந்தம் ஆனந்தம்' படத்தில் இரண்... கூறி, எதில் நடிக்க விருப்பம்? எ... இயக்குநர்.

கவர்ச்சி காட்டக்கூடிய பாத்திரமாக... விலிதா. ராஜீவ் கிருஷ்ணாவுடன் உ... மேலே தாலி கிளுகிளுப்பு ஊட்டும் வி... கிறார்.

## முகப்பில்

ராணி முகர்ஜி

கமல்

## முரளியின் நாயகி

முரளி நடிக்கும் 'ஊட்டி' படத்துக்காகக் கதாநாயகி தேடுகிறார்கள். முரளி கௌசல்யாவை சிபாரிசு செய்தாராம். தயாரிப்பாளர் அதனை ஏற்கவில்லை. இதனால் கதாநாயகி தேடும் படலம் தொடர்கிறது.

முரளிக்கு கௌசல்யா என்றால் தனி ஆர்வம் இருப்பது கோடம்பாக்க வட்டாரம் அறிந்த சங்கதி. கௌசல்யாவுக்காக நிறைய பணத்தையும் இழந்திருக்கிறார் முரளி. இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்பது போல, படு சாதுவாகத் தெரியும் கௌசல்யா பற்றி ஏகப்பட்ட கிசுகிசுக்கள் உலா வருகின்றன.




டாக்டர் ராஜசேகர்-மந்த்ரா
படம்: வன்முறை



## வருகிறார் பூஜா

பூஜா பத்ரா
படம்: ஒருவன்

'ஒருவன்' படத்தின் மூலம் தமிழ்ப்பட உலகுக்கு தரிசனம் தரப்போகிறார் பூஜாபத்ரா. ஏற்கனவே இந்தி நடிகை பூஜாபட் தமிழில் நடித்திருந்தார். 'கல்லூரி வாசல்' அவர் நடித்த படம்.

பூஜாபட் போலவே பூஜா பத்ராவும் இந்திப்பட உலகில் சர்ச்சைக்குரியவர்தான். ரசிகர்களை திருப்திப்படுத்த முன்பாக கதாநாயகர்கள், இயக்குநர்கள் ஆகியோரை திருப்தி செய்ய தயங்காதவர்.

ஆண் உறை விளம்பரங்கள் உட்பட பல சர்ச்சைக்குரிய விளம்பரங்களில் அதிரடியான போஸ் கொடுத்து பரபரப்பை உருவாக்கியவர்.

'ஒருவன்' படத்தில் சரத்துக்கு ஜோடி. 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் கௌரவ வேடம். தமிழ்ப்பட ரசிகர்களை என்ன பண்ணப் போகிறாரோ?

## டும் டும் டும்

நடிகர் விஜய்யின் திருமணம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடக்கலாம் என்று தெரிகிறது. தற்போது குடியிருக்கும் வீட்டை மெருகுபடுத்தும் பணிகள் நடக்கின்றன. அதனால் வேறு வீட்டுக்கு தற்காலிகமாக சென்றுள்ளது விஜய் குடும்பம்.

வெளிநாட்டிலிருந்து புதிய கார்களை இறக்கும் உத்தேசமும் விஜய்க்கு உண்டு. பெரிதாக கொண்டாடப் போகிறார்கள்.

## காதல் கதை

சமுக அக்கறையோடு 'தேசியகீதம்' எடுத்து படு தோல்வி கண்டவர் சேரன். எனவே அடுத்த படமான 'விண்ணோடும் முகிலோடும்' முழுக்க முழுக்க காதல் கதை.

பிரசாந்த் புதுமுகம் ஷிவானி இருவரும் ஈடுபாட்டோடு நடித்து வருகின்றனர். 'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' படங்கள் போல இதுவும் பெரும் வெற்றிபெறும் என்று திடமாக நம்புகிறார் சேரன்.

## கிரிக்கெட் ரசிகர்கள்

உலகக் கோப்பை கிரிக்கெட் நடந்து கொண்டிருப்பதால் நடிகர்கள் பாடு திண்டாட்டம். கிரிக்கெட் பார்ப்பதா, படப்பிடிப்புக்கு செல்வதா என்றுதான் திண்டாட்டம்.

செந்தில், முதல்நாள் ஆட்டத்தில் இந்தியா தோற்றதும், 'இந்த சோம்பேறி ஆட்டத்தை எவன் பார்ப்பான்?' என்று ஒதுங்கிக்கொண்டார்.

வீட்டுக்கு தொடர்பு கொண்டு அப்பாவிடம் நிலவரம் அறிந்து கொள்கிறார் பிரசாந்த்.

கார்த்திக், இந்தியா-பாகிஸ்தான் மோதும் நாட்களில் படப்பிடிப்பை முன் கூட்டியே இரத்துச் செய்துவிட்டு ரி.வி. முன்னால் அமர்ந்து கொண்டாராம். நடிகைகள் மற்றும் அம்மா நடிகைகளையும் கிரிக்கெட் பைத்தியம் தொற்றியிருக்கிறது.

## காதல் என்றால் என்ன? பிரசாந்த் கூறும் விளக்கம்

பிரசாந்திடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவரது பதில்களும்:

கே: காதல் என்றால் என்ன?

பி: காதல் மழைத் தண்ணீர். அது ஆறு வழியாக கடலில் சேர்ந்தால் சுத்தமாக இருக்கும். ஆனால் அது வீணாக மண்ணில் கலந்து வழி தவறினால் சாக்கடையாக மாறிவிடும்.

கே: வாழ்க்கை என்றால் என்ன?

பி: எந்த ஒரு மனிதனும் சாதிக்க வேண்டும் என்று நினைத்து, அதில் வெற்றி பெற்றால், அதுதான் வாழ்க்கை!

கே: கவிதை?

பி: 'பூமகள் ஊர்வலம்' படத்தில்
கல்லூரி பிரியாவிடையில் சொல்லுவேன்:
என்று பிரிந்தோம்
மறப்பதற்கு?
என்று மறந்தோம்
நினைப்பதற்கு!

கே: நீங்கள் காதலிக்கிறீர்களா?

பி: ஆமாம்! சினிமாவை!

கே: அரசியலில் இறங்கும் எண்ணம் உண்டா?

பி: இதுவரைக்கும் இல்லை. அப்படி வந்தால் பார்ப்போம்.

கே: சிவாஜி கணேசன் நடித்த நவராத்திரி போல பல்வேறு வேடங்களில் நடிப்பீர்களா?

பி: அவர் ஒரு மகாநதி. அதுபோல நடிக்க முடியாதுவிட்டாலும், மூன்று வேடங்களில் நடிக்க முயற்சி பண்ணுவேன்.

## ரசிகை

சிம்ரான் கிரிக்கெட்டில் பைத்தியமாக இருக்கிறார். அவருக்கு பிடித்த வீரர் ஸ்ரீநாத். மும்பாயில் உள்ள தனது வீட்டுக்கு ஸ்ரீநாத்தை அழைத்து விருந்து கொடுத்தார் சிம்ரான். பதிலுக்கு ஸ்ரீநாத் என்ன கொடுத்தார்? மும்பாயில் நடந்த கிரிக்கெட் போட்டிக்கு பாஸ் கொடுத்து உபசரித்தாராம். இது நடந்தது ஆறு மாதங்களுக்கு முன்பு.

## திருட்டு 'தம்'

செந்திலுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருக்கிறது. படப்பிடிப்பில் இருந்து ஊதித்தள்ளுவார். ஆனால் வீட்டில் அவசரகால சட்டம். சிகரெட் புகைக்கத் தடை.

அதனால் திருட்டுத்தனமாக புகைக்கிறாராம். கணவர் சிகரெட்டை நிறுத்திவிட்டதாக நம்பிக்கொண்டிருக்கிறார் மனைவி.

## 35 ஆயிரம்

இதுவரை தான் பாடிய 35 ஆயிரம் பாடல்களை தொகுத்து வெளியிடப்போகிறாராம் எஸ்.பி. பாலசுப்பிரமணியம்.

எஸ்.பி.பி.யின் குரலை ஜேசுதாசும் சம்பத்தில் புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

சிறந்த நடிகர் என்று பெயர் எடுத்தாலும் பாடகராக புகழப்படுவதையே எஸ்.பி.பி.யும் பெரிதும் விரும்புகிறார்.

## புகழாரம்

ஒரு நடிகை மற்றொரு நடிகையை புகழ்ந்து பேசுவது அபூர்வம். ஆனால் சிம்ரானை புகழ்ந்து தள்ளியிருக்கிறார் குஷ்பு.

வாலி படத்தில் சிம்ரானின் நடிப்பு அபாரம். தமிழ்ப் பட உலகில் முதலிடம் சிம்ரானுக்கே என்றும் கூறுகிறார் குஷ்பு. இருவருக்குமே கிரிக்கெட் என்றால் உயிர்.

## எச்சரிக்கையாணி

தேவயாணிக்கு ரசிகைகள் சேர்ந்து மன்றம் ஆரம்பித்துள்ளனர். இரத்ததானம், கண்தானம் போன்ற நற்காரியங்கள் செய்கிறார்கள்.

தேவயாணியிடம் யார் கையொப்ப ஏட்டை நீட்டினாலும், 'எச்சரிக்கையாக இருப்போம். எய்ட்ஸிலிருந்து தப்புவோம்' என்று எழுதி கையொப்பம் போடுகிறாராம். என்னே தேச பக்தி! தேசபக்தி என்றும் கூறலாம்.



புதிப்பகம்

www.padippakam.com

தலைவத் தாட்டில்
து வளர்ந்தவர்
ஜியின் அன்புக்கு
ழ்ப்பட உலகுக்கு

பாத்திரங்களைக்
று கேட்டாராம்

ரிவு செய்தாராம்
ண்டு புரண்டு.
ாக நடித்துவரு

**ராம்**

ஒத்திவைத்து
தும் மரு தநாயகம்
துவரு கிறது.
ரகசியம் மாதிரி
ன செய்திகளை
க்கின்றனர்.
மீறி வெளியாகும்
சில சங்கதிகள்
ுள்ளன. அதில்
தெரியுமா? கமல்
க ஒப்பனைசெய்து
தான்குகிறாராம்.

**க்யராஜ்-**
**ரம்யா**

ாக்யராஜ்க்கு
ாகிவிட்டது என்
அவர் முகத்தி
ய தெரிகிறது.
ரம் பெருத்து
டது. இனிமேல்
நாயகனாக நடிப்
முடியாத காரியம்.
அதனை புரிந்து
ண்டுதான் தன
ரான பாண்டிய
னை வைத்து
கபடி' படத்தை
ரித்திருக்கிறார்.
ிதனை அடுத்து
ாரு சிஷ்யரான
திபனை வைத்து
னொரு படம்
ரிக்கிறார்.
இப்படத்தில்
திபனின் ஜோடி
கிருஷ்ணன்.
ன கே.கபாஸ்
குகிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

**மீ**ன் நடிகை புதிதாக ஒரு தொழிலதிபரோடு நட்பாகியுள்ளார். தாய்க்குலம்தான் இதனை ஊக்குவித்ததாம். அந்த தொழிலதிபர் மூலம் சொத்துக்கள் சிலவற்றை தன் பெயரில் எழுதிவாங்க தாய்க்குலம் திட்டமிட்டுள்ளாராம். அந்த தொழிலதிபரோடு தாய்க்குலமும் நெருங்கிப் பழகி வருகிறாராம்.

**இ**ரண்டெழுத்து மலர் நடிகை 'கா' நடிகருடன் அடிக்கடி 'நட்பு' ரீதியான சந்திப்பு நடத்துகிறார். இதனை அறிந்தும் மணியான இயக்குநரால் தடுக்க முடியவில்லை. 'கா' நடிகர் பல மலர்களை பதம் பார்த்தவர். மலர் நடிகைக்கும் அது தெரியும். நடிகரின் சில அணுகுமுறைகள் பிடித்திருப்பதால் 'நட்புக்காக' மட்டும் பழகிவருகிறாராம்.

**மூ**ன்றெழுத்து இளம் நடிகரின் சமீபத்திய படம் தோல்வி. ஆனாலும் நடிகரின் தந்தையார் சென்னையில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு வாடகை கட்டி படத்தை தொடர்ந்து ஓட வைத்துள்ளாராம். அப்படி ஓடவைத்தால்தான் நடிகரின் ஊதியத்தை குறைக்காமல் இருக்கலாம்.

**சு**பமான லட்சுமி நடிகைக்கு அவரது மனேஜர்தான் சகலமும்! தற்சமயம் நடிகைக்கு அதிக வாய்ப்புகள் கிடையாது அதனால் மனேஜர் தயாரிக்கும் படத்தில் நடிக்கப் போகிறாராம். நடிகை சட்டத்துறையும் அறிந்தவர்.

**ம**தம் ஒன்றின் பெயர் கொண்ட அந்த நடிகை தொலைக்காட்சி அறிவிப்பாளராகவும் இருந்தவர். அந்த நடிகையுடன் 'க'வில் ஆரம்பிக்கும் மூன்றெழுத்து நடிகர் ஜோடியாக நடித்தார். அந்த நடிகருக்கோ நடிகைமீது ஆர்வமில்லை. அவரது தாய்க்குலத்தோடு நெருக்கமாகிவிட்டாராம். இந்த கண்றாவியை சொல்லி தலையில் அடித்துக் கொள்கின்றனர் படப்பிடிப்புக் குழுவினர்.

**அ**ந்த வாரிசு நடிகருக்கு இரண்டு மனைவிகள். படப்பிடிப்பின்போது இரண்டு மனைவிகளும் மாறி மாறி ஃபோன் செய்து தொல்லை கொடுக்கிறார்களாம்.

## ஓய்வு தேவை

'வாலி' படத்தின் பின்னர் அஜித்குமாரின் கொடி பறக்கிறது. தயாரிப்பாளர்கள் வரிசையில் நிற்கிறார்கள்.

ஆனால் அஜித்துக்கு ஓய்வு தேவைப்படுகிறது. இரண்டு மாதம் வெளிநாட்டில் ஓய்வு எடுக்கப் போகிறாராம்.

திரும்பிவரும்போது அவரது தோற்றத்திலும், செயலிலும் மாற்றம் இருக்குமாம்.

'அமர்க்களம்' படத்தை முடித்து விட்டுத்தான் உலக வலம் புறப்படப்போகிறார்.




பிரசாந்த்-புதுமுகம் ஷிவானி
படம்: விண்ணோடும் முகிலோடும்

## பிரசாந்த் ஆசை

பிரசாந்துக்கு ஐஸ்வர்யா ராய் என்றால் அப்படியொரு விருப்பம். ஜீன்ஸ் படத்தில் நடிக்கும்போது ஏற்பட்ட தாக்கம் இன்னமும் போகவில்லை.

'ஜோடி' படத்தில் பிரசாந்தின் நச்சரிப்புக்காக ஐஸ்வர்யா ராயை கௌரவ பாத்திரத்தில் சில காட்சிகளில் மட்டும் நடிக்க வைக்கப்போகிறார்களாம்.

ஐஸ்வர்யா ராய்க்கும் துள்ளும் இளைஞரான பிரசாந்த்மீது பிடிப்பு இருக்கத்தான் செய்கிறது. பிரசாந்த் இடைக்கிடையே ஐஸ்வர்யா ராயை சந்தித்து நட்பை பரிமாறிக்கொள்வதாக தகவல்.

## அடுத்து ஷாம்லி

ஷாலினியைப் போன்றே அவரது தங்கை ஷாம்லியும் பேபியாக நடித்து புகழ் பெற்றவர்.

ஷாலினி கதாநாயகியாக நடித்து வருகிறார். அடுத்து ஷாம்லியும் கதாநாயகியாக நடிக்கப்போகிறார்.

மம்முட்டி, மோகன்லால் நடித்துள்ள 'ஹரிகிருஷ்ணன்ஸ்' படத்தில் ஷாம்லி நடித்திருக்கிறார். இப்படம் சமீபத்தில் வெளியானது. கதாநாயகியாக நடிப்பதற்கான நாள் நெருங்கி விட்டது என்பது அப்படத்தில் தெரிந்தது.

**மினி**
**சினி**

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'மின்சாரக் கண்ணா' படத்தில் ரம்பாவும், புதுமுகம் மோனிகாவும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

கமலின் 'சதிலீலாவதி' இந்தியில் 'பீவி நம்பர் வண்' என்ற பெயரில் தயாராகி வெற்றிகரமாக ஓடுகிறது. தமிழில் கமல்-ரமேஷ் அரவிந்த் நடித்த வேடங்களில் இந்தியில் அனில் கபூர்-சல்மான்கான் நடித்துள்ளனர்.

ராசி', 'வாலி' போன்ற படங்களைத் தயாரித்த நிக் ஆர்ட்ஸ் நிறுவனம், அடுத்து 'முகவரி' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளது. இதிலும் அஜித்குமார்தான் கதாநாயகன்.

தேவி' என்ற மாயாஜாலப் படத்தில் நடித்துள்ள பிரேமா இப்போது கன்னடத்தில் 'மாயா பஜார்' என்ற மாயாஜாலப் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் பிரேமாவுக்கு இரட்டை வேடம்.

கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தை தயாரித்து வரும் கலைப்புலி தாணு, விருதுக்காக 'முகம்' என்ற படத்தையும் சத்தமில்லாமல் தயாரித்து வருகிறார்.

விஜயகாந்த் நடிக்கும் 'கண்ணுபடப் போகுதய்யா' படத்தில் சிம்ரான் கதாநாயகியாக நடித்து வருகிறார். இப்போது இரண்டாவது நாயகியாக சுவாதியும் நடிக்கிறார்.

பார்த்திபன் தயாரித்து நடிக்கும் 'அள்ளி அணைக்கையிலே' படத்தை முதலில் பாலுமகேந்திரா இயக்குவதாக இருந்தது. இப்போது அந்தப் படத்தை பார்த்திபனே இயக்கப் போகிறார்.

பெரியண்ணா' படத்தை தயாரித்த விஜயகாந்தின் உதவியாளர் சுப்பையா. அடுத்து ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளார். இதில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

சொல்லாமலே' படம் தெலுங்கில் தயாராகிவருகிறது. தமிழில் லிவிங்ஸ்டன்-கௌசல்யா நடித்த வேடங்களில் தெலுங்கில் வெங்கடேஷ்-ட்விங்கிள்கண்ணா நடித்து வருகிறார்கள்.

சரத்குமார்-ரம்பா ஜோடியாக நடிக்கும் 'கேசவன்' படத்தில் இந்தியாவின் பிரபல மொடலும், இந்தி நடிகருமான ராகுல்ராய் வில்லனாக அறிமுகமாகிறார்.

## இயக்குநர் உதவி

கிழக்கே போகும் ரயில்' படத்தின் மூலம் ராதிகாவை அறிமுகம் செய்தவர் பாரதிராஜா. அதன்பின்னர் பல படங்களில் முக்கிய வேடம் கொடுத்து ராதிகாவை தட்டிக் கொடுத்து வந்தார்.

ராதிகாவுக்கு படவாய்ப்புக்கள் குறைந்தபோது 'கிழக்குச் சீமையிலே' படத்தின்மூலம் கைதூக்கிவிட்டார். தற்போது தன் ...ளைக்கார கணவர் பிரிவால் வாடிப்போயிருக்கிறார் ...ா. அவரை தேற்றி தனது தாஜ்மஹால் படத்தில் முக்கிய ...த்தில் நடிக்கவைத்துள்ளார் பாரதிராஜா.



சிவபாரதி-டயானா
படம்: பந்தா

## கலக்கல் ராணி கோவிந்தாவுடன் ஜாலி

'ஹேராம்' படத்தின் கதாநாயகியான ராணி முகர்ஜி மும்பாயை கலக்குகிறார்.

இந்திப் பட நாயகர்கள் பலரை தன் பிடியில் வைத்திருக்கிறார் இந்த கலக்கல் ராணி.

மலருக்கு மலர் தாவும் வண்டு என்று கூறுவதுபோல, வண்டுக்கு வண்டு தாவும் மலர் என்று ராணியை அழைக்கிறார்கள்.

சமீபத்தில் கோவிந்தாவுடன் கும்மாளம் போட்டுத் திரிகிறார். இருவரது நெருக்கமும், இறுக்கமும் ஊர் அறிந்த செய்தி.

கோவிந்தாவின் மெர்சிடஸ்கார் எந்நேரமும் ராணியின் வீட்டிலேயே நிற்கிறதாம். சீன உணவகம் ஒன்றுக்கு அடிக்கடி செல்கின்றனராம்.

அங்கு இருட்டான மூலையாகப் பார்த்து அமர்ந்து கொள்கின்றனராம். அதன்பின்னர் விஷமங்களில் திளைத்து மெய்மறந்து போகிறார்களாம்.

'ஹேராம்' படத்தில் ராணிமுகர்ஜியை ஷாருக்கான் கொத்திக் கொண்டு போகக்கூடும். அல்லது ராணியே அவரை ஒரு வழி பண்ணிவிடுவார் என்று மும்பாய் சினிமா வட்டாரம் குசுகுசுக்கிறது.

இதேநேரம், ராணிமுகர்ஜி பற்றி நன்கு அறிந்துள்ள கமலின் மனைவி சரிகாவும் விழிப்பாக இருக்கிறாராம். கவரும் கலைகளில் வல்லவரான கமலை ராணியின் எடுப்பான தோற்றம் வளைத்துப் போட்டு விடுமோ என்றுதான் பயப்படுகிறாராம்.

## டயானா தாராளம்

'பந்தா' நீண்டகால தயாரிப்பில் இருந்த படம். தற்போது ஓரளவு ஒப்பேற்றி இருக்கிறார்கள்.

சந்தோஷ், டயானா இருவரும் ஜோடியாக நடிக்கிறார்கள். சிவபாரதி வில்லனாக அறிமுகமாகிறார். பணக்கார வில்லியாக வடிவுக்கரசி நடிக்கிறார்.

இளம் ஜொள்ளர்களை திருப்திப்படுத்தும் நெருக்கமான காட்சிகளும் இருக்கின்றன.

டயானா துணிச்சலாக கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறார். சந்தோஷில் உருண்டு புரண்டு தாராளமாக கலக்கியும் இருக்கிறார். பாரதிராஜாவின் உதவியாளரான இந்திரஜித் இப்படத்தை இயக்குகிறார். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார். விரைவில் திரைக்கு வரப்போகிறது.

## தந்திர நடிகைகள்

நடிகர், நடிகைகள் தயாரிப்பாளர்களுக்கு செலவு வைப்பது புதுமையல்ல. சம்பளத்துக்கு மேலதிகமாக அவ்வப்போது செலவு வைத்தால்தான் அவர்களுக்கு திருப்தி.

தற்போதைய நடிகைகளில் சிம்ரான், கௌசல்யா இருவரும் புதுவிதமான செலவை ஏற்படுத்துகிறார்கள்.

வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு படப்பிடிப்புக்கு செல்வதானால் தமது சகாக்களுக்கு என்று நான்கு ஐந்து டிக்கெட்டுக்களை பெற்றுக் கொள்வார்கள். ஆனால் கூடச் செல்வது தாய்க்குலம் மட்டும்தான். ஏனைய டிக்கெட்டுக்களை விற்று விடுகிறார்கள். இது எப்படி?!

www.padippakam.com

## துடுப்பாட்டம்

எப்படித்தான்
ஆடினாலும்–அந்த
எல்லை (கோட்டை)யை
மட்டும்
நெருங்கவே
முடியவில்லை!
**
தவறுதான்!
நீ விழிகளால்
வீசும் பந்துகளை
எதைக் கொண்டு
தடுத்தாடுவது?
**
விளையாட்டு
விதிகளே
முரண்படும்போது
முறைப்பாடுகளை
எங்கே போய்
கொட்டுவது?
**
நடுவர் கூட
இல்லாதபோது
எங்குதான்
முறையிடுவது?
**
காலநிலை
நன்றாகத்தான்
இருக்கிறது.
**
ஆடுகளம்
சரி இல்லை என்று
சொல்லக்கூட
நான் தயாரில்லை!
**
நம்பமுடியவில்லை!
திறமைகள்கூட
எங்கோ
ஒளிந்துகொண்டன.
**
மைதானத்தில்
நிற்கும்
பதினொருபேரும்
நீயாகத்தான்
தெரிகின்றாய்!
**
நிலைத்து நின்று
ஆடுவதே
கேள்விக்குறி
ஆகும்போது
வெற்றி எங்கே?
**
ஐம்புலனும்
ஒரு முகமாகி
முத்தி நிலையில்தான்.
இதோ–
ஆட்டமிழந்து
விட்டேன்!
**
பார்வையாளர்
ஆர்ப்பரிக்கின்றார்கள்;
என்னைக் கேலி
செய்கின்றார்களா?
உன்னை
வாழ்த்துகின்றார்களா?
ஒன்றுமே
புரியவில்லை!

இணுவையூர் உத்திரன்.

## ஒரு பட்டப் பகல் அமாவாசை

ஊரின் முகமெல்லாம்
ஊத்தையாய் கிடந்தது.
சூரியன்கூட கண் விடுக்கவில்லை.
வீதியெல்லாம் தேமல் பிடித்து...
எங்கே போனது
என்னூரின் அழகு?
–0–
[illegible]வெல்லாம் அழுது
[illegible]
அன்றைய மாலையும்–
மிகவும் அசிங்கம்.
பைத்தியக்காரியின்–
தலை முடி மாதிரி
கொக்குப் பீச்சிய
ஆலமரம் வேறு...
–0–
ஊரின் முகமெல்லாம்
ஊத்தையாய் கிடந்தது
கடற்கரை மணலும்
கருகிக் கிடக்க
காற்றில்கூட நாற்றம் வேறு..
சல சலத்தோடிய அழகு ஆறு
முக்கி முனகி–இப்போ
முணுமுணுத் தோடிற்று.
–0–
எங்கே போனது
என்னூரின் அழகு?
–0–
ஊரின் முகமெல்லாம்
ஊத்தையாய் கிடந்து,
சூரியன்கூட கண் விடுக்காத,
வீதியெல்லாம் தேமல் பிடித்த,
அந்த–அந்திப் பொழுது
அவள் வரவில்லை!
–0–
ஊரின் முகமெல்லாம்
ஊத்தையாகவே கிடந்தது!

யூயெல் மப்றூக்-
அட்டாளைச்சேனை-01.

## விதை

புகார் படர்ந்த
அதிகாலையில்
துளித்துளியாய்
படிந்திருக்கும்
பனி நீர்ப்படிவுகள்
காலக் கரங்களில்
கைதாகிக் கரைவது
போல்–நீயும்
காணாமல் போனாய்!
•••
வெள்ளி முளைத்த
வெண்மேகக் கூட்டத்தில்
தொட்டுத் தவழும்
பூங்காற்று
பரிசோதனைக் குழாயில்
பதுக்கப்படுவதுபோல்
நீயும் செம்மணியில்
புதைக்கப்பட்டாய்!
•••
ஈழமணித் திருநாட்டில்
நீ விதை!
•••
பூமியில் புதிதாக
முளைத்தெழும்
ஆகர்ஷ சக்தியாய்
அடுத்த தலைமுறையின்
காப்பரணாய்
காலக்கடுகதியில்
காலூன்றித் தடம்
பதிப்பாய்!
•••

ப.ராதா.

## நான் வருவேன்

'சூரியகதி'ருக்கு நீயும்
'சத்ஜெய'வுக்கு நானும்
இடம் நகர்ந்து...
வன்னியில் சந்தித்தோம்!
சளைக்காத எம்
'இதய பூமியில்'
காதலெனும் நதி ஊற்றெடுக்க
எம் காதலுக்கும்
'வெற்றி உறுதி'என
இறுமாந்திருந்தோம்!
'ரணகோஷ'வந்து
இதயமெல்லாம் ரணமாக
இன்று நீ யாழில்
நான்...
ஓயாத அலைகளாய்
ஆர்ப்பரிக்கும் மனதுடன்!
என்றாலும் ஒரு நாள்
தவளைப் பாய்ச்சலாய்
உன்னிடம்
நான் வருவேன்!

ந. திவாகரன்- வன்னி.

## தேன் கிண்ணம்



## யார் இவர்?

இக்காலப் பிரபலத்தின் அக்காலத்தோற்றம். இவர் உங்களையும் ஆட வைப்பார். ஊகிக்க கஷ்டமில்லைத் தானே?! விடை உதவி, 18ம் பக்கம்.

## ஏன்?

தூக்கிடவே செய்தோர்கள்
தூங்குவதேன்? தீமைகளைத்
தாக்கிடவே செய்தோர்கள்
தாங்குவதேன்? வலுவற்ற
••
வாக்குகளால் வீரத்து
வாதம் புரிந்தோரின்
நோக்கமெலாம் மாறி
நொள்ளையாய்ப் போனதுமேன்?
••
கூடக் கிடந்திட்ட
குற்றத்தால் சிற்சிலபேர்
வாடிக் கிடப்பாரோ?
வருநாள் தெளிவாரோ?

"அகதிக் கவிராயர்"
திரு.சோ. இராசேந்திரம்-
திருமலை.

## இந்தவாரம் உங்கள் பலன்

**20.06.99 முதல் 26.06.99வரை**

ஜோதிடர் 'கரீனா'

### மேடம்:

7ம் இடத்தில் செவ்வாயும், 4ம் இடத்தில் சுக்கிரனும் சிறப்புப் பெறுவதால் தனயோகங்கள் சித்திக்கும். பண வசதிகள் பெருகும். மனதில் நம்பிக்கை கூடும். தொழில், கல்வி, சீரடையும். முயற்சிகள் கைகூடும்.

அதிஷ்ட நாட்கள் : திங்கள் வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 22,25.

### இடபம்:

ஏழரைச்சனி கால அமைப்பினால் எடுத்த கருமங்கள் தாமதமடையும். பொருளாதார வசதிகள் சீராகக் காணப்பட மாட்டாது. முயற்சிகள் தாமதமடையும். குடும்ப உறுப்பினர்களால் தொல்லைகள் ஏற்படும்.

ஆதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 20,21.

### மிதுனம்:

கிரக பலம் 11ம் இடத்தில் குடும்பஸ்தான பலம் பெறுவதால், எடுத்த கருமங்கள் வெற்றி பெறும், பணவசதி கிடைக்கும் சகோதரர்களால் உதவி கிடைக்கும், பிரயாண சுகம் உண்டு.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 22,26.

### கடகம்:

இவ்வாரம் மனக்குழப்பம் ஏற்படும். தொழில் பிரச்சனைகள் தோன்றும். பணக்கஷ்டம் உண்டு. திருமணம், தொழில் முயற்சிகள் தாமதமடையும். ஆயிலியம் நட்சத்திரப் பெண்களுக்கு நன்மையான வாரம்.

அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 21,24.

### சிம்மம்:

எடுத்த கருமங்கள் நல்ல முடிவைத் தரும். தூர இடத்துச் செய்தி நன்மை தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மக நட்சத்திரகாரருக்கு நற்பலன்கள் உண்டு.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21,23.

### கன்னி:

நோய் துன்பங்கள் தலையெடுக்கும். பெற்றார் வழியில் சிக்கல்கள் தோன்றி மறையும். காதல் உறவுகள் சிறப்புக் கொடுக்கும். உத்தர நட்சத்திரப் பெண்களுக்கு சிக்கல்கள் தோன்றும்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : மருண்வர்ணம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 04,07.

### துலாம்:

7ம் இட வியாழனும், பத்தாம் இட சுக்கிரனும் குடும்பச் சூழலை வளப்படுத்தும். தொழில் முயற்சிகள் சிக்கலைத் தராது. சுவாதி, விசாக நட்சத்திரக்காரர்களுக்கு யோகமான பலன்கள் கிட்டும். பணப் புழக்கம் சீராக அமையும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23,24.

### விருட்சிகம்:

இவ்வாரம் பொதுவாக நல்ல பலன்கள் காணக்கூடிய நிலையுள்ளது. புதிய தொழில், பணவசதி, மனைவி வழி உதவிகள் கிட்டும். கேட்டை, அனுஷ நட்சத்திரக்காரருக்கு சமமான பலனுண்டு.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21,24.

### தனுசு

5ம் இடத்தில் கிரக நிலைகள் சேருவதால் பண வசதிகள், புதிய முயற்சிகள் சீரடையும். தடைப்பட்ட கருமங்கள் கைக்கூடும். மூல, உத்திராட நட்சத்திரக்காரப் பெண்களுக்கு திருமணம் கைக்கூடும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 23,25.

### மகரம்:

இவ்வாரம் சனி, வியாழன் கிரகங்கள் நன்மை தருவார்கள். எடுத்த விடயங்கள் கைக்கூடும். தூர இட உறவினர்கள் வருவார்கள். மனதில் நம்பிக்கை பிறக்கும். திருமணப்பேசுக்கள் அடிபடும். அவிட்ட நட்சத்திரக்காரருக்கு நல்ல காலம்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 23,24.

### கும்பம்:

மனச்சிக்கல்கள் அதிகரிக்கும். வழக்குகள், அரசாங்கத் தலையீடுகள் காணப்படும். குடும்பத்தில் விரிசல்கள் ஏற்படும். இடமாற்றம், பயண அலைச்சலைக் கொடுக்கும். பூரட்டாதி, சதய நட்சத்திரப் பெண்களுக்கு கெடுதிகள் உண்டு. கவனம் தேவை.

அதிஷ்ட நாட்கள் : சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21,24.

### மீனம்

சனி, வியாழன் 2 இடத்திலும் 5ல் சுக்கிரனும் பலம் பெறுவதால் பணவசதிகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நடை பெறும். எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 24,20.

## நில்-கவனி-முன்னேறு

சந்தோஷமாக வாழ்ந்து வருவதுதான் மிகப் பெரிய வெற்றியாகும். சந்தோஷமான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுவது ஒரு மாபெரும் சாதனையாகும்.

சந்தோஷம் தானாக ஆகாயத்திலிருந்து உங்கள் முன் குதித்து உங்களை அணைத்துக் கொள்ளப் போவதில்லை. அது மரத்தில் காய்ப்பதில்லை. அது கனிவளத்தைப் போன்று பூமிக்கு அடியில் புதைந்து கிடப்பதில்லை.

மற்றவர்களுடைய உதவிகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சந்தோஷம் கிட்டுவதில்லை. அது யாருக்கும் இலவசமாகக் கிடைப்பதில்லை. அதை ஒவ்வொருவனும் கடினமான பயிற்சியின் துணை கொண்டு தன் உள்ளத்திலேயே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.



'செல்வத்தை உற்பத்தி செய்யாதவர்களுக்கு செல்வத்தை அனுபவிக்கும் உரிமை இருக்கக் கூடாது. அதே போன்று சந்தோஷமான சூழ்நிலையை உருவாக்கி அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்காதவனுக்கு சந்தோஷத்தை அனுபவிக்கும் உரிமை இருக்கக்கூடாது' என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார்.

உங்களுக்கு சந்தோஷமான வாழ்க்கையையோ உயர்ந்த பதவியையோ அல்லது வீடு போன்ற சொத்துக்களையோ இலவசமாகக் கொடுப்பதற்கு கடவுள் சிறிதுகூட கடமைப் பட்டிருக்கவில்லை.

உழைப்பு, முயற்சி போன்றவைகளின் துணையைக் கொண்டுதான் ஒருவன் இவைகளை அடைய முடியும்.

இந்த உலகத்தில் வாழ் நாள் முழுவதும் சந்தோஷமாக வாழ்ந்தவர்கள் யாருமே கிடையாது. இன்பமும் துன்பமும் கலந்து வருவதுதான் வாழ்க்கை.

ஏமாற்றங்களும் சோதனைகளும் குறுக்கிடும்போது மனம் தளராமல் தைரியத்துடன் செயல்பட வேண்டும்.

'புத்திசாலி சாதுரியமாக நடந்து கொள்வதின் மூலம் தோல்விகள், ஏமாற்றங்கள் போன்றவைகளைத் தவிர்த்துதான் சந்தோஷமாக வாழ்ந்து, வரும் காலத்தின் அளவை அதிகப்படுத்திக் கொள்ளுகிறான்' என்று ஒரு மன இயல் நிபுணர் தான் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

சந்தோஷமாக வாழ்வதை தள்ளிப் போடாதீர்கள்!

## முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

201. ந.தனுஷா,
ஸ்பிரிங் வெளி குறுப், பதுளை.
202. ஜெ.லூர்துமேரி,
பிரெம்லி தமிழ் வித்தியாலயம்,
கந்தபொல.
203. பாத்திமா அஸ்மத்,
75/22, மீரிபன்ன வீதி, தர்கா நகர்.
204. ந.கவிப்பிரியா,
174/14, அம்புகமுவ வீதி,
நாவலப்பிட்டி.
205. ஜெ.எம்.சம்மி,
குருந்துகொல்லை, குருத்தலாவை.
206. எஸ்.பரமேஸ்வரன்,
சென்கிளேயர் குறுப், ஸ்ரேலிங்
பிரிவு, தலவாக்கலை.
207. மெடோனாமேரி,
கொரட்டஸ் பாடசாலை, லோன் வீதி,
நுவரெலியா.
208. ஜெ.யூ.ஸிபாயா,
பகினிகஹவெல மு.ம.வி, பிபிலை.
209. வீரசிங்கம் ஸ்ரீதரன்,
மல்லிகைத்தீவு, மூதூர்.
210. எஸ்.புண்ணியஜோதி,
இல.13,ஹந்தானை, கண்டி.
211. ஏ.ரியாழா,
108, பிரதான வீதி, மதவாச்சி.
212. சி.இராஜேஸ்வரி,
1ம் வட்டாரம், சல்லி, சாம்பல் தீவு.
213. ம.தர்மசீலன்,
289, வீரபுரம், நேரியகுளம்,
வவுனியா.
214. எஸ்.எல்.ஜுனைதா பீவி,
236, ஹோராப்பொல, கெகிராவ.
215. டி.ஜே.ஜே.செல்வம்,
39/30, நெல்சன் ஒழுங்கை,
கொள்ளுபிட்டி.
216. இரா.மஹாலக்ஸ்மி,
333, முவன்கந்தை, மாவத்தகம.
217. ஏ.எஸ்.ஹிதாயா பேகம்,
கந்தசேனை, நமுனுகுல.
218. எம்.எஸ்.ஜோதிவேல்,
தெபட்டன் தமிழ் வித்தியாலயம்,
நோட்டன்.
219. எம்.எஸ்.எம்.பௌசல் அமீர்,
419, எலபடகம, பன்னல.
220. தி.சிவசங்கரி,
20/ஏ2, விஜயா வீதி, கல்கிசை.
221. ரி.கலா,
20,பெம் சி.சி.கம, வாகுல,
ருவன்வெல்லை.
222. க.கங்காதேவி,
பாரதி வீதி, காரைதீவு-06.
223. ரி.கேதீஸ்வரி,
கடற்கரை வீதி, திருக்கோவில்-01.
224. ஆர்.எச்.சஹானி,
100/1,மீராபள்ளி வீதி,காத்தான்குடி-05.
225. எஸ்.ரட்னமணி,
இல.1, கோயில் வீதி, மாத்தளை.
226. நா.சத்தியசீலன், போஹில்,கட்டபுலா.
227. க.பூபாலசிங்கம்,
107/7, ஜிந்துபிட்டி வீதி, கொழும்பு-13.
228. அ.அபிராமி,
170/15, அல்விஸ் டவுன், ஹெந்தளை-
வத்தளை.
229. எம்.ஏ.சீ.முஸ்தனீரா,
மரிக்கார் விலா, கற்பிட்டி.
230. ஆர்.திரோசனி,
உடா கொட்டல, இறக்குவானை.
231. து.குலதீபன்,
தபாற் கந்தோர், நீர்கொழும்பு.
232. சொ.திருச்செல்வம்,
மேமலை, 2ம் பிரிவு,
இஸ்பிரிங்வெளி, பதுளை.
233. ந.ஜெயகுமாரி,
13, சிவன் வீதி, திருகோணமலை.
234. மு.சைலஸ்ரீ,
உபதபாலகம், அம்பாள் நகர்,
கிளிநொச்சி.
235. சி.யோகராஜ்,
218 பி, சீவலிபுர, வனாத்தமுல்லை,
பொரல்ல.
236. ஏ.எம்.எஸ்.பரீனா,
530, புதிய மார்கட் வீதி,
சாய்ந்தமருது-07.
237. ஆர்.வாசுதேவன்,
ஸ்ரீராமஜெயம், ஆரையம்பதி-03.
238. சி.அனுராதா,
மானுவன்கம, சிலாபம்.
239. கே.டெமிசி,
புனித என்றுஸ் கல்லூரி, புத்தளம்.
240. சி.சுப்பிரமணியம்,
ஏ.6,மிராஜ் வீடமைப்புத் திட்டம்,
சொய்சாபுர, மொரட்டுவ.
241. த.சுபாஜினி,
இந்துக்கோயில் வீதி,அக்கரைப்பற்று-07.
242. எம்.ஐ.எம்.நவாஸ்,
445/5, பஹமுன, நாரம்மல.
243. இ.கே.அந்தோணிப்பிள்ளை,
12/1,பிரெண்ஸ் விடுதி,மல்லியப்பு,எட்டன்.
244. அ.அமலராஜன்,
4ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு.
245. மு.இஸ்ஸத்,
27,பிரதான வீதி, ஒட்டமாவடி.
246. த.சுகந்தினி,
போடைஸ் குறுப், டிக்கோயா.
247. பொன்னம்மா தங்கராஜ்,
5/5,உம்பிச்சி பிளேஸ், கொழும்பு-13.
248. யு.கவிதா,
42,2/2, எஸ்.டி.எஸ் ஜெயசிங்க
மாவத்தை, களுபோவில.
249. எச்.சல்பியா,
30/2, கம்மெத வீதி, சரிக்காமுல்ல,
பாணந்துறை.
250. ஏ.சி.சியாமா,
2 வட்டாரம், எருக்கலம்பிட்டி,
மன்னார்.

ஏனையோர் விபரம் அடுத்த முரசில்



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## எப்படிப் போடுவது?

அழகாக லிப்ஸ்டிக் போடுவது எப்படி? இப்படித்தான்-

முதலில் லிப் பென்சிலால் லிப்ஸ்டிக் போட வேண்டிய பகுதியில் அவுட்லைன் போட வேண்டும்.

மெலிதான உதடுகளைக் கொண்டவர்களின் உதடுகளின் வெளிப்பகுதியில் அவுட்லைனை வரைய வேண்டும்.



மேல் உதடு மெலிதாகவும், கீழ் உதடு தடிமனாகவும் இருப்பவர்கள் மேல் உதட்டின் வெளிப்பகுதியிலும், கீழ் உதட்டின் உட்பகுதியிலுமாக அவுட் லைன் போடவேண்டும்.

இனி அவுட்லைன் போட்ட பகுதிகளில் லிப்பிரஷ் மூலம் லிப்ஸ்டிக்கை போடவும்.

அதிக குளிரும் சரி, அதிக வெயிலும் சரி, இரண்டுமே லிப்ஸ்டிக்குக்கு எதிரிகள். காரணம் உதடுகள் வறண்டு விடும்.

பொதுவாக லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்னால் தேங்காய் எண்ணெயை உதடுகளில் தடவி, 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு துணியை நனைத்து உதடுகளைத் துடைக்கவும்.

அதன் பிறகு லிப்ஸ்டிக் போடுவது நலம். லிப்ஸ்டிக் போட்டவர்கள் அதிக நேரம் வெய்யிலில் அலையவே கூடாது. அத்துடன் ஒரே லிப்ஸ்டிக்கை 6 மாதத்திற்கு மேல் பயன்படுத்தக்கூடாது.

தரமான விலையுயர்ந்த லிப்ஸ்டிக்கை பயன்படுத்துவதே சாலச் சிறந்தது.

## பேஷ் பேஷ் தேனீர்

தேனீர் தயாரிப்பது எப்படி?

"தேனீர் தயாரிக்க எங்களுக்கு சொல்லியா தர வேண்டும்?" என்று கேட்காதீர்கள். சுவையாக தேனீர் தயாரிக்க இங்கே கற்றுக் கொள்ளுங்கள். (ஆண்களும் தான்.)



நல்ல அபார சுவையுடன் தேனீர் தயாரிக்க, முதலில் தேனீர் மசாலா தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள்.

பெருஞ்சீரகம் 1/2 கப், சுக்குத்தூள் 1/2 கப், மிளகு 1/4 கப், ஏலக்காய் 10, கராம்பு 10, காய்ந்த துளசி இலைகள் 1/2 கப் ஆகியவற்றை எடுத்து வறுத்து, பொடித்து ஒரு போத்தலில் அடைத்து வையுங்கள். இதுதான் தேனீர் மசாலா.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மாதிரி தேனீர் தயாரிப்பார்கள். ஆனால், சரியான முறையில் தேனீர் தயாரிப்பது இப்படித்தான்.

அடுப்பில் பாத்திரத்தை வைத்து, தண்ணீர் விட்டு, கொதித்து வரும் போது ஒரு சிட்டிகை தேனீர் மசாலாவைப் போடுங்கள். பிறகு பாலை அதில் கொட்டுங்கள். நன்கு கொதித்து வரும்போது, 1/2 தேக்கரண்டி தேயிலையைப் போட்டு இறக்குங்கள்.

பிறகு தேவையான சீனி கலந்து 1 நிமிடம் வைத்திருந்து வடிகட்டி எடுங்கள்.

"ஆஹா... கம கமக்கிறதே தேனீர் வாசனை!" என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாரும் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## தாய்ப்பால்



தாய்ப்பாலில் உள்ள ஒரு முக்கியமான மருத்துவ குணத்தை இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும் ஒருவகை வைரஸ்களிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்கிறதாம் தாய்ப்பால்.

அதாவது 'ரோட்டோ' எனப்படும் ஒரு வைரஸ் 6 மாதங்களில் இருந்து 3 வயது வரையிலான குழந்தைகளைத் தாக்கி அவற்றிக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்துகிறதாம். இதனால் ஆண்டு முழுவதும் 10 இலட்சம் குழந்தை மரணங்கள் நிகழ்கிறதாம்.

அந்த வைரஸை எதிர்க்கும் சக்தி தாய்ப்பாலுக்கு இருப்பதாக இப்போது விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர்.

தாய்ப்பாலில் 'லோக்டா தெரின்' என்ற பொருள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதுவே வைரஸ்களை அழிக்கிறது என்று இப்போது கண்டுபிடித்துள்ளனர்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FX

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-06-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 92

புவனா

உணவகத்துக்குச் செல்ல முடியாததால் ரிட்ஸ் ஹோட்டலுக்கு காரைச் செலுத்துமாறு டோடி உத்தரவிட்டார்.

ரிட்ஸ் ஹோட்டலை நோக்கி செல்லும் போது உணவக நிர்வாகியுடன் தொடர்பு கொண்டு, ஏற்பாட்டை இரத்துச் செய்யும்படி டோடி கேட்டுக் கொண்டார்.

கார்கள் ரிட்ஸ் ஹோட்டலை அடைந்த போது அங்கும் கூட்டம் நின்றது. பாதுகாவலர்கள் உதவியுடன் டயானாதான் முதலில் இறங்கினார்.

கமராக்கள் வெளிச்சங்களை பாய்ச்சின. டயானாவுக்கு கண்கள் கூசின. அவர் தன் கையொன்றால் கண்களை மறைத்துக் கொள்ள முயன்றார்.

டோடி காருக்குள் இருந்தபடி படப்பிடிப்பாளர்களை ஏக வசனத்தில் திட்டினார். அந்தக் கூச்சல்களுக்கு இடையே யார் காதிலும் அவர் திட்டியது விழவில்லை.

ஹொட்டல் சிப்பந்திகள் திகைத்துப் போனார்கள். மறுபடியும் டோடியும், டயானாவும் அங்கு வருவார்கள் என்பதை அவர்கள் எதிர் பார்க்கவில்லை.

படப்பிடிப்பாளர்கள் வெறிபிடித்தவர்கள் போல நடந்துகொண்டனர். அவர்கள் தங்களுக்குள்ளேயே முட்டி மோதி இடிபட்டனர்.

சிலர் டயானாமீதே விழுவது போல சாய, பாதுகாவலர்கள் அவர்களை பின்நோக்கி தள்ளி விட்டனர்.

சில நாட்களுக்கு முன்னர் டோடியும், டயானாவும் முத்தம் கொடுத்த காட்சியை எடுத்த படப்பிடிப்பாளர், அதனை நாலு இலட்சத்து பத்தாயிரம் டொலருக்கு விற்றிருந்தார். இலங்கை மதிப்பில் இரண்டு கோடியே எண்பத்தேழு இலட்சம்.



இந்த தகவல்தான் ஏனைய படப்பிடிப்பாளர்களுக்கு டயானாவை துரத்தும் அதீத ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தது.

டயானா- டோடியை ஒரு வித்தியாசமான புகைப்படத்தை எடுத்துவிட்டால் அதனை உலகின் பல செய்தி நிறுவனங்களுக்கு விற்றுவிடலாமே என்று ஆலாய்ப் பறந்தார்கள்.

### பப்பராஸ்ஸிகள்

எந்த ஒரு பத்திரிகைக்கும் என்றில்லாமல் பொதுவாகவே தமது செய்திகளை கொடுத்து பணம் வாங்குபவர்கள் இருக்கின்றனர். அது போல படப்பிடிப்பாளர்களும் இருக்கின்றனர்.

இப் படப்பிடிப்பாளர்கள் 'பப்பராஸ்ஸி'கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள்மீது பழியைப்போட்டுவிட்டு பத்திரிகைகளும் தப்பிக்கொள்ள பார்க்கின்றன.

இப்படப்பிடிப்பாளர்களால்தான் பல பத்திரிகைகளின் விற்பனைகளே கிடுகிடுவென்று ஏறின.

டயானா-டோடி பற்றிய படங்களுக்கு மவுசை ஏற்படுத்தியவை பத்திரிகைகள்தான்.

மவுசு இருந்தாலும், பத்திரிகைகளும் செய்தி நிறுவனங்களும் மேலும் படங்களை கோரியதும், என்ன விலை கொடுக்கவும் தயாராக போட்டி போட்டதும் படப்பிடிப்பாளர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்திருந்தது.

டயானா அந்த ஆவேசமான படப்பிடிப்பாளர்களை ஒருவாறு சமாளித்து உள்ளே போய்விட்டார்.

டோடி சில நிமிடங்கள் காருக்குள்ளேயே இருந்தார். தனது வாழ்வின் மிக முக்கியமான அந்த நாளை மிகவும் அமைதியாகவும், இனிமையாகவும், மன நிறைவுடனும் கொண்டாட முடியாமல் போனதால் அவருக்கு ஏமாற்றமாக இருந்தது.

டோடியையும், டயானாவையும் ரிட்ஸ் ஹோட்டல் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கும் தொல்லைகள்தான் ஏற்பட்டன. ரிட்ஸ் ஹொட்டலில் தங்கியிருந்த பிரபலங்கள் உணவு விடுதியில் இருவரையும் மொய்த்துக் கொண்டனர்.

அவர்களிடம் இருந்து நாசூக்காக விடுபட வேண்டியிருந்தது. இருவருக்கும் தமது வாழ்த்துக்களை பலரும் கூறினர். டோடி சிடுசிடுப்பாகக் காணப்பட்டார்.

டயானா தன்னை அந்தச் சூழ்நிலைக்கு மாற்றிக்கொண்டு கைகுலுக்கிப் புன்னகைத்து ஒருசில வார்த்தைகளும் பேசினார்.

ஹொட்டலின் வெளியே படப்பிடிப்பாளர்கள் கூச்சலும், கும்மாளமுமாக காத்திருந்தனர்.

அதனால் ஹொட்டலுக்கு வரும் வாடிக்கையாளருக்கும் சிரமங்கள் ஏற்பட்டன. இதனை டோடியோ, டயானாவோ விரும்பவில்லை.

### வெளியேறத் திட்டம்

இரவு 11.30 மணியளவில் ஹொட்டலின் முன்பாக நூற்றுக்கணக்கான படப்பிடிப்பாளர்கள் குழுமியிருந்தனர்.

இதற்கிடையே டோடியின் நம்பிக்கைக்குரிய ஹென்றி போல் ஹொட்டலின் முன்புறமாக வருவதும் போவதுமாக இருந்தார்.

ஹென்றி போலைக் கண்டதும் டோடிக்கு கொஞ்சம் உற்சாகம் தொற்றிக்கொண்டது.

யார் கண்ணிலும் படாமல் காரியம் பார்ப்பதில் போல் அனுபவசாலி. காதும் காதும் வைத்தமாதிரி ஒரு காரியத்தை செய்ய வேண்டுமானால் ஹென்றி போலைத்தான் டோடி நாடுவதுண்டு.

பாரிசில் உள்ள பிரபல அழகிகள் பலரை டோடிக்கு அறிமுகம் செய்து வைத்ததும் போல்தான்.

டோடிக்கு போதைப்பொருள் பாவிக்கும் பழக்கம் இருந்தது. 'கொக்கேன்' என்னும் போதைப் பொருளைத்தான் டோடி அடிக்கடி பயன்படுத்துவார்.

அதனை டோடிக்கு போல்தான் பெற்றுக்கொடுப்பார்.

டோடியின் தனிப்பட்ட தேவைகள் அனைத்தையும் டோடியின் மனமறிந்து தீர்த்துவைப்பதால் போல்மீது டோடிக்கு அபாரமான நம்பிக்கை.

ரிட்ஸ் ஹொட்டலிலிருந்து பத்திரிகையாளர்களை ஏமாற்றிவிட்டு வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்யும்படி போலிடம் டோடி கூறினார்.

அதுதான் ஹொட்டலின் முன்புறம் சென்று அடிக்கடி நோட்டமிட்டுக் கொண்டிருந்தார் போல்.

நேரம் சென்றால், டோடி, டயானா இருவரும் ஹொட்டலில் தங்கிவிட்டதாக நினைத்து படப்பிடிப்பாளர்கள் கலைந்து சென்றுவிடுவர் என்று போல் நம்பினார்.

ஆனால் அவர்கள் இம்மியும் அசையவில்லை. நேரம் செல்லச் செல்ல கூட்டம் அதிகமானதே தவிர குறையவில்லை.

அதனால் ரிட்ஸ் ஹோட்டலின் பின்புறவழியாக வெளியேறும் யோசனையைக் கூறினார் போல். டோடிக்கும் அதுதான் சரியென்று பட்டது.

தனது தந்தையாரான அல்,ஃபாயிட்டுடன் தொடர்பு கொண்ட டோடி, ஹொட்டலை விட்டு தனது ஆடம்பர இல்லத்துக்கு செல்லப் போவதைக் கூறினார்.

டோடியின் முடிவை அல்,ஃபாயிட் அவ்வளவாக வரவேற்கவில்லை. ரிட்ஸ் ஹோட்டலில் தங்கியிருக்குமாறு கூறினார்.

## முத்தப் படத்தின் மொத்த இலாபம்

### பிடிவாதம்

ரிட்ஸ் ஹாட்லில் 'இம்பீரியல் சூட்' பகுதியில் சகலவிதமான படாடோபமான வசதிகளும் இருக்கின்றன. அதில் தங்குமாறு அல்,ஃபாயிட் யோசனை கூறினார்.

அந்த யோசனையை மட்டும் டோடி கேட்டிருப்பாரேயானால் பெரும் விபரீதம் தவிர்க்கப்பட்டிருக்கும். உலகை உலுக்கிய மரணம் அன்று நேர்ந்திருக்காது.

டோடி கேட்கவில்லை. தனது உடமைகளும், டயானாவின் உடமைகளும் அந்த இல்லத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு விட்டதால், அங்குதான் இரவைக் கழிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்.

அல்,ஃபாயிட்டும் அதற்கு மேல் தன் மகனை வற்புறுத்தவில்லை.

மறுநாள் காலையில் இலண்டனுக்குச் செல்லும் விமானத்தை டயானா பிடிக்க வேண்டியிருந்தது. அதற்கும் தன் இல்லத்தில் தங்குவதே வசதி என்று டோடி கூறிவிட்டார்.



டோடி–போல்

டயானாவும் டோடியும் அவர்களது பாதுகாவலர்களும் வந்த இரண்டு வண்டிகளும் ஹொட்டலின் முன்புறம் நின்றன. அவற்றை பின்புறம் கொண்டு வந்தால் படப்பிடிப்பாளர்களுக்கு விஷயம் வெளிச்சமாகிவிடும்.

அதனால் ரிட்ஸ் ஹொட்டலுக்கு சொந்தமான சொகுசுக்கார் ஒன்றை எடுத்துக்கொள்ளுமாறு போலுக்கு கூறினார் டோடி.

பென்ஸ்- S 280 மொடல் நவீன சொகுசுக்கார் தயாரானது. தனது இறுதிப்பயணம் இது என்பது அக் காருக்குத்தான் எப்படித் தெரியும்?

**(அடுத்த வாரமும் வரும்)**


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**டயகம வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | செல்வி சுபாஷினி, இல.01, த.வி., டயகம மேற்கு, டயகம. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு க வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





சக்தி தனக்கே கருவியாக்கு-சிவ
சக்தி புகழினையது முழங்கும்-வாய்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்திநெறி யாவினையும் வழங்கும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# எவை அழகான கைகள்?



ஒரு வீட்டில் ஒரு தாயும் அவரது மூன்று மகள்களும் வசித்து வந்தனர். அந்த மூன்று பெண்களும் மிகவும் அழகானவர்கள்.

அவர்கள் மூவரும் தாம் தான் அழகு என ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள்.

தமது அழகுக்கு, தம்முடைய கைகள் தான் எடுப்பாக அமைந்திருக்கின்றன என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

அவர்கள் மூவரும் தமது வீட்டிற்கு வருபவர்களிடம் தம்முடைய கைகளில் யாருடைய கை அழகானது என்று கேட்பார்கள்.

ஒருநாள்- இப்படி இவர்கள் தனது கைகள்தான் அழகு என ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டிருந்த போது ஒரு பிச்சைக்காரி வந்தாள்.

அவர்களின் வீட்டு வாசலில் நின்று பிச்சை கேட்டாள்.

அப்போது அந்த மூன்று பெண்களும் வெளியே ஓடி வந்தார்கள். வெளியே வந்து அந்தப் பிச்சைக்காரியிடம்,

"எங்கள் மூவரின் கைகளில் யாருடைய கைகள் மிகவும் அழகானவை?" எனக் கேட்டனர்.

மிகவும் பசியோடிருந்த பிச்சைக்காரி, அதற்குப் பதில் சொல்லாமல், பேசாமல் இருந்தாள்.

உடனே பெண்கள் மூவரும்,

"அப்படியானால் உனக்குப் பிச்சையே கிடையாது!" என்று ஒரே குரலாகக் கூறினார்கள்.

இதைக் கேட்டதும் சோர்வுடன் அந்தப் பிச்சைக்காரி நகர முயன்றாள்.

அப்போது, அந்தப் பெண்களின் தாய் வெளியே வந்து பிச்சைக்காரியை நிற்குமாறு கூறிவிட்டு, அடுப்படிக்குச் சென்றாள். அங்கிருந்து ஒரு தட்டில் உணவு எடுத்து வந்து பிச்சைக்காரியிடம் கொடுத்தாள்.

மிகுந்த பசியோடிருந்த பிச்சைக்காரி அதை வாங்கிக் கொண்டாள். அவ்விடத்திலிருந்து செல்ல முன், மூன்று பெண்களிடமும்,

"பிள்ளைகளே! உங்கள் மூவருடைய கைகளையும்விட, உங்களுடைய அம்மாவின் கைகள்தான் மிக அழகானவை. ஏன் தெரியுமா? அடுத்தவர்களுக்கு உதவும் கைகளே அழகிய கைகள்"

என்று கூறி விட்டுச் சென்றாள் பிச்சைக்காரி.

'குழந்தைகளே! பிறருக்கு உதவுவதைப் போன்ற நல்ல செயல் உலகில் வேறெதுவும் இல்லை. எனவே அடுத்தவர்களுக்கு உதவ ஒரு போதும் தயங்காதீர்கள்!'

## அதிசயம் - ஆனால் உண்மை!



வறட்சி நீங்கி மழை பொழியும் என்ற நம்பிக்கையில் நடத்தப்படும் சடங்கில் க்ராஹோ இந்தியர்கள் 7மைல் தூரத்தை ஓடிக்கொண்டே கடப்பார்கள். ஒவ்வொருவரும் ஓடும்போது 220 இறாத்தல் நிறையுள்ள ஏழு அடி நீள மரக்கட்டையைத் தோளில் சுமந்திருப்பார்கள்.





ஜெர்மனியில் பீக்கொக் தீவில் பாழடைந்த அரண்மனை ஒன்று உள்ளது. இது ஒருபோதும் அரண்மனையாக இருக்கவில்லை. 1797ல் இது கட்டப்படும் போதே பாழடைந்த அரண்மனையாகக் கட்டப்பட்டது.

ஜெர்மனியை ஆண்ட பலசாலி மன்னரான இரண்டாவது கிங் ஜோர்ஜ், 1509ல் எல்ப் நதிக்கரையில் ஒரு கரடியை தனது கையால் ஒரு குத்து விட்டுக் கொன்றார்.

## மண்புழுக்களின் உதவி



மண்புழுக்கள் நிலத்திற்கு அடியில் குழிகளைத் தோண்டி மேலிருக்கும் மண்ணைக் கீழே கொண்டு செல்கின்றன. இதனால் பூமிக்குள் காற்று சென்று மண்ணை வளப்படுத்துகின்றது.

ஓர் ஏக்கர் நிலத்தில் சுமார் 10 இலட்சம் மண்புழுக்கள் இருக்கின்றன. இவை நான்கு மணி நேரத்தில் தமது நிறைக்குச் சமமான 'கம்போஸ்ட்' என்னும் மண்ணை வளப்படுத்தும் உரம் உற்பத்திக்குக் காரணமாகின்றன.

உலக வரலாற்றிலேயே மண்புழுவைப் போன்று வேறெந்த உயிரினமும் மனிதனுக்காக முக்கியமான ஆக்க வேலையில் ஈடுபட்டது கிடையாது என்று கூறியுள்ளார் பிரபல விஞ்ஞானி சார்ள்ஸ் டார்வின்

## மொழிச் செய்திகள்



- ஹவாய் மொழியில் 12 எழுத்துக்களே உள்ளன.
- வத்திக்கான் நகரில் இத்தாலி, இலத்தீன், ஃபிரெஞ்சு ஆகிய 3 மொழிகள் புழக்கத்திலுள்ளன.
- உலகின் முதல் நாவலான 'செஞ்சி கதை' ஜப்பானிய மொழியில் வெளி வந்தது.
- உலகிலேயே மிக வேகமான மொழி ஃபிரெஞ்சு. ஒரு நிமிடத்திற்கு 350 வார்த்தைகள் பேசலாம்.
- ஃபிரெஞ்சு கயானாவில் பேசப்படும் டாகி என்ற மொழியில் மொத்தம் 340 சொற்கள்தான் உள்ளன.
- உலகின் முதல் கலைக் களஞ்சியம் சீன மொழியில்தான் வெளியானது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.06.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **301**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 299

பரிசுக்குரியவர்:
பே. தினேஸ்குமார்,
கமு/ கோளாவில் விநாயகர் ம.வி, அக்கரைப்பற்று.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி ஜோய்லிட்டா ஜோனசன், நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா. | சி. இந்து ஜயன், விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம், பன்வில. |
| முஹைடீன் முஹைஸ், விபுலானந்தா த.ம. வித்தியாலயம், திருகோணமலை. | ஆர். சுரதிஸ், க/ கலாபொக்க த.வி., மடுல்கெல. |
| சு. சங்கீதா, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹற்றன். | கே. றிஸ்வானா, லன்தே கெதர, வெலிமட. |
| வி. சைலவாசன், இந்து தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். | ப. விஜயவதனன், விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு-4. |
| கீத்தா தவபால், நெளுக்குளம், வவுனியா. | பாத்திமா நுஸ்ஹா, சாந்த தோமியர் பெண்கள் பாடசாலை, மாத்தளை. |

## உடல் வெப்பநிலை

சில உயிரினங்களும் அவற்றின் உடல் வெப்பநிலைகளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. மனிதன்- | 37 பாகை செல்சியஸ் |
| 2. தவளை- | 7-30பாகை செல்சியஸ் |
| 3. பல்லி-ஓணான்- | 18-45 பாகை செல்சியஸ் |
| 4. வெளவால்- | 28 பாகை செல்சியஸ் |
| 5. எறும்பு தின்னி- | 30 பாகை செல்சியஸ் |
| 6. முள்ளெலி- | 35 பாகை செல்சியஸ் |
| 7. பறவைகள்- | 40 பாகை செல்சியஸ் |

## சங்ககாலப் பெயர்கள்

சங்க காலத்தில் சில எண்களுக்கு வழங்கப்பட்ட தூய தமிழ்ப் பெயர்களும், அந்த எண்களும் இதோ:

| | |
|---|---|
| நெய்தல்- | பத்து |
| குவளை- | நூறு |
| ஆம்பல்- | ஆயிரம் |
| சங்கம்- | பத்தாயிரம் |
| கமலம்- | இலட்சம் |
| வெள்ளம்- | கோடி |

## குட்டிச் செய்திகள்

- எல்லா மரத்தையும் அரிக்கும் கறையான்கள் தேக்கு மரத்தை அரிக்காது.
- குளிர்காலத்தைவிட கோடைகாலத்தில் தான் ஞாபகசக்தி அதிகம் இருக்கும்.
- மீன்களைப் போன்று முதலையும் கண்களைத் திறந்துகொண்டுதான் தூங்கும்.
- பூமியின் துணைக்கோளான சந்திரனின் நிறை 8,100 கோடி தொன்கள்.
- ஒட்டகத்தைப் போல் எலியும் நீண்ட நாட்கள் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழும்.
- விலாங்குமீன் நாய்களை விடப் பல மடங்கு மோப்பசக்தி கொண்ட உயிரினமாகும்.
- நண்டிற்கு அதன் வயிற்றின் அடியில் பற்கள் இருக்கின்றன.
- சூறாவளிக் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 120 கிலோமீட்டர்.
- குரங்கு இனத்தில் மட்டும் 50க்கும் அதிகமான வகைகள் இருக்கின்றன.
- பர்மிய நாட்டில் உள்ள 'படவக்' என்ற மரத்தின் பூ 3 முறை பூத்தால் பருவமழை தொடங்கிவிடும்.

## உயர்த்தி [லிஃப்ட்]



இரண்டு, மூன்று மாடிக் கட்டடங்கள் என்றால் படிக்கட்டுக்களைப் பயன்படுத்தி ஏறிச் செல்லலாம். பத்து இருபது மாடிக் கட்டடங்கள் என்றால் உயர்த்தி (லிஃப்ட்) மூலம் செல்லலாம். இந்த உயர்த்தியைக் கண்டு பிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த எலிஷா இரவஸ் ஒடிஸ் என்பவர்.

இவர் கீழே இருந்து, மேல் மாடிக்கு தான் தயாரித்த கட்டில்களை ஏற்றுவதற்காக மேடை போன்ற அமைப்பை உருவாக்கினார். அந்த மேடையை கயிற்றில் கட்டி கப்பி மூலம் மேல் மாடிக்கு ஏற்றினார்.

இந்த முயற்சி பல தொழிற்சாலைகளுக்குப் பயனுள்ளதாக இருக்க, கட்டில் தயாரிப்பை விட்டு விட்டு, உயர்த்தி தயாரிக்க ஆரம்பித்தார். இவர் 1883ல் நியூயோர்க்கில் அமைத்துக் கொடுத்த உயர்த்தி ஒன்று இன்னமும் இயங்கி வருகிறது.

முதன் முதலில் மின்சாரத்தில் இயங்கும் உயர்த்தியை அமைத்தவரும் ஒடிஸ் தான். இவர் இதை 1884ல் அமைத்தார்.

## மிகப் பெரிய மரகதக்கல்



இந்தியாவில் முகலாயர் ஆட்சிக்காலத்தில் உலகிலேயே மிகப்பெரிய மரகதக்கல் பதிக்கப்பட்ட பதக்கம் ஒன்று செய்யப்பட்டது. இந்த மரகதக் கல்லின் எடை 450 கரட். மரகதக்கல்லுடன் முத்துக்களும், வைரங்களும் பதித்து அழகாகச் செய்யப்பட்ட இந்தப் பதக்கம் இப்போது இங்கிலாந்தில் உள்ளது.

உலகின் தலை சிறந்த நகை மற்றும் கைக்கடிகாரத் தயாரிப்பாளர்கள் இந்தப் பதக்கத்தைப் பார்த்து விட்டு, இதைப் போல மிக நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த இன்னொரு பதக்கத்தைத் தயாரிக்க முடியாது என்று கூறிவிட்டனர்.

சமீபத்தில் இந்தப் பதக்கம் இலண்டனில் ஏலத்திற்கு விடப்பட்டது. இது சுமார் 17கோடி ரூபாய்க்கு விலை போனது.

## மரங்கொத்தி



நாம் அடிக்கடி பார்க்கும் பறவைகளில் ஒன்று மரங்கொத்தி. இந்த மரங்கொத்திக்கு பொன் முதுகு மரங்கொத்தி என்று பெயர். இது பெயருக்கேற்ப பொன்நிற முதுகைக் கொண்டது. இதன் கொண்டை சிவப்பு நிறத்திலும், முகம் கறுப்பாகவும் இருக்கும்.

மரங்கொத்தியின் முக்கிய உணவு மரப்பட்டையின் உள்ளும் அடி மரத்தின் துளைகளிலும் உள்ள புழு பூச்சிகளாகும். இவற்றின் உறுதியான அலகுகள் உளியின் முனையைப் போல் உள்ளன.

மரப்பட்டையைக் கொத்துவதற்கும், துளைப்பதற்கும், புழுக்கள் உள்ள மரப்பட்டைகள் உள்ளனவா என்று தட்டிப் பார்ப்பதற்கும் இந்த உறுதியான அலகுகள் உதவுகின்றன.

மரங்கொத்திகள் தங்களுக்குத் தேவையான இரை உள்ள இடங்களை அறியவும், இரைகளைப் பற்றுவதற்குமே மரத்தினைக் கொத்துகின்றன.


படிப்பகம்

ஈஸ்வர் ரத்னவேலை வியப்புத் தடவிக் கொண்ட பார்வையோடு ஏறிட்டார்.

"ரத்னவேல்! நீங்களும், நானும் டாக்டர்ஸ். ஏதோ ஒரு கிராமத்து ஆலமரத்துக்குக் கீழே உட்கார்ந்துகிட்டு கிளி ஜோஸியம் பார்க்கிற ஆசாமிங்க இல்லை நாம. கூடு விட்டு கூடு பாயற கதையெல்லாம் விட்டலாச்சார்யா படத்தைப் பார்த்து ரசிக்கிறதோட நிறுத்திக்கலாம்..."

"நோ... ஈஸ்வர்... அயாம் நாட் ஜோக்கிங். வர்ணா வீட்டுக்கு நான் போயிருந்த போது எனக்கு ஏற்பட்ட எக்ஸ்பீரியன்ஸ் இருக்கே... அதை இப்ப நினைச்சாலும் என்னோட நரம்புகளில் ஒரு குளிர் ஓடுது...."

ஈஸ்வர் இப்போது ஆர்வமானார். தாடையைத் தாங்கிக் கொண்டு கேட்டார்.

"வர்ணா வீட்ல அப்படி என்ன நடந்தது..?"

"வர்ணாவோட அப்பா இப்போ உயிரோடு இல்லை. சில வருஷங்களுக்கு முன்னாடி இறந்துட்டார். அவரோட ஃபோட்டோ ஒண்ணை வீட்ல மாட்டியிருந்தாங்க..."

"சரி..."

"அந்த ஃபோட்டோவில் வர்ணாவோட அப்பா முகம் சிரிப்பே இல்லாமே இறுக்கமாயிருந்தது. நான் அந்த வீட்டை விட்டுப் புறப்படும்போது மறுபடியும் ஏதேச்சையா பார்த்தபோது, ஃபோட்டோவில் இருக்கிற முகம் லேசாப் புன்னகை செய்த மாதிரி இருந்தது."

"ஈஸிட்..?"

"எஸ்..."

"இல்யூஷன்... பிரமை..."

"நோ... ஈஸ்வர் எனக்கு எது பிரமை... எது இல்யூஷன்னு தெரியாதா? அயாம் ஷ்யூர் அபௌட் இட். ஃபோட்டோவில் இருந்த முகம் என்னைப் பார்த்து ஸ்மைல் பண்ணினது இன்னமும் என் மனசுக்குள்ளே அப்படியே ஒட்டிகிட்டு இருக்கு..."

"ரத்னவேல்...! நீங்க இப்படிச் சொல்றது எனக்கு ஆச்சரியமாயிருக்கு. சில ஃபோட்டோக்களை நாம முதல் தடவையாப் பார்க்கும் போது ஒரு மாதிரியா இருக்கும். இரண்டாவது தடவையாப் பார்க்கும் போது வேறு மாதிரியத் தோணும். இது நம்ம விஷன்ல ஏற்படற கோளாறு."

"அந்த ஃபோட்டோவை நீங்களும் வந்து பார்க்காதவரை இப்படித்தான் சொல்லிட்டிருப்பீங்க ஈஸ்வர். வர்ணாவோட அப்பா உயிரோடு இருந்த காலத்துல நாய் வளர்ப்பில் ரொம்பவும் இண்ட்ரஸ்ட் காட்டியிருக்கார்.. ஸோ..."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியுது ரத்னவேல். டிஸ்டெம்பர் நோயில் உயிரை விட்டிருக்க வேண்டிய நாய், இப்ப உயிரோடு இருக்கக் காரணம் அந்த நாயோட உடம்புக்குள்ளே வர்ணா அப்பாவோட ஆவி நுழைஞ்சிருக்கும்னு சொல்ல வர்றீங்க... இல்லையா...?"

"அதேதான்..."

"ஹைலி இடியாட்டிக்...! என்கிட்ட சொன்ன மாதிரி வெளியே யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க ரத்னவேல். ஏஸ்... ஏ... டாக்டர் மெடிக்கலி இது எப்படி சாத்தியம்னு யோசிக்கணுமே தவிர இதுமாதிரி திங் பண்ணக் கூடாது"

ஈஸ்வர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே க்ளினிக் வாசலில் காலடிச்சத்தம் கேட்க இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

வர்ணா நாய்க்குட்டியை மார்போடு அணைத்தபடி வந்து கொண்டிருந்தாள்.

"வாம்மா..." ரத்னவேல் புன்னகைத்தார்.

"ஸாரி டாக்டர்... கொஞ்சம் லேட்டாயிடுச்சு...! புறப்பட்டு வர்ற நேரத்துல வீட்டுக்கு ஒரு கெஸ்ட் வந்துட்டாங்க."

"பரவாயில்லம்மா" என்று சொன்னவர், டாக்டர் ஈஸ்வரை அறிமுகப்படுத்தினார்.

"உன்னோட நாய்க்குட்டியை டெஸ்ட் பண்ணி பார்க்கறதுக்காக டாக்டர் ஈஸ்வரும் இங்கே வந்திருக்கார்..."

"வணக்கம் டாக்டர்..."

"வணக்கம்...! நாயைப் இப்படிக் குடும்மா பார்க்கலாம்..."

டாக்டர் ஈஸ்வர் கைகளை நீட்டிக் கொண்டே எழுந்தார். வர்ணாவின் கையில் இருந்த பிங்கி காதுகளைச் சட்டென்று நிமிர்த்திக் கொண்டு ஈஸ்வரைப் பார்த்து உறுமியது.

★★★

இன்ஸ்பெக்டர் பலராமன் ரிஸீவரை வைத்துவிட்டு நெற்றியைப் பிடித்துக் கொள்ள ஏ.ஓ.குருமூர்த்தி கேட்டார்,

"டெலிஃபோன் ஆப்ரேட்டர் பாலச்சந்திரன் வீட்ல இல்லையா இன்ஸ்பெக்டர்?"

"இல்லைன்னு அவரோட மிஸஸ் சொல்றாங்க. வழக்கமா ஆபீஸை விட்டு ஆறு மணிக்கெல்லாம் பாலச்சந்திரன் வீட்டுக்கு வந்து விடுவாராம். இன்னிக்கு எட்டுமணியாகியும் வரலைன்னு சொல்றாங்க... ஒரு அரை மணி நேரம் கழிச்சு மறுபடி ஃபோன் பண்ணிப் பார்க்கணும்..."

"இன்ஸ்பெக்டர்...! நானும், அருந்ததியும் வீட்டுக்குக் கிளம்பணும்."

"அருந்ததி வேணும்னா போகட்டும். உங்க கிட்ட இன்னும் என்னோட விசாரணை முடியலை."

"இன்னும் என்கிட்ட என்ன விசாரணை செய்யணும்...?"

"கன்ஸல்டன்ஸி க்யூப்ங்கிறது இந்த கம்பெனியோட பேர் இல்லையா..?"

"ஆமா..."

"இந்த கம்பெனியோட பிஸினஸ் என்ன..?"

"இன்ஸ்பெக்டர்....! இந்த கம்பெனியில நாங்க எந்த ப்ராடக்டையும் மேனுபாக்சர் பண்றதில்லை. இது ஒரு அட்வைஸரி கமிட்டி மாதிரி. இந்த சிட்டியில் எத்தனையோ கம்பெனிகள் இருக்கு. அந்த கம்பெனிகளுக்கு பொருளாதார ரீதியாகவும், வேறு ஏதாவது பிரச்சனைகள் சம்பந்தமாகவும் சில உதவிகள் தேவைப்படும். அது மாதிரிகளைச் செய்ய எங்க கன்ஸல்டன்ஸி க்யூப் தயாராக இருக்கும்."

"இந்த கம்பெனிக்கு ஓனர் யாரு...?"

"அதாவது யூ... மீன் எம்.டி...?"

"எஸ்..."

"அவர் பேர் சந்திர மௌலி. டெல்லியில் இருக்கார். வாரத்துக்கு ஒரு தடவை டெல்லியிலிருந்து வந்திட்டுப் போவார். நேத்திக்குத்தான் வந்திட்டுப் போனார். இனி அடுத்த வாரம்தான்.... டெல்லியிலும் இதே மாதிரி கன்ஸல்டன்ஸி க்யூப் கம்பெனி ஒண்ணை நடத்திட்டு வர்றார்..."

"சந்திரமௌலி இளைஞரா...?"

"இல்லை... மிடில் ஏஜ்ட்.ஹி... ஈஸ் ஃபோர்ட்டி..."

"ஆபீஸில் பூவிழியோட நடவடிக்கைகள் எப்படி இருக்கும்..?"

"ஷி ஈஸ் வெரி கொய்ட்... தானுண்டு தன் வேலையுண்டு என்கிற ரகம். அவசியம் இருந்தா மட்டும் மத்தவங்ககிட்ட பேசுவா..."

"அவளுக்கு இங்கே பர்ஸனலா மேஜை இருக்கா...?"

"இருக்கு...."

"அது எதுன்னு வந்து காட்டுங்க..."

குருமூர்த்தி எரிச்சலோடு இன்ஸ்பெக்டர் பலராமனைப் பார்த்தார்.

"இந்த விசாரணையெல்லாம் நாளைக்குக் காலையில வெச்சுக்கக்கூடாதா இன்ஸ்பெக்டர்...?"

"ஸாரி மிஸ்டர் குருமூர்த்தி...! சில விஷயங்களை சூட்டோடு சூடா ஹேண்டில் பண்ணியாகணும். நடந்த சம்பவம் ஒரு பிக்பாக்கெட் கிடையாது. கொலை. நாளைக்கு பொழுது விடியறதுக்குள்ள கொலையாளியை அமுக்கிடணும்."

குருமூர்த்தி அருந்ததியைப் பார்த்தார்.

"நீ வேணும்னா கிளம்பு. நான் இவரோட என்கொய்ரியை மீட் பண்ணிட்டு வர்ரேன்..."

அருந்ததி அதற்காகவே காத்திருந்தவள் போல் தன்னுடைய வானிடி பேக்கை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு கிளம்ப, குருமூர்த்தி இன்ஸ்பெக்டரைப் பார்த்து தலையசைத்தார்.

"வாங்க... பூவிழியோட மேஜைக்குப் போகலாம்."

ஒழுங்காய்ப் போடப்பட்டிருந்த ஃபைபர் மேஜைகளுக்கு நடுவில் இருவரும் நடந்தார்கள்.

கம்யூட்டர் செக்ஷன் வந்தது. மூலையோர மேஜையைக் காட்டினார் குருமூர்த்தி.

"இது தான் பூவிழியோட பர்ஸனல் டேபிள்."

பலராமன் மேஜையை நெருங்கி அதன் இழுப்பு அறையைப் பிடித்து இழுத்துப் பார்த்தார்.

பூட்டப்பட்டிருந்தது.

"இதுக்கு மாற்றுச்சாவி ஏதாவது இருக்கா?"

"இல்லை... பட் எமர்ஜென்ஸிக்காக ஒரு கீ பஞ்ச் வெச்சிருக்கோம்... அதையூஸ் பண்ணிப் பார்த்தா ஒரு வேளை மேஜையைத் திறக்கலாம்..."

"அந்த கீ பஞ்ச்சைக் கொண்டு வாங்க. லெட் அஸ் ட்ரை..."

குருமூர்த்தி கம்யூட்டர் செக்ஷனை விட்டு வெளியேறி ஒரு இரண்டு நிமிஷம் கழித்து கம்பியால் கோர்க்கப்பட்ட கீ பஞ்சோடு வந்தார். பலராமன் அதை வாங்கி மேஜை இழுப்பறையின் சாவித்துவாரத்துக்கு சாவிகளைப் பொருத்திப் பார்க்க, ஒன்று பொருத்திக் கொண்டு லாக்கை ரிலீஸ் செய்தது. டிராயரை இழுத்தார் பலராமன்.

உள்ளே அடைசலாய் கம்ப்யூட்டர் புத்தகங்கள். கம்ப்யூட்டர் தாள்கள். ஃப்ளாப்பிகள். ஒவ்வொன்றாய் எடுத்து வெளியே வைத்தார். ஃபைல், ஸ்டேப்ளர், பஞ்சிங்மெஷின், பென் செட், செல் டேப், ரிஸ்ட் வாட்ச் என்று ஒவ்வொரு பொருளாய் வெளியே வந்து கொண்டிருக்க கடைசியில் டிராயரின் மூலையில் அந்தத் தபால் கவர் தெரிந்தது.

புதிய கவர்.

வாய் ஒட்டப்பட்டிருக்க, உள்ளே மடிக்கப்பட்ட ஒரு கடிதம் அதில் இருந்தது.

தபாலில் சேர்க்க வேண்டிய கவர். கவரின் அட்ரஸைப் பார்த்தார் பலராமன்.

பெயர், முகவரி எதுவுமில்லாமல் வெறுமையாய் இருந்தது.

'உள்ளே என்ன இருக்கிறது?' மனசுக்குள் ஒரு ஆர்வம் முளைவிட கவரின் வாயை உடைத்தார் இன்ஸ்பெக்டர் பலராமன்.

(தொடர்ந்து வரும்)

## இதுவரை

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது. இனி...



# கையில் சிக்கிய மின்னல் 08

கிரைம் சக்கரவர்த்தி

**ராஜேஸ்குமார்**



## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்




அங்களோடு ஜார்ஜும் அங்கு வந்தார். "என்ன வித்யா, 'நான் வரமாட்டேன்'னு நினைச்சியா?- எனக்கு நீ எப்ப வருவேன்னு தெரியும். எனக்கு எல்லா எடத்திலயும் ஆட்கள் உண்டு. இப்பக்கூட கஸ்டம்ஸ்ல ஏதாவது பிரச்சனைன்னா சொல்லு... நான் க்ளியர் பண்ணித் தரேன்."என்றார்.

நாங்கள் எதுவும் பெரிதாகக் கொண்டு வராததால் அவருடைய 'செல்வாக்கு' பயன்படவில்லை.

ஆனால் என் மனதில் அந்த வயதிற்கே உரிய பட்டாம் பூச்சி பறக்க ஆரம்பித்தது. 'இரண்டு மாதங்கள் பிரிந்திருந்தோம். எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆனால் எவ்வளவு அக்கறையோடு நம்மைப் பார்க்க வந்திருக்கிறார்' என்று அவர் மீதிருந்த மதிப்பு உயர ஆரம்பித்தது; காதல் வலுப்பெற ஆரம்பித்தது என்றேகூடச் சொல்லலாம்.

சென்னை வந்து சேர்ந்தோம். எங்கள் காதல், வளர ஆரம்பித்தது. ஆனால் எப்போது திருமணம் என்று மட்டும் முடிவாகவில்லை. காரணம், வீட்டில் இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை. இதற்கிடையில் மெதுவாக என் கால்ஷீட் விஷயங்களைக் கவனிக்க ஆரம்பித்தார் ஜார்ஜ்.

### அம்மா எச்சரித்தார்

நான் என்ன படம் ஒப்புக்கொள்ள வேண்டும், கூடாது என்பதைப் பற்றி கூட மெதுவாக அவரே முடிவெடுக்க ஆரம்பித்தார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த அம்மா என்னை அழைத்து எச்சரித்தார்.

"இதோ பாரு, 'நான் உன் காதலுக்கு எதிரா இருக்கிறதனால சொல்றேன்'னு நினைக்காதே... உன்னுடைய புகழுக்காகவும், நீ சம்பாதிக்கிற பணத்துக்காகவும்தான் அவன் உன் பின்னால சுத்தறான். நீ பொன் முட்டையிடற வாத்துன்னு அவனுக்குத் தெரிஞ்சு போச்சு. அவன் திட்டம் போட்டுத்தான் வந்திருக்கிறான். குறைந்தபட்சம் ஒரு வருஷத்துக்காவது உன் கல்யாணத்தைத் தள்ளிப் போடு!" என்று வலியுறுத்தினார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் ஜார்ஜின் சுயரூபத்தை எனக்குப் புரியவைக்க முடியும் என்று தீவிரமாக நம்பினார் அம்மா.

'தன்னுடைய செல்வாக்கை வைத்து, அவன் எப்படிப்பட்டவன் என்பதை தன் மகளிடம் நிரூபிக்க முடியும்' என்கிற நம்பிக்கை அந்தத் தாய்க்கு. 'தவறு'ன்னு தெரிஞ்சா நான் முடிவை மாத்திப்பேன் என்பதும் அவருக்குத் தெரியும். முந்தைய உறவில் அப்படி முடிவெடுத்தது நான்தான்.

அந்த ஹீரோ 'வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று என்னிடம் சொன்ன போது, 'போதும் அந்த உறவு' என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்தேன். புதிய உறவில் புகுந்து கலகம் செய்கிற எண்ணமெல்லாம் எனக்கு இருந்ததேயில்லை.

அந்த ஹீரோவே வந்து என்னிடம் சொன்னார், "எல்லாருமா சேர்ந்து அந்தப் பெண்ணை என் தலையில் கட்டிட்டாங்க. அந்தப் பெண்ணே எங்கம்மா சாகக் கிடக்கிறபோது வந்து கலாட்டா பண்ணிடுச்சு. எங்கம்மாவுக்கு வாக்கு கொடுத்திட்டேன். அதனால எனக்கு வேறுவழியில்லை. நான் கல்யாணம் பண்ணித் தான் ஆகணும். ஆனால் அந்தக் கல்யாணம் சரிப்பட்டுவராது. நீ கொஞ்ச நாள் காத்திரு. நாம நிச்சயம் கல்யாணம் பண்ணிக்குவோம்" என்றார்.

எனக்கு அந்த எண்ணமே புரியவில்லை. "எங்க இரண்டு பேர்ல ஒருத்தரைத்தான் நீங்க கல்யாணம் பண்ணிக்க முடியும்." என்றேன். என்னைச் சமாதானம் செய்ய முயன்றார். நான் தீர்மானமாக இருந்தேன்.

என்னால் யார் வாழ்க்கையிலும் குறுக்கிட முடியாது. அதனால் யாருக்கும் மனவேதனையைக் கொடுக்க நான் விரும்பவில்லை. என் வீட்டிலுள்ளவர்களைக்கூட உரிமை எடுத்துக் கொண்டு என்னால் காயப்படுத்த முடியாது. அதற்காகப் பல விஷயங்களை வெளியில் சொல்ல முடியாமல் நான் காயப்பட்ட தருணங்கள் தான் அதிகம்.

### பன்னிரண்டு வயதில்

அதேசமயம் வெளியுலகத்தில் பழகுவதற்கு அளவுக்கதிகமான வாய்ப்புகள் இருப்பது மட்டுமே ஒரு பெண்ணை முழுமையான மனுஷியாக்கிவிடாது. என் விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். பன்னிரெண்டு வயதிலேயே சினிமாவுக்கு அறிமுகமாகிய குழந்தைத் தொழிலாளி நான். எனக்குக் கிடைத்த 'எக்ஸ்போஷர்' சராசரிப் பெண்களுக்கு சாத்தியமாகாது. ஆனால் என் வெளியுலக அனுபவம், என்னை வேதனையூருக்குப் போகும் பாதையிலிருந்து விலக்கவில்லை என்பது தான் உண்மை.

அனுபவமும் இருந்து, அறிவும் இருந்தாலும் ஒரு பெண்ணை ஏமாற்ற எத்தனையோ ஆயுதங்கள்! அதில் ஒன்று, போலி அன்பு. நம் கன்னங்களில் வழியும் கண்ணீரைத் துடைப்பவரின் நோக்கம் என்ன என்பதை வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய கட்டாயம், எல்லாப் பெண்களுக்கும் உண்டு.

இதற்கு ஸ்டெனோவும் விதிவிலக்கல்ல; நடிகையும் விதிவிலக்கல்ல. நான் 'பாசவலை'யில் விழுந்தது எப்படி என்பதற்கு என் சின்ன ஃப்ளாஷ் பேக் கதையும் உதவும்.

நான் குழந்தை நட்சத்திரமானேன். ஷூட்டிங்கில் கொடுக்கிற வசனத்தை ஒழுங்காகப் பேசவேண்டும். அப்போதெல்லாம் டப்பிங் வசதி கிடையாது. படப்பிடிப்பின்போதே ஒழுங்காகப் பேசவேண்டும். இல்லையென்றால் மீண்டும் நம்மைக் கூப்பிடமாட்டார்கள் என்கிற பயம். குழந்தை ஸ்ரீவித்யா, குமாரியாக ஆனாள்.

### விலை அதிகம்

ஒரு படப்பிடிப்பை முடித்துவிட்டு இன்னொரு படப்பிடிப்புக்கு ஓட வேண்டும். குளித்துவிட்டு தலையைக்கூட சரியாக துடைத்துக்கொள்ளாமல் ஓடுவோம். 'அப்படிப் போனால் தலைவலி, காய்ச்சல் வரும்' என்று சொல்ல அருகில், பெற்றவள் இருக்கமாட்டாள்.

வெளியே இருந்து பார்த்தால் பகட்டான வாழ்க்கைதான். ஆனால் அதற்குக் கொடுக்கவேண்டிய விலை மிக அதிகம். சொந்தம், பந்தம், சமூகத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கும்.

இருபத்து நாலு மணி நேரமும் வேலை. காலையிலிருந்து இரவுவரை வேலை இருக்கும். ஆரம்ப நாட்களில் சொந்தக் காரும் கிடையாது. கம்பெனி வண்டிதான். அந்தக் கார் எல்லாரையும் இறக்கி விட்டு விட்டு அடையாறில் இருந்த என் வீட்டிற்கு கடைசியாகத்தான் வரும்.

போய் படுக்கையில் விழுந்தால் போதுமென்கிற மாதிரி, உடம்பு அசந்து போயிருக்கும். இதுக்கு நடுவில வருகிற காமெண்ட் வேறு. "டேய்! நேத்து இராத்திரி ஒரு மணிக்கு வித்யாவை ஒரு நடிகரோடு பார்த்தேன்!" என்பார்கள்.

ஒருபுறம் பணம், புகழ்; இன்னொரு புறம் இது மாதிரியான விமர்சனங்கள், இதெல்லாம் சலித்துப் போகிற நேரத்தில் தான் 'நமக்கென்று சாய ஒரு தோளில்லை' என்கிற ஏக்கம் வரும். அப்போது 'தோள் கொடுப்பவன்தான் தோழன்.' என்று தோன்றும். அப்படித்தான் என் வாழ்க்கை பறிபோனது.

(தொடர்ந்து வரும்)



**ஸ்ரீவித்யா**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**மு.க.சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. இனி...

# 07

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**



# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்

அவனைச் சந்திக்கும்போது மட்டுமே அவள் முகத்தில் சுடர்விடும் அந்தப் பிரபையை அவனைப் பற்றிய பேச்சின் மூலம் தன்னாலும்கூட ஒளிரச் செய்துவிட முடியும் என்று உணர்ந்தபோது அவள் உள்ளூர எரிந்து கருகிப் போனாள். அவள் தன்னை மறந்த மயக்கத்தில் அவனைப் பற்றிக் கணவனிடம் பேசிக் கொண்டிருந்தாள். அனந்தராமன் தன் உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக் கொண்டு அவளிடம் கேட்டான்:

"நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமலேயே ரொம்ப காலம் இருந்திருக்கீங்க இல்லே?"

"ஆமாம்; ரொம்ப காலம்...."

"பத்து வருஷ காலம் இருக்குமா?"

"மேலேயே... இருக்கும்."

"அப்போல்லாம் நீ அவனை நினைச்சதே இல்லையா?"

"ம்ஹூம்... அவனை நான் மறந்தே போயிட்டேன். சின்ன வயதிலே எவ்வளவோ பேரோட பழகறோம்..."

"அவன் உன்னைப் பிரிஞ்சு போகாம இருந்திருந்தா நீ அவனையே கூடக் கல்யாணம் பண்ணிண்டிருப்பே! இல்லே?"

அந்தக் கேள்வி அவள் மயக்கத்தைக் கலைத்து, அவளை விழிக்க வைத்து, எதிரில் பேசிக்கொண்டிருப்பது 'இவன்' என்று உணர வைத்தது.

படுக்கை அறை விளக்கின் மங்கிய வெளிச்சத்திலும் அவள் முகத்தில் அந்த இருள் திடீரென்று வந்து கவிவதை அவன் பார்க்க முடிந்தது. அவனது கேள்விக்கு இப்போது அவள் தன்னை மறக்காமல் பதில் சொன்னாள்:

"அதெப்படி சொல்ல முடியும்? விதி சரியாக இருந்தா அவனைவிட மேலானவனாகக் கூடக் கிடைச்சு இருக்கலாம்!"

"அவனை நீ மறுபடியும் சந்திச்ச அப்புறம்-உன் கல்யாண விஷயமாக நீ அவசரப்பட்டுட்டதா நினைச்சு வருத்தப்பட்டதுண்டு. இல்லையா?"

"இல்லை." அத்துடன் அவள் நிறுத்தி இருக்கலாம். ஆனால் அவள் தொடர்ந்து சொன்னாள்: "என் கல்யாணத் தன்னிக்கே..." அதைச் சொல்லும்போது அவள் என்னவோ ஆகிப்போனாள். வார்த்தைகள் தொண்டைக் குழியில் சிக்கித் தவித்தன. தலையணையில் குப்புறப்படுத்து அவள் விம்மி விம்மி அழலானாள்...

அவன் நிஷ்டூரமான குரலில்-வெறியோடு-அவள் முதுகை வெறித்தவாறு சொல்லிக் கொண்டிருந்தான்:

"ஐயாம் ஸாரி! அவனைப் பற்றிய இப்படியொரு கேள்வி உன்னை இவ்வளவு தூரம் வேதனைப்படுத்தும் என்று எனக்குத் தெரியாது."

அவள் சட்டென்று தன் அழுகையை நிறுத்தி முகம் திரும்பி அவனை விழித்துப் பார்த்தாள்: "அவனைப் பற்றிய எந்த நினைவும் எனக்கு வேதனை தராது. அவன் என் நினைவில் எப்படி இருக்கான்னு உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது அவசியமில்லை." இன்னும் என்னென்னவோ அவளுக்குச் சொல்லத் தோன்றியது. எப்படிச் சொன்னாலும் இவனால் தவறாகவே புரிந்து கொள்ள முடியும் என்பதால் அவள் ஒன்றும் சொல்லாமல் உதடுகள் துடி துடிக்க மௌனமானாள். கடைசியாக அவள் சொன்னாள்:

"நீங்கள் ஒளிவு மறைவின்றி எதைப்பற்றி வேண்டுமானாலும் என்னிடம் கேட்கலாம். நானும் ஒளிவு மறைவின்றியே பதில் சொல்லுவேன். ஆனால் உங்களுக்கு அதைப் புரிந்து கொள்ள முடியாது" என்று அவனுக்கு நன்றாகப் புரியும்படி ஆங்கிலத்தில் சொன்னாள்.

"உன்னுடைய மோசமான ஆங்கிலத்தைக்கூட நான் புரிந்து கொள்கிறேன். பரவாயில்லை சொல்லு!" என்றான் அனந்தராமன்.

"உங்கள் மீது கொண்ட அனுதாபத்தால் இதை நான் உங்களுக்குச் சொல்ல நேருகிறது. நான் அவனை மிகவும் உயர்வாக நேசிக்கிறேன். ஏற்கெனவே உங்களுக்கு மனைவியான ஒருத்தியை இழுத்து அவனிடம் விடுகின்ற அளவுக்கு அவனை நான் கேவலமாக மதிக்கவில்லை. அவனைக் குறித்து எப்படிப்பட்ட பயமும் உங்களுக்கு வேண்டிய அவசியமில்லை. இதை நான் பல முறை உங்களுக்கு உணர்த்தியிருக்கிறேன். அவ்வளவுதான். இதைப் பன்னிப் பன்னி எந்தப் பாஷையில் பேசினாலும் எனக்குச் சலிப்பே ஏற்படுகிறது."

அதன் பிறகு அனந்தராமன் கோகிலாவிடம் அவனைப் பற்றி எதுவுமே பேசவில்லை. அவனது வருகை இப்பொழுதெல்லாம் அவன் நெஞ்சை அதிகம் உறுத்துவதில்லை.

ஆனால் இன்று காலை-அனந்தராமன் கண் விழித்த அந்த அதிகாலை நேரத்திலேயே-படுக்கையிலிருந்து தலை நிமிர்ந்தபோது அவன் அங்கு வந்திருப்பதைக் கண்டான்.

முன் ஹாலில் உள்ள பிரம்பு நாற்காலிகள் ஒன்றில் அவன் உட்கார்ந்திருந்தான். அவனது முதுகுப் புறமே அனந்தராமனுக்குத் தெரிந்தது. வெள்ளை அரை நிஜாருக்கு வெளியே தெரிந்த ரோமம் அடர்ந்த அவனது பெருந் தொடைக்கருகே நின்று சுவாரஸ்யமாகப் பேசியவாறு-அவனோடு பேசுவதென்றாலே அவளுக்கு சுவாரசியம் தானே-காபியையோ ஒவலையோ ஆற்றிக் கொண்டிருந்தாள் கோகிலா.

படுக்கையிலிருந்து எழுந்து வந்த அனந்தராமன் அறை வாசற்படியில் சற்று நின்று அவர்களை வெறித்துப் பார்த்தான். கோகிலாவோ அவனோ தன்னைக் கவனிக்காமல் இருப்பதைக் கண்டு காரணத்தோடோ காரணமில்லாமலோ மூண்ட எரிச்சலுணர்ச்சியோடு படீரென அறைக் கதவை இடித்து மோதிக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடந்தான்.

அவன் மனத்துள் தனது எரிச்சலை அவர்களுக்குக் காட்டிவிட்டதாக நினைப்பு. ஆனால் அவர்களோ அவ்விதம் ஏதும் உணராததால் தொடர்ந்து தங்கள் சம்பாஷணையில் மூழ்கி இருந்தனர்.

தலை பற்றி எரியும் கோபத்தோடு பாத்ரூமிற்குள் தனிமையில் நின்றிருந்த அனந்தராமனின் செவிகளில் அவர்கள் இருவரும் பேச்சினிடையே எதற்காகவோ கலகலத்துச் சிரித்தது தன்னைக் கேலி செய்வது போல் வந்து ஒலித்தது.

தனது மனைவி தொடர்ந்து ஒரு அந்நிய புருஷனோடு இவ்வாறு தன்னை மறந்த மகிழ்ச்சியில் திளைத்துப் பேசிகொண்டிருப்பதையும், அவனது பிரசன்னத்தால் அவள் ஒரு அதீத மலர்ச்சி கொள்வதையும் இந்த நிமிஷம் அவனால் சகிக்க முடியவில்லை.

தன்னைப் போன்ற ஒரு நாகரிகமான நவீன காலக் கணவனுக்கு இயல்பற்ற குணம் தான் இது என்று அவன் அப்போதும்கூட உணர்ந்தான். எனினும் வாழ்க்கையையே ஒரு நிர்ப்பந்தமான சுமையாகக் கருதி-விதியே என்று தன் மனைவியாக ஒரு கைதி போல்-காலங்கழித்து வரும் அவள் அவனைக் கண்ட மாத்திரத்தில் புதியவளாக மலர்ந்து வாழ்வின் கசப்பை எல்லாம் அவனது பிரசன்னத்தால் இனிப்பாக மாற்றிக் கொண்டு சுகானுபவம் கொள்வதை அவனால் தாங்கவே முடியவில்லை.

பத்து நிமிஷத்திற்கு மேலாக வெளியில் வர மனமில்லாது பாத்ரூமிலேயே அவன் நின்றிருந்தான். 'சீ! காலையில் எழுந்தவுடன் இப்படி ஓர் எரிச்சலா?" என்று தானே சற்றுச் சமாதானமடைந்தான்; பேஸினில் குனிந்து முகம் அலம்பினான். வாய் நிறையத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வாய் கொப்பளித்தபோது அனாவசியமாகச் சற்று அதிகச் சப்தம் கிளப்பி இரண்டொரு முறை காறிக்காறித் துப்பினான். பின்னர் எதைப் பற்றியுமே கவலைப்படாதவன் போன்ற கனைப்புடன் பக்கத்தில் இருந்த டவலை எடுத்து அதில் சுகமாக முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அப்போது 'அவன்' அவளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படும் பேச்சுக் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்கூட்டர் புறப்படும் சத்தம் கேட்டது.

அனந்தராமன் பாத்ரூம் கதவைத் திறந்தான்.

முன் ஹாலில் நின்று கையில் எவர்சில்வர் பாத்திரங்களோடு ஜன்னல் வழியே தெருவைப் பார்த்துக்கொண்டிருந்த கோகிலா அப்போது தான் திரும்பினாள்.

'அவன் ஸ்கூட்டரில் போகும் அழகை ரசித்துக் கொண்டு நின்றிருந்தாளோ?'

"அவர் கெய்ரோவுக்குப் போறாராம்..." அவள் ஏதோ ஒரு லயத்தில் அனந்தராமனின் முகத்தைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தபோதே அவன் முகத்தில் அனுசரணையான பாவனை ஏதும் இல்லாததைக் கண்டு 'நாம சொல்லி இருக்க வேண்டாமே' என்று மௌனமாகி ஒரு புன்னகையோடு அவனைக் கடந்துபோனாள்.

'ஆ! அதென்ன என் முகத்தைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் அப்படி ஒரு நிழலோட்டம்... அதற்கு அவள் என்ன செய்வாள்? போனால் போகிறது என்று என்னையும் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரிக்கத்தான் செய்தாள். ஆனால் அந்தச் சிறு சிரிப்பே எவ்வளவு பெரிய பொய்! அப்படி அவள் சிரிக்காமலே இருந்திருக்கலாம்.... என்ன சிரிப்பு வேண்டி இருக்கிறது-உள்ளம் மலராத வெறும் உதட்டுச் சிரிப்பு.

(கோகிலா.... தொடரும்)

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 16**

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

**—கண்ணதாசன்—**

## கவியரசு கண்ணதாசன்

பத்திரிகைகளையே பார்த்துத் தூதுக்குழுவுக்கு ஆள் பிடிக்கும்அரசாங்கம், பல வர்த்தகத் தூதுக்குழுக்களுக்கு நாராயணசாமியைத் தலைவராகப் போட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் வரவு-செலவு அறிக்கை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் எப்படியோ நாராயணசாமிக்குக் கிடைத்துவிடும்.

அவர் எதற்கெடுத்தாலும் சிரிப்பார்.

'இருபது இலட்சம் லாபம் கிடைக்கும்' என்றால் பத்து லட்சம் செலவழிக்கத் தயங்க மாட்டார்.

ரஷ்யாவில் ஜார் மன்னன் காலத்துப் பூர்ஷ்வாக்கள், அரசாங்கத்தில் வைத்திருந்த தொடர்பைவிட நாராயணசாமி டில்லியில் வைத்திருந்த தொடர்பு மிகப் பெரியது.

'நல்லதையே சொல்வோம்; நல்லதையே செய்வோம்; நடப்பது நடக்கட்டும்.' என்று தொழில் செய்யும் யாரும் பணக்காரராக முடியாது.

இவ்வளவு சாகசங்கள் தெரிந்தவர்களுக்குத்தான் தன் இதய வாசலைத் திறந்து வைத்திருக்கிறது இந்திய ஜனநாயகம்.

'இந்தியா என்பது எல்லாம் செய்யத் தெரிந்தவனுக்கு இன்பபுரி; நேர்மையைப் பற்றி அதிகம் சிந்திப்பவனுக்கு நரகம்' என்பதை நாராயணசாமி நன்கு புரிந்து வைத்திருந்தார். 'பணம் எப்படி வந்தாலும் உலகம் மதிக்கும்' என்பது அவருக்குத் தெரியும்.

பெரும் பணத்தைத் தன் வீட்டிலேயே வைத்திருக்க முடியாத கோடீஸ்வரர்கள், மிகவும் நம்பிக்கைக்குரியவர்கள் என்று கருதிச் சிலரிடம் கொடுத்து வைப்பதுண்டு.

அப்படிக் கொடுத்து வைக்கும் பணத்தில் ஓரளவே திரும்பி வருவதுண்டு.

இரவு பகலாகத் திட்டமிட்டு, ராஜதந்திரம்



நடத்தி, ஏராளமான சாகசங்கள் மூலம் திரட்டிய பணம் அப்படியே நிலைத்து நிற்பதில்லை.

நாராயணசாமி வீட்டில் உள்ள சோபா செட்டுக்களைக் கிழித்துப் பார்த்தால் உள்ளே பணமிருக்கும்.

இப்படி எங்கெங்கே பணமிருக்கிறது என்பதைத் தெரிந்தவன் ஒரே ஒருவன்.

அவன்தான்- பத்து வருடங்களாக அதே வீட்டில் வேலை பார்க்கும் ராஜசேகரன்.

இவ்வளவு ஆள் பலத்தைக் கையிலே வைத்திருந்தும் கூட அந்த ராஜசேகரனுக்குப் பயந்தே வாழ்ந்தார் நாராயணசாமி.

இந்த நிலையில்தான் நாராயணசாமியின் தம்பி குமாரசாமி, தலைவர் தங்கசாமியின் மைத்துனியை இழுத்துக்கொண்டு பெங்களூருக்குப் போய்விட்டான்.

போகும்போது அவன் கையிலே பத்து இலட்சம் ரூபாயை எடுத்துக்கொடுத்த புண்ணியம், ராஜசேகரனைச் சேர்ந்தது.

ஏனென்றால் குமாரசாமி இருக்கும் போது, அவனால் 'சில காரியங்களை'ச் செய்ய முடியவில்லை. அவனை விலக்கி விட்டால் பிறகு வசதியாக இருக்கும் என்று அவன் கருதினான்.

குமாரசாமி ஓடிப்போன மூன்றாம் நாள், நாராயணசாமி சிங்கப்பூருக்குப் போக வேண்டி வந்தது.

அவரை விமான நிலையத்தில் கொண்டு போய் ஏற்றி விட்டு வந்தான் ராஜசேகரன்.

'அந்த நாள்தான் தனது வாழ்க்கையிலே வில்லங்கமில்லாத நாள்' என்று அவன் கருதினான்.

ஒருவனது இரகசியம் இன்னொருவன் கையிலே மாட்டிக் கொண்டால், நகரமே அவன் வடிவில் வந்து தலையில் உட்காரும். ஆகவே எந்த மனிதனும் இரகசியமில்லாத வாழ்க்கை வாழ வேண்டும். அப்படி ஒரு இரகசியம் இருந்தால் அதற்கொரு பங்காளி இருக்கக்கூடாது.

இரகசியத்தில் பங்கு பெற்ற ராஜசேகரன், நாராயணசாமி சிங்கப்பூருக்குப் போன இரவு வழக்கம்போல் அதே மாளிகையிலேதான் தங்கினான்.

ஆனால் அப்போது அவன் நடந்து கொண்டமுறை நாராயணசாமியின் மனைவி கற்பகத்துக்கே விசித்திரமாக இருந்தது.

அவனாகவே குளிர் பதனப் பெட்டியைத் திறந்து விஸ்கி பாட்டிலை எடுத்து வைத்துக் கொண்டான்.

அடிக்கடி விருந்து நடக்கும் வீடாகையால், ராஜசேகரனுக்கும் அந்தப் பழக்கம் இருந்தது. ஆனால் மற்றவர்கள் எதிரிலே குடிக்காமல் மறைந்து நின்று குடிப்பான்.

இப்போதோ நாராயணசாமியின் படுக்கையறையிலேயே உட்கார்ந்து குடிக்கத் தொடங்கினான்.

கற்பகத்துக்கு உள்ளூர நடுக்கமாகவே இருந்தது.

அவன் அவளையும் கையைப் பிடித்திழுத்துப் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டான்.

அவள் வழக்கமாகச் சாப்பிடுவதைவிட அதிகமாக ஊற்றிக் கொடுத்தான்.

அவள் குடிக்க மறுத்தாள்: பிறகு குடிப்பதுபோல் பாவனை செய்துகொண்டே அவனை அதிகம் குடிக்க வைத்தாள்.

குடி வெறியில் அவன் தாறுமாறாக நடக்கத் தொடங்கினான். அவளது மேலாடையையும் கிழித்து விட்டான்.

கெட்டிக்காரியான கற்பகம், பிறகு இணங்கியவள் போல காட்டிக்கொண்டாள்: ஆனால் 'முழுக்க நனைந்த பின் முக்காடு எதற்கு?' என்று அவள் எண்ணிவிடவில்லை.

அவளுக்கு உள்ளூர ஒரு ஆத்திரம் எழுந்தது. 'இந்த இரகசியம் தெரிந்ததை வைத்துக்கொண்டுதானே இவன் இவ்வளவு அவமானப்படுத்துகிறான்?' என்று எண்ணிக் கொண்டாள்.

"இதோ வேறு ரவிக்கை மாற்றிக் கொண்டு வருகிறேன்." என்று எழுந்து உள்ளே போனாள்.

திரும்பி வந்தபோது புது ரவிக்கை புதுச்சேலையோடு அலங்கார தேவதையாக வந்தாள்.

அவள் கையில் ஒரு தட்டு; அந்தத் தட்டிலே சில கேக்குகள்.

அவள் அவனிடம் கொஞ்சினாள்; கட்டிப் பிடித்தாள்; முத்தமிட்டாள். "இன்று நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும்" என்றாள்.

ஒரு கேக்கைத் தன் கையால் எடுத்து, வளையல்களை ஒதுக்கி விட்டுக் கொண்டு அவனுக்கு ஊட்டினாள்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ரயிலில் ஒரு ராகம்

**அது** 1960 ஆம் ஆண்டு-

அந்த ரயில் பயணம் நினைவை விட்டு சுலபமாய் அகலாது.

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது அந்த இரவு 'மெயில்' புகையிரதம்.

வருட இறுதித் தவணை விடுமுறைக்கு வீடு செல்லும் ஆசிரிய கூட்டத்தாலும், மற்றும் அரச ஊழியர்களாலும் ரயில் நிரம்பி இருந்தது. அந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியில் யன்னலோர 'சீற்' கிடைக்கா விட்டாலும் இரண்டாவதாய் உட்கார எனக்கு வசதி கிடைத்தது.

எதிர் வரிசையில் இருந்த ஐந்து பேரில் நடுவிலேயே அப் பெண்மணி இருந்தார். சாறியின் தலைப்பை இழுத்து கழுத்து மூடிப் போர்த்தியிருந்தார். அந்தப் பெண்மணிக்கு நேர் எதிரே, நான் இருந்த வரிசையில் ஒரு சிங்கள மாது, சுமார் 3 வயதான தனது மகனுடன் இருந்தார். அந்த மாதின் ஒரு புறத்தே நானும் மறு புறத்தே மற்றொரு தமிழ் நபரும் இருந்தோம். நான் மிக இளைஞன். அவர் என்னைவிட மூன்று வயதாவது கூடியவராய் இருக்கலாம்.

தெரியாக் கணியம் ஒன்றை 'எக்ஸ்' என்றே நான் குறித்துப் பழக்கப்பட்டிருந்த தால், முன்பின் அறிந்திராத அந்த நபரை 'எக்ஸ்' என்றே மனதில் குறித்துக் கொண்டேன்.

எதிரே இருந்த அந்தத் தமிழ்ப்பெண் மணியின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்ப்பதில் அவர் மிகுந்த பிரயத்தனப்படுவது எனக்குப் புரிந்தது!

அந்தச் சிறுவன் தாயின் மடியிலிருந்து வழுக்கி இறங்கி நின்று, விரைவாய் ஓடுகின்ற ரயிலின் ஆட்டத்துக்கு ஏற்ப கைகளை இறக்கை போல் மடித்துக்கொண்டு காவடி எடுத்தவன் போல் 'பலன்ஸ்' செய்து, தான் விழுந்து விடாமல் ஆடி ஆடி நின்று, அந்த ரயிலையே வென்றுவிட்டது போன்ற எக்காளத்தோடு எங்களுக்கு வித்தை காட்டிக் கொண்டிருந்தான். அவனது சமநிலை தளம்பும் சமயங்களில் தாயும் எதிரே இருந்த அந்தத் தமிழ்ப் பெண்ணும் அவனது விரல் ஒன்றைப் பிடிப்பதன் மூலம், அவன் தொடர்ச்சியாய் வெல்வதற்கு மாறி மாறி உதவினார்கள்.

அருகே இருந்த 'எக்ஸ்' நபர் தானும் உதவுவதுபோல் அந்தப் பெண்மணியின் விரல் ஸ்பரிசத்துக்காக சிறுவனின் அந்தக் கைவிரலை தானும் பிடிப்பதற்கு அடிக்கடி முனைந்தார். ஆனால், அப் பெண்ணின் விரல் ஸ்பரிசம் கிடைக்காமல் தோற்றுக் கொண்டேயிருந்தார்... இதை நான் அவதானிப்பது அவருக்கு ஒருவித சங்கடமாயிருந்ததால் அவர் முகத்தில் கொஞ்சமாய் எள்ளும் கொள்ளும் வெடிப்பது தெரிந்தது.

அந்தப் பெண், சிறுவனைப் புகழ்ந்து ஏதோ சிங்களத்தில் சொல்ல, தாய் உட்பட அனைவரும் சிரித்தனர். நானும் சேர்ந்து சிரித்தேன். எனது சிங்கள அறிவின்மையை மறைப்பதற்காக, எக்ஸும் பதிலுக்கு சிங்களத்தில் ஏதோ 'தமாஷ்' சொல்ல, மரியாதைக்காக மற்றவர்கள் சிரித்து வைக்க, நானும் பிந்தி விட்டாலும் சிரிப்பொன்றை உதிர்த்து வைத்தேன்.

“நீங்கள் நல்லாய்ச் சிங்களம் பேசுவீர்கள் போல!” எக்ஸ் அந்தப் பெண்ணைப் பார்த்துச் சொன்னார். பெண் தலையசைப்பில் ஆமோதித்தார்.

“நீங்கள் எப்படிச் சிங்களம் பேசப் பழகினீர்கள்..?” எக்ஸ் மீண்டும் கேட்டார்.

“அப்பா கலகெதர தமிழ் ஸ்கூலில் தலைமையாசிரியராய் இருந்தார். எனது எட்டாம் வகுப்புவரை நாங்களும் அங்கேதான் இருந்தோம்!” பெண் சொன்னார்.



“கலகெதற எங்கே இருக்கு..?” எக்ஸ் ஒரு நேர்காணல் போல் பேச்சைத் தொடர்ந்தார்.

“குருநாகலில் இருந்து கண்டி போகும் பாதையிலை!” என்று பெண் சொன்னார்.

நானும் ஆர்வமாய் இவர்களின் பேச்சையெல்லாம் உன்னிப்பாய்க் கேட்டேன். இது எக்ஸுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. 'உமக்கு இதில் என்ன அலுவல்?' என்பது போல ஒரு பார்வையை என்மீது வீசினார். அவரது பார்வையில் இருந்த உஷ்ணம், எனக்கும் ஒரு ரோசத்தை உண்டாக்கியது. நானும் அவருக்குப் போட்டி வேட்பாளன் போல் வெறுப்பேற்றத் தீர்மானித்துக்கொண்டேன்.

அந்தப்பெண்மணி 'இந்த விஷயத்தில்' எதுவும் விளங்காத விசுக்கோத்து' என்பது புரிந்ததால், அவருக்கு வெறுப்பேற்றுவது என்ற என் தீர்மானம் வெற்றி பெறும் என்றும் எனக்கு ஓரளவு நம்பிக்கை இருந்தது.

ஆசனம் கிடைக்காமல் நடைபாதையெங்கும் நிற்கும் பயணிகளுக்கிடையே புகுந்து நெளிந்து ஒரு வியாபாரி வந்தான். கையிலே ஏந்திய அகல மரத்தட்டில் ரொபி, சிகரெட் என்று பலதும் அடுக்கியிருந்தான். எக்ஸ், சிகரெட்டும், பெரியதும் சிறியதுமாய் இரண்டு 'கண்டொஸ்'ஸும் வாங்கினார். நானும் சின்ன ஒரு கண்டொஸ் வாங்கினேன். எக்ஸ், தான் வாங்கிய சிறிய கண்டொஸ்ஸை சிறுவனிடமும் பெரிய கண்டோஸ்ஸை அந்தப் பெண்ணிடமும் நீட்டினார். இருவருமே வேண்டாமென்று மறுத்தனர்.

அவர் மிக வற்புறுத்தவே சிறுவனின் தாய் அதை வாங்குமபடி சிறுவனுக்குச் சொல்ல, சிறுவன் வாங்கிக் கொண்டு “தாங்கியூ” என்று ஆங்கில மழலையில் நன்றி சொன்னான். அந்தப் பெண்ணோ வாங்கவேயில்லை. என் முன்னிலையில் அவர் தோற்க விரும்புவாரா? “பரவாயில்லை... எடுங்கள்...!” என்று மடியில் போட்டார். நான் வாங்கியதை நானும் அந்தப் பெண்ணிடம் நீட்டினேன். தலையசைத்து வாங்க மறுத்தார்.

நானும் எக்ஸ் செய்தது போலவே மடியில் போட்டேன். எக்ஸின் முகத்தில் மீண்டும் ஒரு முறை எள்ளும் கொள்ளும் வெடித்தன.

வேகமாய் இரண்டையும் எடுத்து அந்தப் பெண் சிறுவனின் கைகளுக்குள் திணித்து விட்டு, கைகளைக் கட்டிக்கொண்டு தூக்கம் வந்தது போல் தலையை நிமிர்த்தி ஆசன மேற்புறத்தில் சாய்த்து கண்களை மூடிக் கொண்டார்.

“நீங்கள் நேரத்தோடேயே படுத்துப் பழக்கம் போல...!” எக்ஸ் கேட்டது அந்தப் பெண்மணியிடந்தான். ஆனாலும், நான்,

“இப்ப நேரம் 12 ஆகுது..! நித்திரை நேரந்தானே...!” என்றதும் அவர் என்னைப் பார்த்தாரே ஒரு பார்வை- 'உம்மை யார் கேட்டது?' என்பதுபோல,

ரயில் கூவிவிட்டு வேகம் தணிய, எனக்கு அநுராதபுரம் வருவது புரிந்தது. சிறிது நேரத்தில் வெளியே இருந்த 'மேர்க்கியூரி' வெளிச்சம் உள்ளே புகுந்தது. மேலே கறகரக்கும் காற்றாடி இரைச்சலையும் மீறி, “வடே வடவடேய்!”, “தெமிலி..! தெமிலி தெமிலி!”, “பார்லி..! பார்லி பார்லி!” சத்தங்களும், ஏறுகிற இறங்குகிற சனங்களின் ஆரவாரமுமாய் எல்லாரையுமே விழிப்பாக்கி விட்டது. அந்தப் பெண்மணியும் விழித்து வெளியே பார்த்தார். எக்ஸின் பார்வை என் பக்கம் இருப்பதை உறுதி செய்து கொண்டு, நான் அந்தப் பெண்ணைப் பார்த்து,

**கா.அருளானந்தம், கீழ்க் கருணையூர்.**

“ஒரு இளனி..?” என்று கேட்டேன். வேண்டாம் என்று தலையசைப்பு வரு முன்பே, எக்ஸ்,

“இந்த நேரம் இளனி கூடவே கூடாது...! தடிமன்தான் வரும்..!” என்று வன்மையாக ஆட்சேபித்தார். பெண்ணின் மறுப்பும் எக்ஸின் ஆட்சேபிப்பும் சேர்ந்து வந்ததால் வேறுவழியின்றி பேசாது இருந்துவிட்டேன்.

அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட புகையிரதம் வேகமெடுத்து ஓடத் தொடங்கியது.

'தட்தட், தட்தட், தட்தட்'- ஆசன விளிம்புகளில் 'பஞ்சரால்' தட்டியபடி பயணச் சீட்டுப் பரிசோதகர்கள் தங்கள் வருகையை அறிவித்து வந்து கொண்டிருந்தார்கள். எல்லாரும் பயணச் சீட்டுக்களை எடுத்து வைத்துக்கொள்வதில் ஆர்வமானார்கள்.

நானும் பயணச் சீட்டை எடுக்கத் தேடித் துழாவத் தொடங்கினேன். பரிசோதகர் என்னை நோக்கி கை நீட்டியபடி காத்து நிற்க, நானும் எல்லாவற்றையும் கிளறிக் கிண்டிப் பதற்றமாய்த் தேட, அந்தப் பெண் என்னை நோக்கி,

**“நீங்கள் எப்பவுமே இப்பிடித்தான்! ஒண்டிலுமே கவனமில்லை! என்னட்டைத் தந்திருந்தால் கவனமாய் இருந்திருக்கும். நீங்கள் சூட்கேஸ் திறக்கவே இல்லை. வீட்டிலையே என்னட்டைத் தந்திட்டியள். பொக்கற்றுக்கைதான் இருக்கும். தேடிப் பாருங்கோ!”** என்று ஒரு புரானப் படிப்பு நிகழ்த்தியபோதுதான்... எக்ஸுக்கு அந்தப் பெண்ணின் 'முகவரி' முழுவதும் புரிந்தது.

திருதிருவென்று விழித்தார். அப்போது அவர் முகத்தில் வழிந்ததே ஒன்று! அதுதான்... அசடு!

என் கைக்குள் வைத்துக் கொண்டே, தேடுவதுபோல் தேடிய 'ரிக்கற்' இரண்டையும் பரிசோதகரிடம் கொடுத்தேன்.

அதன் பின்... எக்ஸ் இருந்தபடியே கண் மூடித் தூங்கத் தொடங்கியவர், கொடிகாமத்தில் நானும் மனைவியும் இறங்கும் போதுகூட கண் திறந்து பார்க்கவில்லை. ஆனால், அது நித்திரைபோல ஒரு பாசாங்கு என்பது எனக்கு நன்றாகவே தெரிந்தது.

# ஏன் வரவில்லை?

**ப**ள்ளிக்கூட மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அன்று பள்ளிக்கூட நாள். அதோடு பெற்றோர் தினமும் கூட.

பாட்டுப் போட்டி, ஓவியப் போட்டி, மாறுவேடப் போட்டி என்று பல போட்டிகள் நடக்கவிருந்தன. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுடன் வந்திருந்தனர். மேடையில் எப்படி போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்று குழந்தைகளுக்கு கடைசி நிமிட ஆலோசனை சொல்லிக் கொண்டிருந்தனர்.



நானும் என் குழந்தை கோபுவுடன் வந்திருந்தேன்.

சற்றுமுற்றும் பார்த்தேன். குழந்தை குமார் தனியாக உட்கார்ந்திருந்தான். அது ஆச்சரியமாக இருந்தது எனக்கு. இது போன்ற போட்டி தினங்களில் தன் குழந்தை குமார் கூட வர தவறமாட்டாள் அவன் அம்மா பவானி. குமார் கெட்டிக்கார குழந்தை. எல்லா போட்டிகளிலும் வென்று பரிசு பெறுகிற ஆற்றலுடையவன். அவன் பரிசு வாங்கும்போது கை தட்டி உற்சாகப்படுத்துவாள்.

“அம்மா வரலியா குமார்?” என்று கேட்டேன்.

“வரலே” என்று ஏக்கமாகச் சொன்னான் குமார்.

“வீட்டிலேருந்துதானே வரே குமார்?”

“இல்லை! பாட்டி வீட்டிலேருந்து வரேன். ரெண்டு நாளா பாட்டி வீட்டிலே தானிருக்கேன்!” என்றான் குமார்.

என்னவாயிற்று பவானிக்கு?

போட்டிகள் நடந்து பரிசுகள் அறிவிக்கப்பட்டபோது குமாருக்கே நிறைய பரிசுகள் கிடைத்திருந்தன. அதை பார்த்து மகிழ்ந்து பூரித்துப் போக வேண்டிய பவானி வராதது என் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

**அகலநந்தா**

ஒரு வாரம் கழித்து பவானியை பார்க்க நேர்ந்த பொழுது கேட்டுவிட்டேன்.

“எனக்கு அப்போது கண் நோய். போட்டியில் கலந்து கொள்ளவிருந்த குமார் என்னுடன் இருந்தால் கண்நோய் அவனுக்கும் வந்து அவன் போட்டியில் கலந்து கொண்டு பரிசுகள் பெற முடியாமல் போய் விடுமே என்றுதான் அவனை பாட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்!” என்றாள் பவானி.

அருமையான தாய்.

# வன்னி மண்

**மே**ற்குத் திசையில் மாலைக்கதிரவன் மங்கிக் கண் மறையும் மாலைப்பொழுது அந்த அகதிகள் குடியிருப்பின் ஓலைக் குடிசைகள் யாவிலும் நெய் விளக்குகள் மினுங்கத் தொடங்கின. ஆனால் அந்த வேலுவின் குடிசை மட்டும் இன்னமும் இருளிலே மூழ்கிக் கிடந்தது.

வடபகுதியின் யாழ் நகர் சுடுகாடாய் மாறிய சூரியக்கதிர் நடவடிக்கையின்போது தன் தாரத்தையும் மூத்த தனையனையும் ஒன்றாகப் பறிகொடுத்து பிணங்களையேனும் எடுத்து கிரிகைகள் முடிக்க முடியாது, இரவோடு இரவாக உயிரை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு, தன் எஞ்சிய பிஞ்சுகளைக் கரைசேர்க்கவென்று விதியின் பொதியை தலையில் சுமந்து நெஞ்சடைக்கும் துயரோடு, ஊரை இழந்து, உடனிருந்த உறவை இழந்து, ஏதுமிலா ஏதிலியாய் கிளாலிதாண்டி மந்திகளும், மான் மரைகளும் தொங்கி விளையாடும் வன்னியில் வனவாசம் பூண்டவர் வேலு.

வன்னியில் அது முழங்காவில் பிரதேசம் என்பதே அப்போதுதான் வேலுவுக்கு தெரியும். தேடுவாரற்றுக் கிடந்த அந்தக் காட்டோரத்தின் பற்றை, புற்றுகளை வெட்டி அதிலே ஐ.சீ.ஆர்.சீ நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட கூரை விரிப்பைக் கொண்டு விரலுக்கேற்ற வீக்கம் என்பதாய் தன் நிலமைக்கேற்ப ஒரு சிறு குடிசை அமைத்து தன் நான்கு செல்வங்களோடு கண்ணீரே கதையாக- வறுமையே வாழ்வாகி வாழ்ந்து கொண்டார் வேலு.



வேலு யாழ்ப்பாணத்தின் அந்தச் சிறு கிராமத்தில் சாதாரண தொழிலாளியாக இருந்த காலங்களில்கூட அவரது குடும்பத்தில் நிலவிய செழிப்பை இன்றும்கூட அவர் நெஞ்சம் மறக்கவே இல்லை. சேற்றிலே மலர்ந்த செந்தாமரைகளாய் வேலுவின் ஐந்து பிள்ளைகள்.

தாயாக இருந்த அவரது தாரம் கூடி மகிழ்ந்து சுற்றித்திரிந்த அவரது உறவுகள் அதிலும் வாழும் வயதில் கருகிப்போன அவரது மூத்த மகன் கண்ணன், தன் இல்லற வாழ்வை நல்லறமாய் தந்தளித்த அவரது மனைவி பார்வதி. இறுதிக் கிரிகைகள் தானும் செய்ய முடியாது காக்கைக்கும், கழுகுக்கும் இரையாகிக்கிடந்த அந்தப் பிணங்கள்- யாவுமே வேலுவின் நெஞ்சில் அழியாத கோலமாய்க் கிடந்தன.

தள்ளாடும் வயதிலும் தன் உடலை வருத்தி அந்தக் காட்டிலே வெட்டி எடுத்த விறகை அந்தப் பழைய நொண்டிச் சைக்கிளில் கட்டி, சுட்டெரிக்கும் அந்தக் கொடூர வெய்யிலிலும் கொண்டு சென்று விற்றுவிட்டு வந்தாலே வேலுவின் அடுப்பில் உலைப்பானை ஏறுவது வழக்கமாயிற்று.

அங்கே குடத்தோடு கிணற்றடியை அண்டிய வேலுவின் மகள் மாலாவைக் கண்ட கிணற்றுக்காரன் “இஞ்சே பிள்ளை! நீங்கள் நினைச்ச நேரமெல்லாம் இஞ்ச தண்ணி அள்ள ஏலாது. இஞ்சே பார் நாங்கள் இனிக் குளிக்கப்போறம் கெதியா ஓடுங்கோ பாப்பம். கொஞ்சம் இடம் குடுத்தா மிஞ்ச இடம் கேக்கினம் ம்... எண்டைக்கு யாழ்ப்பாணத்தில இருந்து இவை வந்தினமோ அண்டைல இருந்து கிணத்தடி நாறிப்போச்சு!”

அந்தக் கிணற்றடிக்காரனின் அதட்டலில் மாலாவின் மனம் பயந்து நடுங்கியது. மனிதாபிமானமற்ற அந்த மனித மிருகத்தை தனக்குள்ளே திட்டி தீர்த்தவளாய் பொறுமையோடு வீடு சேர்ந்தாள் மாலா.

சற்று நேரத்தின் பின் படுத்துக் கிடந்த தந்தையைத் தட்டி எழுப்ப தன் தோள் துண்டை உதறி முகத்தை ஒற்றிக் கொண்டு எழும்பினார் வேலு. மகள் கொடுத்த தேனீரை அந்த வெல்லக் கட்டியோடு கடித்துக்குடித்த போதே கிணற்றடிக்காரனின் கதையை சொல்லி விம்மினாள் மாலா. வேலுவின் மனம் குமுறியது.

“பிள்ளை! நீ அழாதையம்மா. மரமறியாதவனுக்கு இலை பிடுங்கி காட்டினம் இவை. சொந்தமா கிணத்தடி வைச்சிருந்த எங்களுக்கு இவை காட்டினம் கிணத்தடி. மனிசன மனிசன் பிடிச்சு விழுங்குதுகள். இண்டைக்கு நாங்கவெண்டால் இனி நாளைக்கு தாங்கள் எண்டுறதை மறந்திட்டினம்!” என்று வேலு விம்மி வெடித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒவ்வோர் இராணுவ நடவடிக்கையின்போதும் இடம் பெயர்ந்தவர்களை இளநீரும் உணவும் கொடுத்து பராமரித்த வேலுவுக்கு இன்று இந்தக் கதியை ஏற்கவே முடியவில்லை. தகப்பனின் வார்த்தைகள் மாலாவை தேற்றியது. பிள்ளைகளின் உதவியோடு விறகை தன் சைக்கிளில் அடுக்கிக் கட்டிக்கொண்டு கிளம்பினார் வேலு. கண்களில் பசியின் கோடுகள் நிழலாட,

“பிள்ளை மாலா! இந்த விறகை சந்தியில உள்ள அமுதா தேனீர்க்கடைக்காரன் கேட்டவன். நான் குடுத்துட்டு காசோட வாறன். நீ அடுப்பில உலைய வைச்சு சமையலுக்கு ஆயத்தப்படுத்து பிள்ள”

என்று கூறிவிட்டு விறகுச் சைக்கிளை மெல்ல நகர்த்திச் சென்ற வேலு, அந்த சந்தியை அடைந்ததும் மெதுவாக இறங்கி கனக்கும் விறகுச் சுமையை சைக்கிளோடு உருட்டிச் சென்றுகொண்டிருந்த அதே வேளை வானமே அதிரும்படியாக புகாரை கிழித்துக்கொண்டு உறுமியது அந்த 'கிபீர்' விமானம்.

அடுத்த கணமே சனக்கூட்டம் அங்குமிங்கும் தலை தெறிக்க ஓடத்தொடங்கின. வேலுவின் உள்ளம் பதறியது. சூரியக் கதிரை கைகளால் மறைத்தவாறு வானத்தை நிமிர்ந்து பார்த்த வேலு!

“ஐயோ! கடவுளே என்ர பிள்ளைகள் அங்கு என்னபாடோ? என்ர குஞ்சுகளுக்கு பசி ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம். கிபீர் காரன் இண்டைக்கு ஆரக்கொண்டு போகப்போறானோ?”

என்றவாறே சைக்கிளை வேகமாக நகர்த்த முயன்ற அக்கணமே அந்தக் கொடிய ஓசை காதைக் கிழித்தது. வீதிகளும், கடைகளும் ஒரே மண்படலங்கள். ஒருவரை ஒருவர் மறைத்துக்கொண்டாற்போல் புகை மண்டலமாய்க் காட்சிகொடுத்த அவ்விடத்தின் கட்டடங்களின் நடுவே சற்று முன்பெல்லாம் நடமாடிய மனிதர்கள் சிலர் பிணங்களாகிக்கிடந்தனர். எங்கும் அவலக் குரல் நெஞ்சை உலுக்கியது.

பதுங்கு குழியிலும் பாதுகாப்பான வேறு இடங்களிலும் புகுந்து கொண்டவர்கள் அங்கே காயங்களோடு முனகிக்கொண்டு கிடந்தவர்களை அவசரமாக அப்புறப்படுத்தியபோது அங்கே சிலர் உயிர் பிரிந்து பிணமாகிக் கிடந்தனர். தாயைத் தேடும் தனையன், தனையனைத் தேடும் தந்தை. கணவனைத் தேடும் மனைவியென்று ஒருவரை ஒருவர் தேடி அலறிக் கொண்டிருந்தனர்.

வேலுவின் வீட்டில் அடுப்பில் ஏற்றப்பட்ட உலைப்பானையைச் சுற்றி அவரது பிஞ்சுகள் குந்தியிருந்து பசியால் மயங்கி கண் அயர்ந்து போயினர்.

“சந்தியில கிபீர் அடிச்சு நாலு பேர் செத்திட்டினமாம்!” யாரோ இருவர் தெருவால் பேசிக்கொண்டது மாலாவின் காதை ஆணியாய் தைத்தது.

“ஐயோ அப்பாவும் சந்திக்குப் போனவர் காணேல்ல. கடவுளே! அப்பாவுக்கு ஒண்ணுமே நடக்கக்கூடாது”

என்றவாறு சந்தியை நோக்கி ஓடிய மாலாவின் பின்னே அந்த பிஞ்சுகள் மூன்றும் அவலக்குரலோடு ஓடின.

அந்த சந்தியை நெருங்கிய மாலாவின் கண்களில் சனக் கூட்டம் தெரிந்தது. தன் வேகத்தைக் கூட்டி ஓடினாள் மாலா. அந்த பாலை மரத்தோடு சாய்க்கப்பட்டிருந்த விறகுச் சைக்கிள் தனது தந்தையினுடையதே என்பதில் அவளுக்கு ஐயம் இல்லை. ஆனால் தந்தை எங்கே? இதயத் துடிப்பு வேகமாய் அடித்துக் கொண்டது.

**உரும்பையூர்-எஸ்.என்.தனேஷ்**

அந்தச் சனக் கூட்டத்தை விலக்கியபடி உள்ளே புகுந்தாள். அங்கே அப்பா இரத்த வெள்ளத்தில் முகமே தெரியாது உருக்குலைந்து கிடந்தார்.

செத்துக்கிடந்த அந்தப் பிணங்களின் நடுவே வேலுவின் செல்வங்கள் சாகாத பிணங்களாய் கதறின.


படிப்பகம்

www.padippakam.com

# ஓரினம் மேலினம்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்



"சுந்தர பாண்டியன்
தொல்லை
எல்லை மீறிவிட்டது!
சோழர்களை எதிர்த்து
போரிடுவதாகக்கூறி
சோரம்
போய்க்கொண்டிருக்கிறான்!
செந்தமிழ் பூமியின
எதிரிகளுக்கு
செங்கம்பளம் விரிக்கிறான்!
முட்டவரும் பகைக்கு
பட்டாடை போர்த்தி
குட்டக் குனியும் குணம்
காட்டி நிற்கிறான்!
சோழப் படைகளை
சூழ்ச்சிப் பொறிக்குள்
மாள வைக்க நினைக்கிறான்!"
சோழர் சபையில்
அமைச்சர்கள் குமுறினர்!
தளபதிகள் கொதித்தனர்!
கையமர்த்தினான்
சோழ மன்னன்
"இரத்தத்தின் இரத்தம்
அல்லவா பாண்டியன்?
மனதால் மாறுபட்டாலும்
இனத்தால் ஒன்றல்லவா?"
சோழன் வினா தொடுத்து
சபையோரை நோக்கினான்.
"இரத்தம் ஒரே நிறம்
சித்தம் வேறு ரகம்!
இனம் ஒரே இனம்
குணம் வேறு குணம்!
இனத்தால் வேறு பட்டாலும்
இணைந்திருக்கலாம்,
குணத்தால் மாறுபட்டாருடன்
கூடியிருக்கும் குடி கெடும்!"
அமைச்சரின் விளக்கத்தை
அவையினர் அங்கீகரித்தனர்!
எழுந்த கர கோசம்
அதனை உறுதி செய்தது!
"சமர்க்களத்தில் சந்திக்கலாம்
என்றழைத்தால்
சகோதர யுத்தம் வேண்டாம்
என்று கூறுகிறானே?"
சோழன் மீசைக்குள்ளிருந்து
அந்த வினா வெடித்தது.
"சமருக்கு அஞ்சித்தான்
சகோதரன் என்கிறான்!
சதிக்கு அஞ்சாது
எதிரிக்கு மதியுரைக்கிறான்!
பெற்றதாய் அழிய
பிறந்த மண் எரிய
எதிரிக்கு குற்றேவல் செய்பவன்
உற்ற சகோதரனாக
எப்படி இருக்க முடியும்?
சமருக்கு அஞ்சித்தான்
சகோதரன் என்கிறான்!
உயிரைக் காக்கத்தான்
உறவைக் கூறுகிறான்"
முத்தரையர் முத்தாய்ப்பாய்
முழங்கியதை
சபை விழுங்கி ஏற்றது!
சோழன் ஏற்கவில்லை
இன்னொரு வினாவால்
கோலம் போட்டான்.
"கண்ணுக்குள் விரல்
குத்துமானால்- அந்த
விரலையே
வெட்டி எறிவதா?"
"மாபாதகம்தான் செய்கிறான்
மன்னிப்பே இல்லையா?"
"விரலில் வீக்கம் என்றால்
மருந்து போடலாம்!
விரலே உயிருக்கு தாக்கம்
என்றால் என்ன செய்யலாம்?"
அமைச்சர் கேட்க
மருத்துவர் விடையளித்தார்:
"வேறு வழியில்லை;
வெட்டித்தான் அகற்றுவோம்!
அங்கம் பழுதானால் கூட
உயிருக்கு பங்கமாகுமானால்
அதை அகற்றுவதுதான்
மருத்துவ தர்மம்!"
"ஆம்! மன்னா
மருத்துவ தர்மம் மட்டுமல்ல
மனித தர்மமும் அதுதான்!"
அமைச்சர் ஆமோதித்தார்.
"எதற்கும் இறுதியாக
ஓலை அனுப்பலாம்!
அதற்கும் இணங்காவிட்டால்
வாலை நறுக்கலாம்!"
என்றான் மன்னன்.
"பாசமுள்ள பாண்டியா!
வரம்பு தாண்டியது போதும்
திரும்பிவா!
வாசமுள்ள நம் மண்
நேசத்தோடு அழைக்கிறது
நீயும் வா!
விரிசல் நமக்குள்
இருப்பது மெய்தான்!
அதற்காக நண்பா,
எதிரிக்கு பரிசாக
தாயகத்தை தருவதா?
பாண்டியனும் சோழனும்
பகைவராய் இருப்பதால்
நம் பூமி நலியாது!
நம்மில் ஒருவர் எதிரிக்கு
துணையாய் மாறினால்
நாடே தொலையும்!
நம்மினமே அழியும்!
பகையைக் காட்டி
பழியை செய்யாதே
பகைவரை அணைத்து
வழியைக் காட்டாதே!
விழிகளை விற்று
சித்திரம் தேவையா?
பழிகளை சுமந்து
வாழ்வது வாழ்க்கையா?
பாண்டியா போதும்
வரம்பு தாண்டாதே!
திரும்பி வா என
விரும்பி அழைக்கிறேன்!"
சோழனின் ஓலையை
கண்ட பாண்டியனுக்கு
போதையில் புத்தி ஏறவில்லை!
அருகில் இருந்த கட்டழகியை
எட்டி இழுத்து இதழில்
முத்தத்தை கொட்டினான்.
இந்த இதழ் சுவையைவிட
சோழன் அழியும் நாள்தான்
எந்தனுக்கு சுவையானது!
சோழனை ஒழிப்பேன்
நான் முடி தரிப்பேன்!
வந்திருக்கும் நண்பர்கள்
அந்நியரல்ல, நல்லவர்கள்!
பாண்டியன் பிதற்றினான்.
"சோழன் ஒழிந்தால்
நீங்கள்தான் மன்னன்!"
"ஓலையைக் கிழியுங்கள்
கோழையா நீங்கள்? வீரக்
காளையன்றோ நீங்கள்!"
பகைவர் அனுப்பிய பைங்கிளி
பாண்டியனின் தொடைவருடி
தூண்டி விட்டாள்.
மூண்டது யுத்தம்
மாண்டன பாண்டியன்
படைகள்!
சோழனின் வாள்
செங்களத்தில்
உயர்ந்தது!
பாண்டியன்
மன்றாடினான்:
"நான் உன் சோதரன்
நாம் எல்லாம் சோதரர்
என் உயிர்
அழிக்கலாமா?
சோதரக் கொலையர்
என்று
சோழர் பெயர்
நிலைக்கலாமா?"
சோழன் ஒரு கணம்
நிதானித்து
பின் நகைத்தான்:
"சொந்தமும் சோதரமும்
சொற்களால்
வருவதில்லை!
பந்தமும் பாசமும்
பல்லிளிப்பில்
மலர்வதில்லை!
உள்ளம் ஒன்றானவரே
ஓரினத்தார்!
மானம் உள்ளவரே
மேலினத்தார்!
நேர்மையும் மானமும்
உதறியவர் சிற்றினத்தார்!
நற் குணத்தோடு இருப்பது
நல் இனம்!
சுய நலத்தாலே வாழ்வது
தீய இனம்!
நம் இனம் போன்ற
துணையும் இல்லை!
தீய இனம் போன்ற
பகையும் இல்லை!
அந்நியரைவிட
அஞ்சத்தக்க பகை நீ!
அதனால் உனக்கு
தண்டனை மரணமே!
தீய பகையே
தீர்ந்து போ!
சோழன்வாள்
உயர்ந்து இறங்கியது!

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூ உம் இல்"

அதிகாரம்: 46. குறள்: 460

# சிந்தியா பதில்கள்

→ அரசுடன் ஒத்துழைத்தமையால்தான் மலையக மக்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக்கொடுக்க முடிந்தது என்கிறாரே தொண்டா?

கே. ஆதிமூலம், கண்டி.

மலையக மக்களது வாக்குகளைப் பெறுவதற்காக ஐ.தே.க. அரசு தானாக முன்வந்து கொடுத்ததை, தான் பெற்றுக் கொடுத்ததாக இத்தோடு ஆயிரத்து நூறு தடவை கூறிவிட்டார் தொண்டா! இன்றைய அரசில் நான் காண்டுகள் ஒட்டியிருந்து இவர் பெற்றுக் கொடுத்தது என்ன? கொடுத்த வீட்டு மனைகளும் மோசடியானதுதானே கண்டபலன்! இரத்தினபுரியில் மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டபோதும் தகுந்த நடவடிக்கை எடுக்க முடிந்ததா? இல்லையா?

✿✿

→ சிந்தியா! வீரவிதான அமைப்பின் பின்னால் ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ இல்லை என்கிறாரே சந்திரசேகரன்?

பெ. தங்கவேல், நுவரெலியா.

குருவை மிஞ்சிய சீடராகிவிட்டார்! ஆளும் கட்சி அமைச்சர் பின்னால் நிற்பதும் மெய்! கொழும்பு விகாரமாதேவி ஆர்ப்பாட்டத்தில் எதிரணித் தொண்டர்கள் தலை காட்டியதும் மெய்! சந்திரசேகரன் எங்கே இருக்கிறார்?! இப்படித்தான் முன்னர் வந்தேறு குடிகள் பேச்சுக்கும் வக்காலத்து வாங்கினார்கள். அம்மையார் இதுவரை அதற்கு திருத்தம்கூடத் தெரிவிக்கவில்லை! எதிர்ப்புக் காட்ட முடியாது போனாலும், இப்படி எரிச்சல்படுத்தாமலாவது இருக்கலாமல்லவா?

✿✿

→ சிந்தியா! கடி கொஞ்சம் கிடைக்குமா?

எஸ். இந்திரா, கொழும்பு-09.

"எந்த எழுத்தில் பொருட்களை போடலாம்?"
"பை!"
-★-
"எந்த எழுத்து பறக்கும்?"
"ஈ"
-★-
"எந்த எழுத்து வாயைப் பிளக்க வைக்கும்?"
"ஆ!"

✿✿

→ கொழும்புத் தமிழர்கள் சுயநலவாதிகள் என்றார் தொண்டா! இப்போது அவசர காலச் சட்டத்தை எதிர்க்கக் கூறுபவர்களை முட்டாள்தனமாக செயற்படக் கூடாது என்கிறார்? இவர் மட்டும் புத்திசாலியா?

ஜே. ரவீந்திரன், கொழும்பு.

புத்திசாலிதான்! இத்தனை காலமாக மலையக மக்கள் முதுகில் சவாரி செய்ய முடிகிறதல்லவா! தற்போது விழிப்பு வரும் போது அவருக்கு வெறுப்பாகத்தான் இருக்கும்!

✿✿

→ ஸிம்பாப்வே அணியை சுளுக்கு எடுத்து விட்டதே பாகிஸ்தான்?

கா. தேவராஜ், கொழும்பு-11.

செம சுளுக்கு! ஆனாலும் பாகிஸ்தான் அணியில் சயீட் அன்வர், இயாஸ் அஹமட், இன்சமாம் மூவரும் சரியாக ஆடத்தவறினால் சறுக்கலுக்கு இடமுண்டு! அன்வராவது சதம் போட்டுவிட்டார். இயாஸ் அஹமட் இன்னமும் சோபிக்கவில்லை. கடனே என்று ஆடுகிறார்.

✿✿

★ 'கத்தியைத் தீட்டாதே புத்தியை தீட்டு' ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?

எ.ஃப். நவ்ஃகான், கம்பளை.

முடியாது! இந்தக் காலத்தில் கத்தியையும் தீட்ட வேண்டும். புத்தியையும் தீட்ட வேண்டும்! புத்தியோடு கத்தியைப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டுபேர் காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்தனர். ஒருவன் தொடர்ந்து மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். இன்னொருவன் அவ்வப்போது ஓய்வெடுத்தபடி வெட்டிக் கொண்டிருந்தான்.

கடைசியாக கணக்கெடுத்து பார்த்தபோது தொடர்ந்து வெட்டிக் கொண்டு இருந்தவனைவிட இளைப்பாறி வெட்டியவனே அதிக மரங்களை வெட்டியிருந்தான்.

"இது எப்படி சாத்தியம்?" என்று கேட்டான் தொடர்ந்து வெட்டியவன்.

அதற்கு அவன் சொன்னான்: "நான் இளைப்பாறும் நேரத்தில் வாளைத் தீட்டிக் கொண்டிருந்தேன். அதனால் வேகமாகவும் அதிகமாகவும் வெட்ட முடிந்தது!"

✿✿

→ பிரபு தேவாவின் ஆட்டத்தை அவரது சகோதரர் ராஜுசுந்தரத்தால் ஓரம் கட்ட முடியுமா?

எம். சர்வேசன், நீர்கொழும்பு.

அண்ணன் அண்ணன்தான்! அண்ணன் இல்லாத இடத்தில் தம்பி குதிக்கிறார்.

✿✿

→ கரும்புலிகளும் ரிமோட் கொன்ரோல் முறையில் எட்டத்தில் நின்று தான் வெடிக்க வைப்பார்களா?

எஸ். சாந்தி, மட்டுநகர்.

என்ன திடீரென்று சந்தேகம்? கரும்புலிகள் என்ன சாகப் பயந்தவர்களா-எட்டத்தில் நின்று வேறு யாராவது வெடிக்க வைப்பதற்கு? தகுந்த நேரம் அறிந்து தாமாகவே குண்டை இயக்குவர். தவிர இதுவரை வாகனக்குண்டுத் தாக்குதல்களுக்கு கூட ரிமோட் கொன்ரோல் முறையை புலிகள் பயன்படுத்தியதில்லை.

அவ்வாறு பாவிக்க முடிந்திருந்தால் குறித்தநேரக் குண்டுகள் பொருத்தும் அவசியமில்லை. வெடிக்க முன்பு அவை மாட்டுப் படவும் நேராது. குண்டை பொருத்திவிட்டு சற்று தள்ளி நின்று அமுக்கிவிட்டு போய்விடுவார்கள். ரிமோட் கொன்ரோல் குண்டுத் தாக்குதல் முறை இன்னமும் இங்கு அறிமுகமாகவில்லை.

✿✿

→ விஜய்யின் 'என்றென்றும் காதல்' வெற்றிப் படமா?

பி. தங்கமலர், கொழும்பு-06.

சென்னையில் 50 நாட்களுக்குள் பல திரையரங்குகளில் இருந்து தூக்கப்பட்டு விட்டது. சில அரங்குகளில் பகல் காட்சி மட்டும்தான்! ஆனால் 'துள்ளாத மனமும் துள்ளும்' பல அரங்குகளில் மூன்று காட்சிகளாக நூறாவது நாளை எட்டிக்கொண்டிருக்கிறது! 'என்றென்றும் காதல்' சறுக்கலை 'நெஞ்சினிலே', 'மின்சாரக் கண்ணா' இரண்டும் நேர்படுத்தும்!

✿✿



'நெஞ்சினிலே' படத்தில் விஜய்-இஷா

→ உலகக் கிண்ணப் போட்டியில் டெண்டுல்கர் சோபிக்கவில்லையே? இந்திய அணியின் உ.கி.போ. ஹீரோ யார்?

வி. பிரகாஷ், மட்டக்களப்பு.

ராகுல் திராவிட்!



'எனக்கு நீ உயிரம்மா' படத்தில் பிரபுதேவா-ரம்யா கிருஷ்ணன்

✿✿

→ தமிழ்க் கட்சிகள் இப்போது எந்தளவுக்கு முன்னேறியுள்ளன?

வி. சதாசிவம், யாழ்ப்பாணம்.

தமிழ் மக்களின் தொடைகளில் கயிறு திரிக்கும் தொழிலில்! தலை நிமிர்ந்து போராட முனைபவர்களை விவேகம், பக்குவம் என்று தடைக்கற்கள் எறிந்து தொடை நடுங்கிகளாக்கும் கலையில்!

✿✿

→ மனிதர், மிருகங்கள் என்ன பெரிய வித்தியாசம்?

இ.மோகன், மன்னார்.

மிருகங்கள் வாக்குறுதிகள் வழங்கி ஏமாற்றுவதில்லை!

✿✿

→ செம்மணி புதைகுழி தோண்டல் பற்றிய அதிக விளம்பரங்கள் நல்லதாக தெரியவில்லையே?

ஆ. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.

இத்தனை காலம் பொறுத்திருந்துவிட்டு இப்போது யார் தடுத்தாலும் தோண்டுவோம் என்று வரிந்து கட்டி நிற்பது ஒன்றே சந்தேகங்களை பொழிந்து தள்ளுகிறது என்பது உண்மைதான்! பொறுத்திருந்து பாருங்கள்!

✿✿

→ சுறுசுறுப்பான கதை ஒன்று கூறுங்கள் சிந்தியா?

வி. ரமணன், மாத்தளை.

ஜோனி என்னும் பையனுக்கு 18 வயது. வீட்டுக்கு கட்டுப்படாது அலைந்தான். ஒழுங்காகப் படிப்பதில்லை.

பதினெட்டு வயதாகிவிட்டது. பையன் உருப்படாமல் போய்விடுவானோ என்று தாய்க்கு கவலை. அவனை அழைத்துக்கொண்டு மனோதத்துவ டாக்டரிடம் சென்றார்.

"இவனை முன்னேற்றுவது எப்படி? இவனுக்கு ஏற்ற தொழில் எது?" என்று ஆராய்ந்து கூறுமாறு கேட்டார்.

டாக்டர் சோதனை ஒன்றை நடத்த எண்ணினார். தன்னுடைய நர்ஸை அழைத்து சில பொருட்களை கொண்டுவரச் சொன்னார்.

அவர் கூறியபடி சுத்தியல், குறடு, திருப்புளி என்பவை கொண்டுவரப்பட்டன. மேசையில் அனைத்தும் வைக்கப்பட்டன.

டாக்டர் பையனின் தாயிடம்: "அம்மா! உங்கள் பையனை ஏதாவது ஒன்றை எடுக்கச் சொல்லுங்கள். சுத்தியலை எடுத்தால் மர வேலை செய்யும் தொழிலாளியாவான. குறடை எடுத்தால் மெக்கானிக் ஆவான, திருப்புளி எடுத்தால் மின்சாரத் தொழிலாளி ஆவான்" என்றார், பையனை அழைத்தவர்.

"உனக்கு பிரியமானதை எடுத்துக் கொள்!" என்று கூறினார்.

பையன் சிறிது நேரம் யோசித்தான். பின்னர் அருகிலிருந்த நர்ஸை அழைத்துக் கொண்டு வெளியேறினான்!

# ஸ்போர்ட்ஸ்

## வாத்து நடை வீரர்கள்



கிரிக்கெட்டில் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழப்பதை 'டக்-அவுட்' என்று சொல்வார்கள். இந்த உலகக்கோப்பைப் போட்டியில் ஜூன் 11 வரை நடந்த போட்டிகளில் 48 'டக்-அவுட்'கள் பதிவாகியுள்ளன.

'டக்-அவுட்'ல் ஸிம்பாப்வே அணிதான் முன்னணியில் நிற்கிறது. இந்த அணியின் வீரர்கள் 7 முறை 'டக்-அவுட்' ஆகியுள்ளனர். அன்டி ஃப்ளவர், ஹக்கிள் ஆகிய இருவரும் 2 தடவைகள் 'டக்-அவுட்'ஆகியுள்ளனர்.

ஸிம்பாப்வேக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகளில் தலா 6 பேர் 'டக்-அவுட்' ஆகியுள்ளனர். பாகிஸ்தானின் இஜாஸ் அஹமட் 2 முறை 'டக்-அவுட்' ஆகியுள்ளார்.

இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொண்ட அணிகளில் 'டக்-அவுட்' ஆகாத வீரர்களே இல்லை. அணிகளும், 'டக்-அவுட்' ஆன வீரர்கள் பற்றிய விபரங்களும் வருமாறு:

**ஸிம்பாப்வே (07):**

அன்டி ஃப்ளவர் (2), அடம் ஹக்கிள் (2), முபாங்வா, கய் விட்டல், போல் ஸ்ட்ராங்.

**பாகிஸ்தான் (06):**

இஜாஸ் அஹமட் (2), இன்ஸமாம்-உல்-ஹக், சக்லைன் முஷ்டாக், வாஸிம் அக்ரம், அப்துல் ரசாக்

**நியூஸிலாந்து (06):**

நாதன் அஸ்லே, கிறிஸ் கெய்ன்ஸ், அடம் பரோரே, மத்தியூ ஹார்ட், ஃபிளெமிங், ரொஜர் டுவோஸ்.

**இந்தியா (05):**

டெண்டுல்கர், மொங்கியா, ஸ்ரீநாத், பிரசாத், ரொபின் சிங்.

**இங்கிலாந்து (05):**

கிரஹாம் ஹிக், மார்க் ஈலாம், அலன் முலாலி, அலெக் ஸ்ரூவர்ட், ஃபிளின் டோஃப்.

**தென்னாபிரிக்கா (05):**

ஜோன்டி ரோட்ஸ், கிப்ஸ், ஜக்ஸ் கலிஸ், ஷோன் பொலொக், டரில் கலினன்.

**ஸ்கொட்லாந்து (04):**

பிரிங்லி, பிளெய்ன், டேவிஸ், டையர்.

**கென்யா (03):**

ஒட்டினோ, சுஜி, குப்தா.

**பங்களாதேஷ் (03):**

அக்ரம் கான், ஷாரியர் ஹுஸைன், முகமட் ரஃபீக்.

**இலங்கை (02):**

அரவிந்த டி சில்வா, திலகரட்ண.

**அவுஸ்திரேலியா:**

அடம் கில்கிறைஸ்ட்.

**மே.இ.தீவுகள்:**

வில்லியம்ஸ்.

## சதி காரணமாம்


இந்த உலகக்கோப்பை லீக் போட்டியில் இந்தியா ஸிம்பாப்வேயிடம் 3 ஓட்டங்களால் தோற்றது. இந்திய அணியின் தோல்விக்கு திட்டமிட்ட சதியே காரணம் என்று இந்தியாவின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது:

"ஸிம்பாப்வே அணியுடன் 2 ஓவர்கள் இருக்கும்போது 4 ஓட்டங்களே தேவைப்பட்டன. 3 விக்கெட்டுக்கள் கைவசம் இருந்தன. ஆனால் மைதானத்திற்கு வெளியே இருந்து வந்த செய்தியால் ஆட்டத்தைத் தோல்வியில் முடித்துக்கொண்டனர்.

இந்த விவரம் எனக்கு இப்போதுதான் தெரியவந்தது. இந்தச் சதித்திட்டம் குறித்து, இந்திய கிரிக்கெட் சுட்டுப்பாட்டுச்சபை, உரிய முறையில் விசாரணை நடத்த வேண்டும். அப்போதுதான் முழு உண்மையும் தெரிய வரும்!" என்று தெரிவித்துள்ளார்.

## அவர்தான் இவர்



ஏ.ஆர்.ரகுமான்





படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 05

ஆண்டவரின் திருக்குமாரரான இயேசுபிரான், நினைத்த மாத்திரத்திலேயே ரோம அதிகாரியின் பணியாளராகவிருந்த யூதா இனத்தவரின் பிணி நீங்கியது. இதனால் ரோம அதிகாரியும் அவருடைய பணியாளர்கள் பலரும் அவர் தம் குடும்பத்தினரும் இயேசுபிரானிடம் வந்து பணிந்து ஆசிபெற்றனர்.

இயேசுபிரான் தன்னைத் தொடர்ந்து வந்த மக்களுக்குச் சேவை செய்வதற்காக பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் என்பதை அறிந்தோம். அவரால் முதன் முதலில் சீடர்களாக சீமோனும் அந்திரேயாவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதையும் கண்டோம்.

இவ்விரு மீனவர்களும் ஏனைய பல மீனவர்களுடன் தங்கள் படகுகளிலிருந்த வண்ணம் வலை வீசி மீன்பிடிப்பதற்காக முயற்சித்தும் அவர்களுடைய வலைகள் எதிலும் மீன்கள் பிடிபடவில்லை. இதனால் அவர்கள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களுடைய நிலையினை கரையில் நின்று அவதானித்த இயேசுபிரான் சீமோனுடைய படகைக் கரைக்குக் கொண்டுவருமாறு அழைத்தார். படகில் ஏறியதும் அதனை ஏனைய படகுகளுக்கு நடுவே கொண்டு செல்லுமாறு கேட்டார். சீமோனும் அவ்வாறே செய்தார்.

கரையில் இயேசுபிரானின் நல்லுரைகளைக் கேட்பதற்காக ஏராளமான மக்கள் கூடி நின்றனர். அவர்களை நோக்கி, படகில் நின்ற வண்ணமே உபதேசித்தார். போதனை முடிந்ததும் சீமோனிடமும் ஏனைய மீனவர்களிடமும் தோணியை சற்று ஆழமான பகுதிக்குக் கொண்டு செல்லுமாறு இயேசுபிரான் கேட்டுக் கொண்டார். அங்கிருந்த வண்ணமே மீனவர்களைப் பார்த்து, "வலையை வீசுங்கள்!" என்று பலமாகக் கூறினார்.

மீனவர்கள், "இரவு முழுவதும் கண் விழித்திருந்து பல தடவைகள் வலைகளை வீசியும் ஒரு மீன் தானும் அகப்படவில்லையே! இருப்பினும் நல்லுபதேசம் செய்யும் தங்களுடைய கோரிக்கைக்கேற்ப மீண்டும் வலை வீசுகிறோம்!" என்றார்கள்.



### வலையில் அகப்பட்ட மீன்கள்

கூறியபடியே வலையை வீசினார்கள். வீசிய வலைகளை நீரிலிருந்து இழுத்தெடுக்க அவர்களால் முடியாமற் போய்விட்டது. வலைகள் கிழிந்து போகும் அளவு மிக அதிகமான மீன்கள் சிக்கியிருந்தன. மீனவர்கள் அத்தனை காலமும் கண்டிராத அளவு மீன் பிடிபட்டிருந்தது. தங்கள் படகுகளை மீன்களால் நிரப்பியும் மேலும் ஏராளமான மீன்கள் வலைகளில் சிக்கிப் போயிருந்தன.

மீனவர்கள் இயேசுபிரானின் அற்புதத்தைக் கண்டு அவரை வணங்கினார்கள். அப்போது தான் சீமோனைப் பார்த்து இயேசுபிரான், "சீமோனே! இன்று முதல் நீ மனிதர்களைப் பிடிப்பவனாவாய்!" என்று கூறி தனது முதல் சீடனாக சீமோனையும் அடுத்து அந்திரேயாவையும் அப்போஸ்தலர்களாக இயேசு பிரான் ஏற்றுக்கொண்டார்.

இயேசு பெருமானுடைய போதனைகள் பற்றி சுற்று வட்டாரத்திலுள்ள நாடு நகரங்களெங்கும் செய்திகள் பரவலாயின. தீராத நோயினால் துன்பப்படுபவர்களெல்லாம் தேவ குமாரனின் நிழல் தம்மீது பட்டாலே பூரண குணம் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் அவர் போகுமிடமெல்லாம் போக ஆரம்பித்தனர்.

ஒருநாள் ஒருரில் இயேசு பிரான் தனது சீடர்களுடன் சென்று கொண்டிருந்த போது, அங்கங்களெல்லாம் அழுகிய நிலையில் தொழுநோயினால் நலிந்து கிடந்த ஓர் உருவம் இயேசுபிரான் முன்பாக வந்து விழுந்தது. "பெருமானே! தீராத இத்தொழுநோயினால் தாங்கவொண்ணாத் துயரடைந்து தவிக்கும் எனக்கு இந்நோய் நீங்க அருள்புரிய வேண்டுகிறேன். என் நோயை இல்லாமலாக்கும் சக்தி தங்களிடமே இருக்கிறது என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகவே எனக்குப் பூரண சுகமளிக்கும்படி புனிதராகிய தங்கள் தாள் பணிந்து வேண்டுகிறேன்!" என்று அம் மனிதர் கேட்டார்.

அத்தொழுநோயாளியை நெருங்கிய இயேசுபெருமான், தனது வலது கையை நீட்டி அவரைத் தொட்டு, தலையைத் தடவினார்.

"நீர் உம் நோயிலிருந்து முற்றாக விடுபட்டு இப்போது முதல் சுகதேகியாகிறீர். உமது நம்பிக்கை வீண் போகவில்லை!" என்று இயேசு கூறியதும், அழுகிச் சீழ் வடிந்து துர்நாற்றம் வீசிய வண்ணம் காணப்பட்ட அந்நோயாளியின் புண்கள் அனைத்தும் மறைந்தன. சில நொடிகளில் அவர் பூரண குணமடைந்து, நோய்வாய்ப் பட்டவர் என்று எவருமே கூறமுடியாத நிலையினைப் பெற்றார். சாஷ்டாங்கமாக இயேசுவை வீழ்ந்து வணங்கினார்.

இயேசு, அவரைப்பார்த்து, "நீர் ஆலயக் குருவிடம் சென்று, நோய் நீங்கப்பெற்றமைக்காக மோசேயின் கட்டளைகளில் எவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளதோ, அதனை முறைப்படி நிறைவேற்றும்!" என்று கூறி அனுப்பிவைத்தார்.

### பெருகும் மக்கள் கூட்டம்

தொழு நோயாளி பூரண குணமடைந்து விட்டார் என்ற தகவல் காட்டுத் தீபோல்

## இறை மகனார் இயற்றிய புதுமைகள்

எங்கும் பரவலாயிற்று. இதனால, இயேசு பிரானிடம் சென்று தத்தமது பிணிகளுக்கு விடிவு தேடுவோர் கூட்டம் மேலும் அதிகரித்தது.

இயேசு பிரானுடைய போத

**இராஜகுமாரன்**

னைகளில் எப்போதும் குறைகண்டு பிடிக்கும் யூதா மதத்தின் ஒரு பிரிவினர், இயேசுபிரான் செல்லும் இடங்களுக்கெல்லாம் செல்வார்கள். யூத மதம், மதச் சட்டங்களுக்கு மட்டுமே இடம் கொடுக்குமே அன்றி, அதற்கப்பாற்பட்ட எதனையும் ஏற்க முடியாதென வாதிட்டு வந்தனர். இவர்கள் பரிசேயர் என்றழைக்கப் பட்டனர். இயேசுபிரான் சென்ற இடமெல்லாம் யூதாமக்கள் பெருவாரியாகக் கூடுவதையும் அவருடைய போதனைகளுக்குச் செவிமடுப்பதையும் பார்க்கும்போதெல்லாம், இவர்கள் பொறாமைப்பட்டனர்.

இயேசுபிரான் ஒரு தடவை தம்முன்னால் குழுமியிருந்த பெருங்கூட்டத்தின் மத்தியிலிருந்த வண்ணம் நற்போதனைகளைக் கூறிக் கொண்டிருந்தார். கலிலேய, எருசலேம் ஆகிய பகுதிகளிலிருந்தும் சுற்று வட்டாரங்களிலிருந்தும் அறிஞர்களும் திருச்சட்ட ஆசிரியர்களும் பரிசேயரும் அக் கூட்டத்துள் காணப்பட்டனர். அப்போது முடக்கு வாதத்தால் பீடிக்கப்பட்டு நடக்க முடியாதிருந்த ஒருவரை கட்டிலுடன் தூக்கிக் கொண்டு வந்தனர். ஆனால் இயேசு பிரானின் திருவாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளில் தங்களின் முழுக் கவனத்தையும் செலுத்திய வண்ணம் அங்கு திரண்டிருந்த மக்களை விலக்கிக்கொண்டு அந்த முடக்கு வாதக்காரரை இயேசுபிரானிடம் கொண்டு வர முடியவில்லை.

அந்த நோயாளியைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள், அவரைக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு போய், இயேசுபிரான் நின்று போதித்துக் கொண்டிருந்த வீட்டின் கூரைமீதேறி முகட்டைப் பிரித்துக்கொண்டு, கயிற்றின் உதவியுடன் கட்டிலைக் கீழே இறக்கினார்கள்.

அக்கட்டில் இயேசு நின்றிருந்த இடத்தின் முன்புறமாக வந்து இறங்கியது. இதனைக் கண்டதும் இயேசு பெருமான் நிலைமையை உணர்ந்து கொண்டார். கட்டிலில் கிடந்த முடக்குவாதக்காரர் தனது இருகைகளையும் கூப்பியவண்ணம் நடுங்கிக் கொண்டிருந்தார். அவரை நோக்கிய இயேசுபிரான், "உமது பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன!" என்றார்.

### சந்தேக நிவர்த்தி

இயேசுபிரான் அவ்வாறு கூறிய வார்த்தைகள், பரிசேயர் மற்றும் திருச்சட்ட ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பிடிக்கவில்லை.

"பாவங்களை மன்னிக்கும் ஆற்றல் எந்த மனிதனிடமும் கிடையாது. ஆண்டவர் ஒருவரே பாவமன்னிப்பு அருளும் வல்லமை பெற்றவர். அவ்வாறிருக்க பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்று கூறும் இந்த மனிதர் யார்?" என்று பொங்கி எழுந்தனர்.

அவர்களுடைய முணு முணுப்பு இயேசு பிரானுக்குப் புரிந்து விட்டது. அவர்களை நோக்கி, "உமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன' என்று கூறுவதா? அல்லது 'எழுந்து நட' என்று கூறுவதா? இவற்றில் எது எளிதானது? பாவங்களை மன்னிக்கும் வல்லமை மனிதனிடம் இருக்கவே செய்கிறது என்ற உண்மையை நீங்கள் நிச்சயம் அறிந்த கொள்ள வேண்டும்!" என்றார்.

இவ்வாறு கூறிய இயேசுபிரான், கட்டிலில் கிடந்த முடக்குவாத நோயாளியை நோக்கி, "நான் உமக்குச் சொல்கிறேன்! நீர் கட்டிலை விட்டு எழுந்து, கட்டிலையும் தூக்கிக் கொண்டு உமது வீட்டுக்குச் செல்!" என்று கூறினார். அம் மனிதன் எதுவித தயக்கமும் இல்லாமல் எழுந்து, கட்டிலையும் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு மிக வேகமாக, திரண்டிருந்த மக்கள் கூட்டத்தையும் விலக்கிக் கொண்டு வெளியே ஓடினார்.

இவ்வரிய காட்சி அங்கிருந்த மக்களனைவரையும் ஆச்சரியக்கடலில் ஆழ்த்தியது. இத் தெய்வீகப் புதுமை, இயேசு பெருமான் மீது ஐயங் கொண்டிருந்தவர்களையும் மனம் மாற்றியது. அவர்களும் இயேசுபெருமான் உண்மையில் தேவ அனுக்கிரகம் பெற்றவர்தான் என்று நம்பியவர்களாக அங்கிருந்து அகன்றனர்.

மற்றுமொரு முறை வரி வசூலிப்பவர் ஒருவரை அணுகிய இயேசு, அவரைப் பார்த்து "நீர் என்னைப்பின் பற்றி வா!" என்றார். அவரும் தனது பணியை அப்படியே விட்டு விட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தார். அவருடைய வீட்டில் அன்றிரவு உணவருந்துமாறு இயேசுவையும் அவருடைய சீடர்களையும் அழைத்தார்.

அன்றைய விருந்தில் பலதரப்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தனர். பரிசேயருக்கும் திருச்சட்ட ஆசிரியர்களுக்கும்-இவ்வாறு சகல மக்களுடனும் இயேசுவும் சீடர்களும் ஒன்றாக அமர்ந்திருந்து உணவருந்தியது பிடிக்கவில்லை. இயேசுவின் சீடர்களிடம் அவர்கள், "இவ்வாறான பாவிகளுடன் நீங்கள் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவது முறையா?" என்று வினாவினார்.

இக்கூற்றை தொலைவிலிருந்த இயேசு பெருமான் உணர்ந்து கொண்டார். அவர்களைப் பார்த்த இயேசு, "மருத்துவம் யாருக்குத் தேவைப்படும்? நோயாளிகளுக்கா அல்லது நோயற்றவர்களுக்கா?" என்றார். "நேர்மை வழி நடப்பவர்களுக்கு எதுவித போதனையும் தேவைப்படாது. பாவிகளையே நான் அழைக்கிறேன். அவர்களை மனம் மாற்றி நல்வழிப்படுத்துவதே எனது குறிக்கோள்!" என்று விளக்கம் அளித்தார்.

பரிசேயர்கள் தொடர்ந்து பல வினாக்களைத் தொடுத்தனர். அவர்களுக்கு வேண்டிய விளக்கங்களை இயேசு அளித்தார்.

இவ்வாறு ஒவ்வொரு ஊராகச் சென்று நற்போதனைகளை உரைத்த வண்ணமிருந்த இயேசு பெருமானை தேனுண்ட வண்டுபோல் மக்கள் விடாது தொடர்ந்த வண்ணமே இருந்தனர்.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு இயேசுவும் சீடர்களும் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து வந்த மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏறத்தாழ ஐயாயிரம் பேர் வரை இயேசுவைப் பின்பற்றிச் சென்றனர். போகும் வழியில் உண்ண உணவோ குடிக்கத் தண்ணீரோ பெற முடியாத நிலை. மக்கள் பசி தாகத்தால் துவண்டனர். இத்தனை பேருக்கும் உணவும் தண்ணீரும் கொடுக்க முடியாத நிலையில் சீடர்கள் தவித்தனர். அப்போதுதான் அப்புதுமை இடம்பெற்றது.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை [பு.ஆ] 02 விடை:** ☛ கிழக்கேயிருந்து.

**பரிசு பெறுவோர்:**

1. **ற.சர்றாஜ்,** அக்கரைச் சோனை, மூதூர்-01.
2. **சக்கிரியாஸ் ரீட்டா,** ஹபொரஸ்ட் தோட்டம், கந்தபொல.
3. **செல்வி கே.ஜெயலட்சுமி,** 76/9, மலபார் வீதி, கம்பளை.
4. **எஸ்.எஸ்தர்,** கம்புல்பிட்டி எஸ்டேட், கிரீன்வூட் டிவிசன், நாவலபிட்டிய.
5. **செல்வன் பத்மராஜா சலோஜன்,** 21/5, எல்லை வீதி, மட்டக்களப்பு.

**திருமறை [பு.ஆ] 05 வினா :-** மருத்துவம் நோயாளிக்குத் தேவையா, நோயற்றவருக்குத் தேவையா?. இவ்வினாவைக் கேட்டவர் யார்?


ஜூன்.26 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.05—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : வீரவிதான |
| பெற்றோர் | : திரு. பொதி விவாதம்<br>திருமதி. போர் பிரசாரம் |
| தொழில் | : பேரினவாதம் வளர்த்தல் |
| உபதொழில் | : தொண்டாவை தூற்றுதல் |
| விரும்புவது | : ஒரே இனம்<br>ஒரே மதம் |
| வெறுப்பது | : பிற இனங்கள்<br>பிற மதங்கள் |
| பொழுது போக்கு | : ஆர்ப்பாட்டம் நடத்துதல்<br>கொடிகளைக் கிழித்தல் |
| சாதனை | : குறுகிய காலத்தில்<br>கிடு கிடு வளர்ச்சி! |
| இலட்சியம் | : தமிழ் பேசும் மக்களை<br>தனித்துவம் இழக்க வைப்பது! |
| நண்பர்கள் | : ஆளும் தரப்பிலும்<br>இருக்கிறார்கள்.<br>எதிர்த் தரப்பிலும்<br>இருக்கிறார்கள். |
| எதிரிகள் | : தன்மானமுள்ள<br>தமிழ் பேசும் மக்கள்<br>அனைவரும்! |





## நன்றி நவிலல்

எமது அன்பிற்கினிய தலைவர் அவர்கள் இந்த ஆண்டில் வெளியிடும் ஆயிரமாவது அறிக்கையை வெற்றி விழாவாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| ஜனாதிபதிக்கு | - | 699 |
| அமைச்சர்களுக்கு | - | 211 |
| பொதுவாக | - | 90 |
| | | 1000 |

ஆண்டு மலர்ந்து ஆறு மாதத்துக்குள் ஆயிரம் அறிக்கைவிட்ட வரலாறு உலகில் வேறெங்கும் கிடையாது.

இந்த அரிய சாதனைக்கு தங்கள் பத்திரிகைகளில் வானொலிகளில், தொலைக் காட்சிகளில் உரிய இடம் தந்த செய்தியாளர்கள் அனைவருக்கும் நன்றி. நன்றி. நன்றி.




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# அவசரம்



இம்முறை உலகக் கிண்ண லீக் போட்டிகளிலும், 'சூப்பர் சிக்ஸ்' போட்டிகளிலும் சச்சின் சற்று தடுமாறிப் போனார். இரண்டு போட்டிகள் தவிர ஏனையவற்றில் வழக்கமான அதிரடி ஆட்டத்தை காண்பிக்கவில்லை.

கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் அபாரம். தந்தையை இழந்த சோகத்தின் மத்தியிலும் தூள் கிளப்பியது ஆச்சரியப் படவைத்தது.

பாகிஸ்தானுக்கு எதிராக சூப்பர் சிக்ஸில் அரைச் சதம் போடும் வாய்ப்பை தவறவிட்டார். மோசமான பந்தொன்றை அடிக்க அவசரப்பட்டதால் ஆட்டமிழந்தார்.

நிலைத்துநின்று பொறுமையாக ஆடினால் டெண்டுல்கரை தூக்குவது கடினம். உலகக் கோப்பை போட்டிகளுக்கு முன்னர் 211 போட்டிகளில் ஆடி 7801 ஓட்டங்களை மலைபோல குவித்துள்ளார். 21 சதங்கள், சராசரி 42.40 பந்து வீச்சில் 78 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

26 வயதான டெண்டுல்கர் சகலதுறை ஆட்டக்காரர். கப்டன் பதவி பறிபோன பின்னும் அணிக்காக உயிரைக் கொடுத்து விளையாடுபவர் என்று பாராட்டப்படுகிறார்.

பந்துவீச்சாளர்களை களத்தில் அசாருதீன் தவறும்போதெல்லாம் டெண்டுல்கரும் ஜடேஜாவுமே உற்சாகமூட்டுகின்றனர்.

தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொள்ள சென்ற டெண்டுல்கரிடம் தாயார் கேட்ட கேள்வி: "நீ ஏன் இப்போது வந்தாய்?" என்பதுதான்.

அதனால்தான் இறுதிக்கிரியை முடிந்ததும் டெண்டுல்கர் கிளம்பினார். கென்யாவுக்கு எதிராக பிளந்து கட்டினார்.

அடுத்த உலகக் கோப்பைப் போட்டியிலும் டெண்டுல்கரின் ஆட்டத்தை இரசிக்க முடியும். பல சாதனைகளை கடக்கப்போகிறார் இந்த இளம்புயல்.



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# மூடுபனி



மூடுபனி என்பது இதுதான். ரசியாவில் உள்ள வரலாற்றுப் பெருமைமிக்க சென்பேசில் தேவாலயத்தை பனி தழுவிப் படர்ந்துள்ளது. இந்த அரிய காட்சியை படம் பிடிக்க உல்லாசப்பயணிகள் குடை பிடித்து நிற்கின்றனர். கொட்டும் பனியில் இருந்து குடை பிடித்து தப்ப முடியாதுதான். ஆனால் இவர்கள் குடை பிடிப்பது கமராவில் பனிக்கட்டி விழாது இருப்பதற்காகவே.

வெண்பட்டுத் துணியால் போர்த்தது போல மூடுபனி எத்தனை அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

# உறுதி



இம்முறை உலகக்கோப்பை போட்டியில் சிம்பாப்வே அணி தனி முத்திரை பதித்திருக்கிறது.

சிம்பாப்வேயும், கென்யாவும் ஆபிரிக்க கண்ட நாடுகள். சிம்பாப்வே டெஸ்ட் அந்தஸ்தும் பெற்றுவிட்டது. கென்யா பெறவில்லை.

ரொடீஷியா என்று முன்னர் அழைக்கப்பட்ட நாடுதான் சிம்பாப்வே.

இந்தியாவை தோற்கடித்தது மட்டுமன்றி, பாகிஸ்தான் மண்ணிலேயே பாகிஸ்தான் அணியை மண் கவ்வ வைத்து சிம்பாப்வே.

உலகக் கிண்ணப் போட்டியில் இம்முறை தென்னாபிரிக்க அணி வையே படுதோல்வி காணவைத்து சாதனை படைத்துள்ளது. இந்தியாவையும் லீக் போட்டியில் தோற்கடித்தது.

நீல் ஜோன்சன் சிம்பாப்வேயின் கபில் தேவ் என்று அழைக்கப்படுகிறார். கப்டன் கேம்பல் இலங்கை அணி கப்டன் ரணதுங்காவுடன் ஒப்பிடப்படுகிறார்.

அண்டி, பிரேண்ட் ப்ளவர் சகோதரர்கள் துடுப்பாட்டத்தில் கலக்கல்காரர்கள். ஆனாலும் உ.கி.போட்டிகளில் இதுவரை நீல் ஜோன்சன்தான் ராஜாங்கம் நடத்தி இருக்கிறார். சூப்பர் சிக்ஸில் பாகிஸ்தானுக்கு எதிராக அரைச்சதம், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதம் போட்டும் ஆட்டமிழக்காது என்று பீடு நடை போட்டுக் காட்டினார்.

சூப்பர் சிக்ஸையும் கடந்து அரை இறுதியாட்டத்துக்குள் நுழைந்திருப்பதே பெரும் வெற்றிதான்.




கனடாவில் வசிக்கும் கட்டப்பிராயைச் சேர்ந்த திரு.திருமதி சிற்குமார்-அருந்ததி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்ஜய் தனது முதலாவது பிறந்தநாளை 15.06.1999 அன்று ரொரோன்ரோவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கனடாவில் வசிக்கும் காந்தன் பெரியப்பா, ஸ்ரீ பெரியப்பா குடும்பத்தினர், ஜெயா அத்தை, விஜயா அத்தை, கண்ணா அத்தை குடும்பத்தினர். சந்திரன் அப்பப்பா குடும்பம், பிரான்சில் வசிக்கும் பவா அத்தை குடும்பம், ஜெர்மனியில் வசிக்கும் நரேன் மாமா, சிவா பெரியப்பா இலங்கையில் வசிக்கும் இராஜரட்னம் மாமா குடும்பம், கீதா பெரியம்மா, மீனா பெரியம்மா, வதா சித்தி குடும்பம், குணம் மாமா குடும்பம் மற்றும் உற்றார் உறவினர் யாவரும் முருகன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தினார்கள். தகவல்: மு. குகேஸ்வரன்-கொழும்பு-13.

# முதற்படி



# வேகம்



23 வயது பாகிஸ்தானிய புயல் வேகப் பந்துவீச்சாளர் சோஹைப் அக்தர். உலகிலேயே அதிவேக பந்து வீச்சாளர் இவர்தான். குறுகிய காலத்தில் அசுர வளர்ச்சி, அபார புகழ்.

உ.கோ.போ.முன்பாக 9 போட்டிகளில் மட்டும் ஆடி 12 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார்.

தென்னாசிய வீரர் ஒருவர் அதிவேக பந்துவீச்சாளராக இருப்பது மேலை நாட்டு கிரிக்கெட் ஜாம்பவான்களுக்கு பொறுக்கவில்லை. புகார்களை கிளப்பி திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியிலும் அக்தர் பல விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார். சூப்பர் சிக்ஸில் இந்தியாவுக்கு தாராளமாக ஓட்டங்களை கொடுத்தார். எனினும் அடுத்து சிம்பாப்வேயுடன் உஷாராகிவிட்டார். பாகிஸ்தானுக்கு மற்றுமொரு அபார பந்து வீச்சாளர்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானை நெத்தியடியாக தோற்கடித்து ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது பங்களாதேஷ் அணி. ஸ்கொட்லாந்து அணியையும் வெற்றி கொண்டனர்.

கால்பந்தாட்ட வெறியர்கள் நிறைந்த பங்களாதேஷில் கிரிக்கெட் இப்போதுதான் பிரபலமாகி வருகிறது.

மேற்கிந்திய தீவின் முன்னாள் துவக்க ஆட்டக்காரரான கிரீனிட்ஜ் பயிற்சியாளராக இருக்கிறார். அமீனுல் இஸ்லாம் கப்டன். இவர் உ.கி.போ.முன்பு 26 போட்டிகளில் ஆடி 568 ஓட்டங்கள் குவித்துள்ளார். 5 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

பாகிஸ்தானை வென்றதால் பங்களாதேஷில் ராஜமரியாதை. ஒவ்வொரு வீரர்களுக்கும் ஏராளம் பரிசுகள். கிட்டத்தட்ட உலகக் கோப்பையை வென்ற மாதிரியான மகிழ்ச்சி.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 79, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.